ஓம் பரப்ரஹ்மணே நம: 80-பக்கங்கள்.

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED.

கமலம்-5.	சென்னை: பிரமோதூதஹூ பங்குனிமீ 1உ	இதழ்-60.
Vol. 5.	1931-மஹூ மார்ச்சுமீ 16உ	No. 60.

ஆநந்த  தர்சனம்

" போங்கலை யாழிதாண்டிப் பொருப்புகள் கடந்தோயாம
லங்குமிங் குந்திரிந்தே யழிந்து முடலைக்காப்பா
யெங்கணு முள்ளோன்றாளுன் னிருக்கையி னிருந்துபோற்றிப்
பங்கமில் சுகம்பெற்றுய்யப் பாரமேன் பகராய்நெஞ்சே. "

[மிகுதியான அலைகளையுடைய சமுத்திரத்தைக் கடந்தும், மலைகளின் மேலேறிச் சென்றும், எப்பொழுதும் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தும் நிலையில்லாத இந்தத் தேகத்தைக் காப்பாற்றுவாய். எங்கும் நிறைந்திருக்கும் கடவுளுடைய பாதார விந்தத்தை நாம் இருக்குமிடத்திலேயே யிருந்து துதித்து, யாதொரு குறைவு மில்லாத நித்தியானந்த சுகத்தை யடைந்து பிழைப்பது—நெஞ்சமே! உனக்கு என்ன வருத்தமான காரியமோ?—அதைச் சொல்வா யென்க.]

" அய்யனை யனுதினமும் நினை " ஒவ்வொரு நாளும் ஈசுவரனைத் தியானிக்க வேண்டுமென்பது இதன் பொருள். ஸ்வயம் பிரகாசப் பொருளாகிய பகவானையே மனம் நாடினால் பரிசுத்தமாய்விடும். அதனால் கெட்ட எண்ணங்கள் இருதயத்தில் நுழையாமல் வெளியே போய்விடும். ஸகல காரியங்

பெண்கள் ஒருவருக் கொருவர் சண்டையிட்டுக் கொள்வது வீட்டுக்காரனுக்கு லாபமாகிறது. உப்பு, மிளகு, பருப்பு இரவல் கேட்க வருவது இந்தச் சண்டையால் நின்று விடுகிறது. அது வீட்டுக்காரனுக்கு ஒரு லாபந்தானே.

களும் வித்தியாஸி நித்தியமான ஆநந்தம் ஜெனிக்கும். ஆதலின், எல்லா மதஸ்தர்களும் ஈசுவர ஸ்துதியைச் செய்யவேண்டுமென்று வற்புறுத்துகின்றனர். நமது மத கிரந்தங்களைப் படித்தால் பகவானுடைய அவதாரங்களும் ஸத்குண விசேஷங்களும் நன்றாய்த் தெரியவரும். துஷ்டர்களை சிக்ஷித்து சிஷ்யர்களை இரக்ஷிப்பதற்காக அடிக்கடி பூலோகத்தில் அவதாரம் செய்யும் ஈசனைப் போற்றாத ஜென்மமிருந்தென்ன பயன்? ஆகவே, பிரதிதினமும் பரமனைப் போற்றி முடிவில் பேரானந்த சுகவாழ்வைப் பெறக்கடவோம்.

ஃ

"இல்லறமே நல்லறம்" கோட்டைக்குள்ளிருந்து வெளியே யிருக்கும் சத்துருக்களோடு சண்டைசெய்யும் வீரனே புத்திமான். அதுபோல் ஸம்சாரியாயிருந்து ஸ்வாமியைப் பஜிக்கிறவனே அறிவாளி. குடும்பத்தைத் துறந்து சந்யாசியாகி பகவானை பஜிப்பவன் கோட்டையைவிட்டு வெளியே வந்து எதிரிகளை யெதிர்ப்பவனை யொப்பாவான். கிருகஸ்தாசிரமி ஒருவேளை பாபம் செய்தாலும் பிராயச்சித்தத்தால் அந்த பாபத்தைப் போக்கடித்துக் கொள்ளலாம். பிராயச்சித்தமானது ஒரு கோட்டையைப்போல் அவனை பாபமாகிய எதிரியினின்றும் காப்பாற்றுகிறது. சந்யாசிகளுக்கு எவ்விதமான பிராயச்சித்தமும் இல்லை. நெருப்பாற்றில் போட்டிருக்கும் மயிர்ப்பாலத்தில் செல்லுகிறவனைப்போல் சந்யாசிகள் அதிஜாக்கிரதையோடு ஸ்வதர்மத்தைச் செய்யவேண்டும்.

ஃ

"மனம் எப்படி குணம் அப்படி" ஒரு காரியத்தைச் செய்து முடிப்போமென்ற தைரியமிருந்தால் அது கட்டாயமாய் நிறைவேறும். அதைரியப்படுவோன் எதையும் ஸாதிக்க மாட்டான். நம்மைப் பாபியென்றும், பல ஹீனனென்றும் சொல்லிக்கொள்வதே பெரும் பிசகென்று ஸ்வாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார். அவ்வசனம் உண்மைதானென்று ஆங்கிலேய தத்துவ சாஸ்திரிகளும் கூறுகின்றனர். ஃ

"துளசியின் மகிமை" துளசிச் செடிகளுக்கு மத்தியில் நெடுநாட்களுக்கு முன் இறந்த சவமொன்று கண்டெடுக்கப்பட்டது. அது அழுகவேயில்லை. சவத்தை அழுகவைக்காமல் காக்கும் குணம் துளசிக்கு உண்டோவென்பதைப் பரீக்ஷிக்க ஒரு கோழியைக்கொன்று அச்செடிகளுக்கு இடையில் போட்டுப் பார்த்தனர். இறந்த கோழியின்மீது எவ்வித துர்காற்றமும் வீசவில்லை; அதன் உடலும் அழுகவில்லை. அதைக்கொண்டு சவத்தை அழுகாமற் பாதுகாக்கும் குணம் துளசிக்கு உண்டென்று கண்டறிந்தனர். நம் முன்னோர்களின் பரமோத்கிருஷ்டமான காரியங்களை அன்னிய மதஸ்தர்கள் உண்மையை யுணராமல் கேவலம் செய்யினும், அவற்றை நாம் லக்ஷ்யம் செய்யாதிருக்கக் கடவோம்.

ஃ

"மகாத்மாக்களின் மகிமை" மகான்கள் எந்த மதத்திலும் இருக்கின்றார்கள். உலகத்தாரிடமிருந்து அவர்களுக்கு எதுவும் தேவையில்லை. தம்மால் இயன்றவரை உதவிசெய்து அம்மட்டில் விலகிக்கொள்வர். ஒரு தினம் ஒரு பெரியவர் தமது சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கையில்

பலகணி வழியாய்த் தெருவில் செல்வோரையும், அவர்களது அவசரமான வேகத்து நடைகளையும் கவனிப்பின் அது சினிமா காட்சிபோல் தோன்றும்.

ஒரு கிழவி அங்குற்று நெடுநாட்களாகத் தனது வேலைக்காரனைக் காணவில்லை யென்று முறையிட்டாள். அதற்குப் பெரியவர் உன்னிடம் ஏதாவது இருந்தால் கொடு என்று கேட்டு அவள் தந்த இரண்டு பைசாவை அருகிலிருந்த பிச்சைக்காரனிடம் அளித்துவிட்டு கடவுளை நோக்கித் துதித்தார். உடனே காணமற்போன வேலைக்காரன் அங்கு தோன்றி, தான் ஒரு மாதப்பிரயாணத்திற்கு அப்பாலுள்ள ஊருக்குச்சென்று வேறொருவரிடம் வேலைக்கு அமர்ந்துவிட்டதாயும், அவர் ஏவியபடி தான் கடைக்குச் சாமான் வாங்கச் சென்று திரும்பிவருகையில் ஒரு பெரும் புயல்காற்றில் சிக்கித் தன்னை மறந்துவிட, இப்போது இங்குவந்து நிற்பதாகவும் கூறினான். அதைக்கேட்டு அனைவரும் வியப்புற்றனர். பெரியவர் அவனை அந்தக் கிழவியுடன் சேர்த்து அனுப்பினார். இவ்விதமே இன்னொரு பெரியவர் காட்டிற்குச் சென்று விறகு வெட்டித் தூக்கிக்கொண்டு அதை விற்கக் கடைவீதி வருகையில் அவர்மீது இரக்கம் கொண்ட ஒருவர் ஒரு பைப்பணத்தை அவரிடம் தந்து இதனால் உமது கஷ்டம் நிவர்த்தியாகட்டுமென்றார். உடனே விறகுதலையரான பெரியவர் புன்னகையுடன் கையைத்தூக்கிப் பகவானைப் பிரார்த்தித்தார். தக்ஷணமே அவர் தலையிலிருந்த விறகுக்கட்டு முழுதும் பத்தரைமாற்றுத் தங்கமாய்விட்டது. இதைக் கண்டதும் பணப்பை தர வந்தவர் வெட்கிப்போனார். பின்பு பெரியவர் மறுபடியும் பகவானை வேண்ட முன்போலவே விறகுக் கட்டாகிவிட்டது. இதுவன்றோ உண்மையான ரசவாதம்? மகான்கள் இவ்வற்புதச் செயல்களை ஒருபக்கம் ஒதுக்கிவிட்டு ஸர்வ ஸாமான்னியர்கள்போல மறைந்து வசிக்கின்றனர். ஃ

“நாள் செய்வது நல்லோர் செய்யார்” என்பது ஓர் சிறந்த பழமொழி. இதை நன்றாக ஆராய்ந்து பார்ப்பது நம் கடமை. நாள், நல்லோர் ஆகிய இரண்டில் நாளை மாத்திரம் உயர்வாகக் கூறுவானேன்? நல்லோர்கள் எப்போதும் நன்மையான காரியங்களையே செய்வார்கள். நாள் என்ன செய்யும்? நன்மையான காரியங்களை நல்லோர் செய்வதால் உலகத்தாருக்கு சுகமுண்டாகிறது. எது நன்மையோ அது சுகத்தைத் தருகிறது. ஆதலின், நல்லோரால் நாம் சுகத்தை யடைகிறோமென்பது பெறப்பட்டது. நாள் என்ன சுகத்தைத் தருகிறது? அது நல்லோரால் கிடைக்கக்கூடிய சுகத்தைவிட சிறந்ததான ஓர் சுகத்தைத் தந்தாலன்றோ “நாள் செய்வது நல்லோர் செய்யார்” என்னும் பழமொழி உண்மையாகும்? ஃ

“நாளுக்குநாள் நகர்ந்தது காணம்மானை” என்பதுபோல நாளானது தீமையான காரியங்களாலுண்டாகும் துக்கத்தைச் சிறுகச்சிறுக நகர்த்தி மறக்கடிக்கும். உதாரணம்: ஒரு மனிதன் தெருவில் நின்று நம்மை வாயில் வந்தபடி திட்டுகிறான். அப்போது நமக்கு உண்டாகும் கோபத்துக்கு அளவில்லை. மனதிற்கும் மகா ஸங்கடமாயிருக்கிறது. அவனை என்ன செய்யலாமென்று யோசிக்கிறோம். எவ்விதமான சிக்ஷையை அவனுக்கு விதிக்கலாமென்று ஆலோசிக்கிறோம். ஒருநாள், இரண்டுநாள், மூன்றுநாள் ஆகிறது. நம்முடைய கோபம் தணிகிறது. நம்மை வைதவனை நாம் தண்டிக்கவேண்டுமென்று எண்ணிய எண்ணம் குறைகிறது. நாள் செல்லச்செல்ல குற்றம்

ஒருவன் வயதில் சிறியவனாயிருந்தாலும் வயது முதிர்ந்த கிழவர்களுக்கும் புத்திகூற வல்லவனாக இருக்கலாம்.

செய்தவன்மேல் நாம் கொண்ட கோபம் படிப்படியாகத் தணிந்து நமக்கு சாந்தமென்னும் நற்குணமுண்டாகிறது. நல்லோர் இந்நற்குணத்தை யனு ஸரிக்கும்படி நமக்குப் போதிப்பதைவிட, நாள் போதிப்பது பலமாய் ஊன்று கிறது. ஆதலின், "நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்று பெரியோர் கூறுகின்றனர். இந்தப் பழமொழிக்கு இன்னொரு அர்த்தமுண்டென்று சிலர் கூறுவர். அதாவது, ஜோதிஷ சாஸ்திர ரீதியாக ஓர் நல்ல நாளில் காரி யத்தை யாரம்பித்தால் அது சிறிதேனும் இடையூறின்றி நிறைவேறுமென் பதே. நல்லோர்கள் ஸமீபத்திலிருந்தால் காரியத்தை இடைவிடாது செய்து முடிக்கும்படி தூண்டுவார்கள். ஆனால், அதன் பலனையடையும்படி அவர்கள் செய்ய முடியாது. நல்ல நாளானது தொடங்கிய காரியத்தைக் குறைவின்றி நிறைவேற்றி அக்காரியத்தாலுண்டாகும் பலனை அடையச் செய்யும். ஆத லின் "நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்ற பழமொழி வழங்குகிற தாம். இதுவும் ஒப்புக்கொள்ளத் தக்கதே.

ஃ

"சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" சோம்பலால் பலவித பாப சிந் தனைகள் உண்டாகுமென்று ஒவ்வொரு வர்ணத்தாரும் தினந்தோறும் செய்ய வேண்டிய கர்மங்களை முன்னோர்களாகிய ரிஷிகள் சாஸ்திரங்களில் கூறியிருக் கின்றனர். பாரத்துவாஜர் என்னும் மகரிஷி பாகீரதி நதியைக்கண்டு சிஷ்யர் களை நோக்கி, "சிஷ்யர்காள், இந்த நதியின் ஜலம் மகத்துக்களின் ஹிருதயம் போல் வெகு தெளிவாயிருக்கிறது; இங்கே சில நாட்கள் தங்கியிருக்கலாம்"— என்றார். இப்படி சிஷ்யர்களைப் பின்னோடு அழைத்துப்போய் அவர்கட்கு மகான்களுடைய பெருமையைக்கூறி நல்ல நதிகளில் ஸ்நாநம் செய்யும்படி யும், அந்நதிதீரங்களி லுட்கார்ந்து ஈசுவரனை ஸ்தோத்திரம் செய்யும்படியும் கற்பிக்கும் ஆசான்கள் இக்காலத்தி லிருக்கிறார்களா? பணம், பிராணன், மானம், ஆகிய மூன்றையும்விட அதிகமானது மதம். அதைப் பெரிய ஆஸ்தி யாக மதியாதவன் பரம தரித்திரனென்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஃ

"ஆத்ம ரக்ஷக வழி" எங்குள்ளதென்று பார். அவ்வழியிலேயே தொடர்ந்து செல்வதில் தைரியம் விடாதே. இன்னும் காலமிருக்கிறது; அதி கம் இல்லாவிடினும் ஒருமணி நேரமாவது இருக்கின்றது. ஏன் தாமதம்? சுகிருதமான விஷயத்தைப்பற்றிய தீர்மானத்தை அநுஷ்டானத்திற்கு உடனே கொண்டுவா இதுவே நல்ல சமயம். "நான் வேலைசெய்ய இது உற்றகாலம்;—அசுத்த மனதுடனே போர் புரிய இதுவே நல்ல நேரம்;— நான் நல்ல கதியடையவும், நல்லவனாகவும் இதுவே சரியான தருணம்" என நீ நினை. துன்பத்திற்குள்ளாகி மனம் நோகும் காலம்தான் ஞான மகு டம் தரித்தலான முயற்சிக்கு உற்ற சமயம் என அறி. மழையிலும் வெயிலி லும் வருந்தினாற்றான், கடைசியில் சுகமான ஸ்தானம் பெறலாம். உன்னைக்

கேட்டபடி சோப்பு வாங்கித் தா, அதைத் துணிகளுக்குப் போட்டுத் துவைத்ததில் அந்த ஜலம் வைதிகர் மீதுபட, அதில் சண்டை நேர, அது ஒரு பெருங் கலகம். சோப் வாங்கா திருந்தால் எந்த சண்டையுமில்லை. இது வாங்குமுன் தெரியவில்லையே ஈசா!

இலேசப்படுத்திக் கொண்டுதான் உன் பாபத்தைத் தொலைக்க வல்லவனாக வேண்டும். ஃ

"பூஜை மூவகைப்படும்" ஸாத்வீக பூஜையானது பகவானை அந்தக்கரணத்திலிருந்து சிரத்தையோடு பூஜிப்பது. இதனால் பரமாத்வாவினுடைய கிருபையுண்டாகிறது. இராஜஸ பூஜையாவது யாகயக்ஞங்களால் பல தேவதைகளை யாராதிப்பது. இதனால் அந்தந்த தேவதைகளுடைய அனுக்கிரகமாகிய ஸ்வர்க்காதி போகங்களே கிடைக்கும். தாமஸபூஜையென்பது சிவபரிசாரர்களாகிய பூத பிரேத பைசாசங்களைத் தியானிப்பது. இதனால் பூஜை செய்கிறவன் பூதமாகவும் பிசாசாகவும் ஆகிறான். ஆகவே, மூன்றுவித பூஜைகளிலும் ஸாத்விக பூஜையே சிறந்ததென்போம். முதலாவது பூஜையால் சிரேஷ்டமான சுகமும், இரண்டாவது பூஜையால் அற்பசுகமும், மூன்றாவது பூஜையால் மகா துக்கமும் அதியற்பசுகமும் உண்டாகும்.

ஃ

"முக்குணங்கள்" தாமஸ குணமுள்ளவன் ஆறிப்போன சாதத்தையும், அஸங்கிய உணவையும், ஸாரமற்ற வஸ்துக்களையும், துர்வாஸனையையும் விரும்புவான். கசப்பு, புளிப்பு, உவர்ப்பு முதலிய பண்டங்களை அதிகமாய்த் தின்பவன் ராஜஸகுணத்தான். கசப்பு முதலியவற்றை அதிகமாகச் சாப்பிடக்கூடாதென்பது கருத்து. ஆயுள், உத்ஸாகம், ஆரோக்கியம், பலம், சுகம், பிரீதி இவற்றை விருத்தி செய்யக்கூடிய ரஸமுள்ளவை, பசையுள்ளவை, மனதிற் கின்பமுள்ளவை ஆகிய இவ்வுத்தம உணவுகளை ஸாத்வீக குணமுள்ளவனே விரும்புவான். ஆதலின், ஆகாராதிகளாலேயே குணத்தைக் கண்டுபிடிக்கக்கூடும். சாகபக்ஷணியான யானைக்கும், மாம்ஸ பக்ஷணியான புலிக்கும் குணத்தில் எவ்வளவு பேதம்? ஃ

IV

பகவத் பிரார்த்தனை.

1. சர்வக்கியனாய், சர்வசக்தனாய், சர்வாந்தரியாமியாய், நிர்மலாகாரனாய், ஆதி மத்தியாந்த ரஹிதனாய், அநந்த கல்யாணகுண விசிதனாய், அநிர்வாச்சியனாய், ஆநந்தஸ்வரூபனுமாய் விளங்கும் எமது அப்பனே! அய்யனே! உன்னைத் தியானிப்போமாக.

2. புத்திமான்கள் எந்த பரமாத்மாவைத் தொழுது தமது ஹிருதயத்தில் இருபற்றுகளையும்விட்டு, ஆநந்திதராய் ஜ்வலிக்கின்றார்களோ அந்த பாப நிவாரகனும், சுகதாயியுமாயிருக்கிற பரமாத்மனே! உன்னை ஆசிரயிப்போமாக.

3. தபங்கள் செய்தும், தானங்கள் இயற்றியும், ஜபங்கள் பண்ணியும் அதின் பலத்தை எவருக்கு அற்பிதம் செய்யாவிடில் மஹத்தான தோஷங்களும் விபத்துகளும் சம்பவிக்குமோ அந்தப் பாபநிவாரகனும், சுகதாயியும் ஆகிய அரிய மஹாபுருஷனே! நின்னையன்றி உனது பாதபத்மங்கட்கு யாவற்றையும் அர்ப்பிதம் செய்வோமாக.

4. ஓ! அற்புத புருஷா! எதை அடைந்தபின் பிறப்பையடையார்களோ அதுவன்றோ நின் பரமபதம்; உன்னிடத்தில் ஸர்வபூதங்களும் தங்கு

ஒருவன் சாதாரணமாய் நடக்க அவனுடன் தொடர்ந்து சரியாக நடந்து போவதற்கு இன்னொருவன் வேகத்துடன் நடக்கவேண்டி வருகிறது.

கின்றன. ஓ! கர்த்தனே! வேறு பற்றில்லாத பக்தியோடும் நின்னை அடைவோமாக.

5. ஜனன மரணங்களற்ற நின்னை இவ்வுலகத்தில் யார்தான் அறியக்கூடும்? ஆதியந்த ரஹிதனுகிய உன்னை யார் இப்போது அறிய விரும்புகின்றனரோ, அவர்கள் அந்திய காலத்திலும் பக்தியுள்ள மனதோடும் நின்னை வந்தடைவர். ஆகையால், ஓ! சர்வ தயாபரமூர்த்தி! உன்னையன்றி யாரைச் சரணமடைவோம்? உமது கருணுகிரணங்கள் எமது அஞ்ஞான இருளையகற்றி, நின் பாதாரவிந்தம் பற்றும்படி வழிகாட்டி, எம்மைக் கரையேற்றச் செய்வனவாய் விளங்குவதாக. உமது பாதம் துணை. ஓம் தத்ஸத்.

இருவர் பாடும் ஒன்றே.

அறுசுவையுடன் அன்னம் தயாரிப்பதும், அழகுபெற வியாசம் வரைவதும் ஒன்றே. சமைத்ததைப் பிறர் மனம் அறிந்து பரிமாறுகிற பக்குவமும், எழுதியதின் அச்சுப்புருபைத் திருத்தும் ஆற்றலும் ஒன்றே. சமைத்தவரே பரிமாறுவது மேல். எழுதியவரே அதன் அச்சுப் புருபைத் திருத்துவது சிலாக்கியம். எழுதியவருக்கும் சமைத்தவருக்குமே தங்களின் பாடும் அருமையும் தெரியும். ஆயினும், இவ்விருவரும் பிறரைக்கேட்டே தாங்கள் எழுதியதையும் சமைத்ததையும் நன்றுயிருக்கின்றதா அல்லவா என்பதை அறிந்துகொள்ள வேண்டியவர்களாகிறுர்கள். அதிலுள்ள தவறுகளைத் தாங்களே அறிய முடிகிறதில்லை. குழம்பு நன்றுயிருக்கிறதா என்று சமைத்தவர் வெகுபிரீதியோடும் புசிப்பவரிடம் விசாரிக்கிறுர். அவ்விதமே, நான் எழுதியது நன்றுயிருக்கிறதா என்று அதைப் படித்தவரிடம் கேட்கும்படியாக நேரிடுகிறது! இதுவும் ஒரு விநோதமே.

நமது நிருப நேயர்கட்கு அறிக்கை.

☞ வியாசங்கள், மதிப்புரைக்கு நூல்கள் முதலியன யாவும் ஸ்ரீரங்கத்திற்குப் பத்திராசிரியருக்கே நேராக அனுப்புக. வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. ☞ ஆசிரியர்—“அமிர்த குணபோதினி”
ஸ்ரீரங்க நிலயம், 617, மேலடையவளஞ்சான் தெரு, ஸ்ரீரங்கம்.

☞ “அமிர்த குணபோதினி”க்குச் சந்தாதாராதல், சந்தா அனுப்புதல், பத்திரிகையின் சார்பான விவரங்கள் விரும்புதல், விளம்பரம் செய்தல் முதலிய நிர்வாக விஷயங்கட்கு தி. இராஜகோபால் முதலியார், “அமிர்த குணபோதினி” ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை, என்று எழுதுக.

நமது சந்தா நேயர்களுக்கு
விசேஷ விஞ்ஞாபனம்.

"அமிர்த குணபோதினி"யின் ஆறாவது ஆண்டு.

ஆறாம் வருடசந்தாவை மணியாடர் மூலமாகவே செலுத்துங்கள்.

வி. பி. அனுப்புகிற சிரமத்தை உண்டாக்காமல் யாவரும் இந்தப் பங்குனி மாத ஸஞ்சிகையைப் பெற்றவுடன் ஆறாம் வருட சந்தாவை மணியாடர் செய்து விடுங்கள்.

ஒரே ரூபாய் சந்தாவில் 80-பக்கங்களுடன் விளங்கும் அனுபவ ஞான "அமிர்த குணபோதினி"யை ஆறாம் ஆண்டிலும் ஆதரியுங்கள்.

சேந்தமிழ்ச் செல்வர்காள் !

உங்களின் ஆசீர்வாதத்தால் நமது "அமிர்த குணபோதினி"க்கு இந்தப் பங்குனிமாத ஸஞ்சிகையுடன் ஐந்து வருடங்கள் பூர்த்தியாயின. ஆரம்பத்திலேயே 48-பக்கங்களுடன் தொடங்கப்பெற்ற "அமிர்த குணபோதினி" ஆண்டுகள்தோறும் அதிகமான பக்கங்களுக்கு உயர்ந்து இப்பொழுது 80-பக்கங்களுடன் பிரசுரமாகி வருகின்றது. இதிலிருந்து அதின் அதிதீவிர விருத்தியும், சந்தாதார்களுக்கு அதன்மேலுள்ள அபிமானமும் நன்கு விளங்கும். "அமிர்த குணபோதினி" அநுபவத்திற்கு—அநுபவப் பத்திரிகையாகவும், விகடத்திற்கு—இணையற்ற விகடப் பத்திரிகையாகவும், நீதிப் பத்திரிகையாகவும் ஜ்வலிக்கின்றது.

நீங்கள் செலுத்தும் ஒரு ரூபாய் சந்தாவில் 3-அணா தபாற் செலவுக்குப் போக, 13—அணாவுக்கு 960-பக்கங்களுள்ள "அமிர்த குணபோதினி" கிடைக்கின்றது. அந்த 960-பக்கங்களும் 960 பொற்றகடுகளன்றோ? பத்திராசிரியர் மாதந்தோறும் எத்தனையோ விஷயங்களை எழுதிவர, நிருப நேயர்களும் ஏராளமான வியாசங்களை உபகரித்திட, இவை யாவும் வருட முடிவில் ஒன்றுகூடி 960-பக்கங்களுள்ள ஒரு பெரிய கலாஸமுத்திரமாய் விடுகின்றது. குடும்பத்திற்கு இது ஓர் அரிய பொக்கிஷமன்றோ? ஆதலின் ஆறாவது வருட சந்தாவை மணியாடரில் செலுத்திப் புது வருஷத்திலும் "அமிர்த குணபோதினி"யை ஆதரிக்கும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

அடுத்த பிரஜோற்பத்தி வருஷம் சித்திரை மாதம் முதல் நமது "அமிர்த குணபோதினி"க்கு ஆறாவது வருடம் ஆரம்பமாகின்றது. இதுவரை நடைபெற்றதைவிட ஆறாம் வருடத்தில் இன்னும் அதிக உன்னதமாகவும் படிக்கப் படிக்கப் பரவசந்தரும் பான்மையுடனும் விளங்கும். நமது அன்பர்கள் பின்வரும் விஷயங்களைக் கவனிக்கும்படி வேண்டுகின்றோம்.

ஆறு முக்கிய குறிப்புகள்.

1. மணியாடர் மூலம் சந்தாவை அனுப்புவதானால் மணியாடர் கமிஷன் செலவு அணா இரண்டு மட்டுமே ஆகும். வி. பி. யில் பெறுவதானால் அணா ஐந்து செலவாகும். ஆதலின் மணியாடரில் அனுப்புவதே சிலாக்கியம்.

2. புது வருஷ சந்தாவை மணியாடர் செய்வோர் பங்குனி மாதம் 25-ம் தேதிக்குள் நமக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். இல்லாவிடில் அவர்களின் பெயரை வி. பி. அனுப்பும் விலாஸங்களுடன் சேர்த்து விடப்படும். அவர்களுக்கு வி. பி. யில் சித்திரை மாதத்திய பத்திரிகை கிடைக்கும். வி. பி. வந்த மூன்று தினங்களுக்குள் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

3. மணியாடர்கள் யாவும் சென்னையிலுள்ள ஆபீஸுக்கே அனுப்பப்படவேண்டும். பத்திராசிரியருக்கு அனுப்பி அவரைச் சிரமப்படுத்தக் கூடாது. மணியாடர் கூபனில் தங்களின் சந்தா நெம்பரையும், தெளிவான விலாஸத்தையும் குறிப்பிடவேண்டும். இது முக்கியமான சங்கதி. மணியாடர் கூபனில் எழுதமுடியாத வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் தனியாகக் கடிதத்தில் எழுதிவிட்டு மணியாடரையோ, போஸ்டல் ஆர்டரையோ அனுப்பவேண்டும்.

4. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் இந்தப் பங்குனிமாத ஸஞ்சிகையைப் பெற்றவுடன் தங்களின் சந்தாவை மணியாடர் செய்யும்படி கோருகிறோம். வெளிநாடுகளுக்கு வி. பி. அனுப்பப்பட மாட்டா. சித்திரை மாத ஸஞ்சிகை அவர்களுக்குக் கிடைக்காவிடில், அவர்களின் சந்தா இன்னும் எங்களின் கைக்கு வந்து சேரவில்லையென்பதே அதற்கு அர்த்தம். வெளிநாடு சந்தா ரூ. 1-8-0.

5. வி. பி. யில் பெற விரும்பும் சந்தா நேயர்கள் புது வருஷ சித்திரை மாத ஸஞ்சிகையை சித்திரை மாதம் முதல் தேதியில் பெற முடியாது. சித்திரை மாத ஸஞ்சிகை வி. பி. யில் அனுப்பப்பட்டு அவர்களுக்கு அந்த மாத மத்தியில்தான் கிடைக்கும். சந்தாவை மணியாடர் செய்தவிடின் வழக்கம்போல் முதல் தேதியிலேயே ஆநந்தமாகப் பத்திரிகையைப் பெறலாம்.

6. ☞ இந்தப் பங்குனி மாதஸஞ்சிகையைப் பெற்றவுடன், பத்திரிகையைச் சுற்றியிருக்கும் விலாஸக்காகிதத்தில் தங்களின் சந்தா நெம்பர் இருப்பதைக் குறிப்பிட்டு வைத்துக்கொள்ள வேண்டுகிறோம். அந்த நெம்பரை ஞாபகத்தோடும் மணியாடர் கூபனில் குறிப்பிடுவது அவசியமாகும்.

மேற்கண்ட ஆறு குறிப்புகளையும் கவனிக்க வேண்டுகிறோம். மணியாடர் மூலம் செலுத்துவோர் மகோபகாரிகளாவார். அவ்விதம் மணியாடர் செய்ய இயலாதோர், இங்கிருந்து அனுப்பும் புது வருட சந்தா வி பி.களை உடனே பெற்றுக்கொண்டு "அமிர்த குணபோதினி"யை ஆதரித்து அபிவிருத்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்களுடைய விசேஷித்த அபிமானம் உங்களின் சொந்தப் பத்திரிகையாகிய "அமிர்த குணபோதினி"யையே என்றென்றும் நாடியிருக்கவேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

பாவலரும் நாவலரும் பண்பாகப் போற்றிமிக
காவலது செய்யக் களிப்பாக—நீவளர்க்கும்
புத்ரி அமிர்தகுண போதினியாள் மற்றுண்டும்
நத்தியுனைத் தேடுகிறாள் நாடு.

பத்திராசிரியர்.

அமிர்தகுணபோதினி

பிரமோதூதஸூ பங்குனிமீ 1உ

மானிட சரீரத்தில் மின்ஸார சக்தி.

ஆற்று நீர் மலை உச்சிகளினின்றும் பூமியிற் பாயுமிடங்களில் மின்ஸார சக்தி காணப்படுவதுபோன்று, அந்த சக்தி ஜீவப்பிராணிகளின் சரீரத்திலுங்கூட விசேஷித்துத் தோன்றுகின்றது. அதிலே மானிட சரீரமும் ஒன்று. மனித தேகத்திற்கும் மின்ஸார சக்திக்கும் ஆச்சரியகரமான ஊகித்தறிய முடியாத ஏதோ ஒரு முக்கிய சம்பந்தம் இருந்துகொண்டிருக்கின்றது. இந்த சக்தி ஸ்திரீ புருஷர்களின் உடலில் சரிசமத்வமாய் அடங்கியிருக்கின்றது. ஆயினும், பெண்மணிகளிடத்தில் இந்த மின்ஸாரம் அதிகப்பட்டு நிற்கின்றது. சில குறித்த ஆடவர்களிடமும் இந்த அதிகரிந்த தன்மை மிகுந்து காணப்பட்டு, அவர்கள் எத்தனையோ புருஷர்களையும் மாதர்களையும் வெகு சுலபத்தில் மயக்கிவிட்டிருக்கின்றார்கள். காந்தத்துடன் ஒட்டிக்கொண்ட இரும்பு அதை விட்டுப் பிரியமுடியாததுபோல அந்த சக்திவாய்ந்த ஆடவர்களையும் ஸ்திரீகள் விட்டுப்பிரிய முடியாமல், அவர்கள் எவ்வளவு கொடுமைக்காரர்களா யிருப்பினும், அவர்கள் ஒவ்வோர் சமயங்களில் காட்டுகிற புன்னகையில் திருப்தி பட்டுப்போய் அவர்களுக்கு அடிமையாகிவிடுகிறார்கள். ஸர்வலக்ஷண ஸம்பூர்ணையான ஒரு இராஜகுமாரி ஒரு அல்பனுடன் தேகசம்பந்தம் வைத்துக்கொண்டதாகவும், "ஏன் இவ்வளவு நேரம் கழித்து வந்தாய்?" என்று அவன் அவளைக் கண்டித்ததாகவும் கதைகளில் படித்திருக்கிறோம். அந்த அல்பனிடம் ஒரு விசேஷித்த காந்தக் கவர்ச்சி யிருந்துகொண்டு, அந்தக் கவர்ச்சியானது மகோன்னத பதவியிலுள்ள மங்கையையும் மயக்கித் தன்னில் இழுத்துக்கொள்ளப் பண்ணிவிட்டிருக்கலாம். ஃ

புருஷ வர்க்கத்துக்குள் மின்ஸார சக்தியே இல்லையென்பதல்ல; ஆனால் புருஷவர்க்கத்துள் பெரும்பாலோர் தம்முள் மறைந்து தங்கியுள்ள அந்த சக்தியை அவர்கள் அறிந்தவர்களாயில்லை. அவர்கள் அறியாவிடினுங்கூட அந்த சக்தி அவர்களிடம் தங்கியிருக்கிறதென்பது உண்மையான விஷயம். ஆனால், ஸ்திரீவர்க்கம் இந்த சக்தி தம்முள் இருக்கின்றதென்பதை அறிந்து வைத்துள்ள அளவு ஆடவர்வர்க்கம் அறிந்துவைக்கவில்லை யென்பதும் ஒப்புக்கொள்ளவேண்டியதே. ஆடவர் வர்க்கத்துள் மின்ஸார சக்தி அன்னோது

விவாகமே ஆகாத சிலர் ஸ்திரீ விஷயங்களையும் சிற்றின்பங்களையும் வெகு தெளிவாக உபன்னியசிக்கிறார்கள்? இந்த அறிவை இவர்கள் எங்கே பெற்றார்களோ?

முகவசீகரத்திலுள்ளும் கைகளிலுள்ளும் விசேஷித்துக் காணப்பட்டு, தேகத்தில் சொற்பமாய்ப் பரவி நிற்கின்றது. ஸ்திரீ வர்க்கத்திலோ முகவசீகரத்திலும் ஹஸ்தங்களிலுமட்டுமல்லாமல் அவர்கள் தேகமுழுமைக்குமே இந்தக் காந்த சக்தி அமோகமாய்ப் பரவி வியாபித்துக்கொண்டு அவர்கள் ஒரு அசல் மின்சாரப் பொம்மைகளாகவே ஜ்வலிக்கின்றனர். அந்தக் காந்தப் பொம்மை எந்த ஆடவனின் பக்கத்தில் நின்றாலும் அவனை வசீகரித்துத் தன் வலையில் சிக்க வைத்துவிட வல்லதான சக்தியைக் கொண்டிருக்கின்றது. இந்த சக்தி விசேஷமாய்ப் பிறர்மீது தாவிப்பாயும்வண்ணமாக அன்னோரது தேக அமைப்பையும் அதற்குத் தக்கபடி கடவுள் அமைத்திருக்கின்றார். ஒவ்வொரு அழகிய அங்கங்களினின்றும் ஒவ்வொரு மின்சாரவிசை பாய்ந்து எதிரிலுள்ள ஆடவனைப் பரவசப்படுத்தி மயக்கிவிடுகின்றது. ஸர்வாபரணபூஷிதையாய் ஆடையலங்காரத்துடன் தோன்றி ஸ்திரீவர்க்கம் ஆடவரைத் தம்மில் இழுக்கும் சக்தியை ஒரு பாதி சக்தியாகவேதான் சொல்லவேண்டியிருக்கின்றது. ஆடையாபரணங்கள் இயற்கையில் தேகத்துள் அமைந்துள்ள பூரணசக்தியைப் பாதி மறைத்து மறுபாதியையே வெளிக்குத் தோற்றுவிக்கின்றது. ஆடையாபரணங்கள் எதுவுமே இல்லாதபோதுதான் அன்னோரிடமுள்ள முழுக்காந்தக் கவர்ச்சியும் மகாவேகம் மிகுந்ததாய் எதிரிலுள்ள ஆடவனின்மீது தாக்கி அவனைக் கீழே வீழ்த்திவிடுகின்றது. அந்த சமயம், அவன் எத்துணைக் கல்விமானாயினும், உலகவிரக்திவாய்ந்த மஹா துறவியாயினும், பரம வேதாந்தியாயினும், அந்த முழுப்பலத்துடனும் தன்மேற் பாயும் காந்த அதிர்ச்சியினின்றும் தப்பித்துக் கொள்ளத் திறமையற்றவனாய்த் தன்னையே மறந்து மூர்ச்சித்து அந்தப் பெரிய சக்திக்கு உட்பட்டுப் போய்விடுகின்றான். அந்தப் பூரண சக்தியை உலகில் எதிர்த்து நிற்பார் மிக்க அபூர்வம். ஃ

ஆடையாபரணங்களால் அழகும் வசீகரமும் அதிகப்படுகின்றதாயினும் அந்த ஆடையாபரணங்களே அற்றுப்போய் உண்மையிலேயுள்ள இயற்கையான சரீர அழகு வெளிப்படும்போதுதான் ஜகஜ்ஜோதியாய் விசேஷித்த அழகினை வாரிக்கொட்டுகிறது. ஸ்திரீவர்க்கத்தினுள் முன்னிலும் முக அழகு, பின்னிலும் பின்னப்பட்டுள்ள ஜடையின் அழகு, கண்களிலோ சொல்லமுடியாத அழகு, மூக்கிலோ மூக்குத்தியாலும் ஒருவித அழகு, செவிகளிலோ அங்குள்ள பூஷணங்களாலும் அழகு, கழுத்திலோ அந்தம் ஒரு அழகு, அங்கு அணியப் பெறும் ஆபரணங்களிலும் ஒரு அழகு, மார்பகத்தில் மஹா சக்திவாய்ந்த அழகு, கைகளிலோ அபார அழகு, வயிற்றிலோ உலகமுற்றிலும் ஸ்ரீமந் நாராயணமூர்த்திபோல் தம் வயிற்றுக்குள் வளர்த்துக் காக்கும் கம்பீரமான அழகு, (இவ்வுலகமே ஸ்திரீவர்க்கத்தின் வயிற்றினின்றும் தோன்றியதுதானே!) அதன்பின் ஒட்டியாண இடையின் அழகு, கால்களிலும் அழகு, பாதங்களிலும் விரல்களிலும் அழகு, ஒவ்வொரு நடையிலும் அழகு, ஒவ்வொரு திரும்புகையிலும் அழகு, பேச்சிலும் அழகு, புன்னகையிலும் அழகு, ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் ஒவ்வொரு புது புது அழகு—இவ்வாறாக அழகெல்லாம் ஓர் உருக்கொண்டு தோன்றியுள்ள காந்த விக்கிரகங்களான ஸ்திரீவர்க்

எல்லா குதிப்பும் முறைப்பும் பணம் சுருங்கினால் அடங்கிவிடும். வீட்டுக்காரன் வெளியூர் சென்றுவிட்டாலும் வீட்டின் சடபுட சிடுபுடு சப்தம் நின்று ஓய்ந்துவிடும். வீட்டு ராணியும் வாய்மூடி அடங்கிவிடுவாள்.

கத்தினால் இவ்வுலகம் ஆளப்பட்டு வருகின்றது. ஸ்திரீயின் காந்த சக்தியே இவ்வுலகினைத் தர்ம நெறியில் நிலைநிறுத்தியுள்ளது. அதன் மகத்துவச் செயல் மஹா பெரிது.

ஃ

காந்தக்கம்பியை ஒருவன் தன் விரல்களால் பற்றியவுடன் அந்தக் காந்தம் அந்த விரல்களைத் தன்னிடத்தே இழுத்துக்கொள்ளுகின்றது. அந்தக் கம்பியை விட்டு விரல்களை எடுக்க அவனால் முடிகிறதேயில்லை. முதலில் அவன் பற்றிய விரல்களை விசையோடும் இழுத்துப் பின் தேக நரம்புகள் முழுவதையும் இழுத்துப் பின் அவன் பிராணனையே தனக்குள் இழுத்துக்கொண்டு விடவே, பிராணன் தன்னிடமிருந்து பிரிந்தவுடனே அவன் சவமாய் விழுந்து விடுகின்றான். இது காந்தத்தினுடைய இயற்கைச் சக்தியாகும். இவ்விதமே, ஸ்திரீவர்க்கத்தின் காந்தசக்தி ஆடவர் வர்க்கத்தைத் தம்முள் இழுத்துத் தம்மைவிட்டு அகலாவாறு செய்து அவர்களின் ஆவியையே உறிஞ்சிக்கொள்கின்றது. ஆனால், ஸ்திரீவர்க்கத்து மின்சாரசக்தி உண்மையான மின்சாரத்தைப் போல் மனிதனைக் கொன்றுவிடாமல் அவனைக் காத்து ரக்ஷிக்கும் வழியில் உதவிபுரியும் வண்ணமாகப் பரமபிதாவாகிய கடவுள் பக்குவப்படுத்தி வைத்திருக்கின்றார். அதாவது, பாஷாணத்தைச் சுத்திசெய்து கொல்லக்கூடிய அதன் விஷத்தன்மையை மாற்றி அதையே உயர்ந்த ஸஞ்சீவிக்கொப்பான ஔஷதமாய்க் கொடுத்துத் தீராத பிணியையும் வெகு சுலபத்தில் தீர்த்துவிடும் தன்மைபோல, தேகத்தின்மீது பட்டமாத்திரத்தில் கொன்றுவிடக்கூடிய வல்லமைமிகுந்த மின்சாரத்தைச் சுத்திசெய்து பக்குவப்படுத்தி ஸ்திரீவர்க்கத்தின் சரீரத்தினுள் பரம தயாளுவான பகவான் புகுத்தியுள்ளார். இவ்விதமே, இந்தப் பக்குவப்படுத்திய மின்சார சக்தியைப் புருஷவர்க்கத்தின் சரீரத்தினுள்ளும் செலுத்தியிருக்கின்றார். இதில் பேதம் என்னவெனில், ஸ்திரீ வர்க்கம் தமது மின்சார சக்தியைப் பூரணமாய் அறிந்துகொண்டு அதை நம்புகின்றது; அதனாலேயே உலகை மயக்க, வசீகரிக்க அது முயல்கின்றது. புருஷவர்க்கமோ அந்த மின்சாரசக்தி தம்முள் இருப்பதை அவ்வளவு பரிபூரணமாய் அறிவதில்லை; பாதிவரையுமே அறிகிறது; அப்பாதிவரைக்கும் அது தன்னைத் தானே அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்ததாகின்றது. இதனாலேயே ஸ்திரீவர்க்கம் உலகை மயக்குந் தன்மையில் முதற்படியில் நின்று சிகர ஸ்தானத்தை வகித்திருக்க, புருஷவர்க்கம் அதற்கு ஒரு படியோ, பல படிகளோ தாழ்ந்துகிடக்கின்றது. இவ்வித தாழ்வுக்குப் புருஷவர்க்கம் தன்னுள் வியாபித்துள்ள மின்சார சக்தியை முற்றிலும் தெரிந்துகொள்ளுதற்கில்லாத அறியாமையே காரணமாகின்றது.

ஃ

இந்த அறியாமையே ஸ்திரீவர்க்கத்தினுள்ளும் தாவிப் பாய்ந்து ஸர்வ சக்திகொண்டுள்ள அவர்களை—நாங்களென்ன, பெண்கட்டைகள்தானே, பிள்ளைகளைப் பெறும் யந்திரங்கள்தானே, ஆடவரின் காமசாந்திக்கென்று ஏற்பட்ட பாண்டங்கள்தானே, அடிமைகள்தானே என்று தங்களைக் கேவலப்படுத்தித் தாழ்த்தி நினைத்துக்கொள்ளச் செய்து அந்தோ! அந்தோ! அவர்களை அஞ்ஞான அந்தகாரத்துள்ளே வீழ்த்திவிட்டது! இதுமட்டுமா? இந்த அறி

நீ பிறரைச் சேர்த்து வைத்துக் கொள்வதற்குத் தக்கபடியே பிறரும் உன்னுடன் குலாவுவர். நீ வேற்றுமுகமானால் மற்றவர்களும் அப்படியே.

யாமையின் காரணமாக ஒரு பெண் மற்றொரு பெண்ணுக்கு அடிமைத்தன்மையான புத்தியையே கற்பித்தும் பழக்கியும் வைத்துப் பாழாக்கிவிடுகின்றாள்; எந்த சக்தியுமற்ற அடிமையாகச் செய்துவிடுகின்றாள். அச்சமே யின்னதென்று அறிந்திராத பச்சைக் குழந்தைக்குப் பூச்சாண்டி பயம் காண்பித்து, "அதோ வருகிறான் பூச்சாண்டி" என்று பயப்படுத்திக் கடைசியில் பூச்சாண்டி பயந்தால் அக்குழந்தைகளைப் பூச்சிகளாக்கிவிடும் தன்மைபோல, ஒரு பெண் மற்றொரு பெண்ணைக் கெடுத்து அறியாமைப் படுகுழியி லாழ்த்திவிடுகிறாள். பூச்சாண்டிப் பயம் ஊட்டப்பெற்ற குழந்தை பின்பு பெரியவனான காலத்திலும் தனியே ஓரிடத்திற்குச் செல்ல அஞ்சி ஒரு துணையை வேண்டுகின்றான். இருட்டில் நின்றால் பூச்சாண்டிப் பயம்! ஒண்டியாக நின்றால் பூச்சாண்டிப் பயம்! இரவில் தோட்டத்திற்குள் செல்ல பூச்சாண்டிப் பயம்! இவ்விதமாகக் கடைசிவரையும் அக்குழந்தை மனோதிடமற்றப் பலஹீன ஹிருதயஸ்தனாய் நடுங்குவோனாய் விடுகின்றான். இதுபோன்று ஸ்திரீவர்க்கமும் முளைக்கிற முளையிலேயே தம்மவர்க்கு அடிமைத்தன்மையையூட்டி ஆடவர்களிலும் பெண்கள் தாழ்ந்த கட்டைகள் என்று உபதேசித்துவிடுவதனாலே மகா சக்தி வாய்ந்த ஸ்திரீவர்க்கம் கேவலம் ஒரு சிறு துரும்புக்குச் சமமாக, அந்தத் துரும்பினும் கேடாக மதிக்கப்பட்டுப் போகின்றது—போய்விட்டது. என்ன அநியாயமிது! ஐயோ! அறியாமையின் விபரீதமே! இந்த அறியாமையின் ஆபாஸத்தை அன்னைமணிகள் தகர்த்தெறியக்கடவராக! தம்மை விழுங்க நினைக்கிற—விழுங்கியே யிருக்கிற இந்த அறியாமைப் பேயை அரிவையர் தூரத் துரத்தியோட்டி அகற்றக்கடவராக! அடிமையான ஸ்திரீவர்க்கத்தின் வயிற்றிற் றோன்றிய மக்களும் அடிமைப்பூச்சிகளாகவே பரிசபித்துக் கிடப்பர். தமது ஸர்வசக்தியை யுணர்ந்த சுதந்திர வனிதா ரத்னங்களின் திருமணி வயிற்றில் உற்பவித்த மக்களோ சுதந்தரஸ்தர்களாய் சுதந்திரவாழ்வில் சுகிப்பர். இதுவே உண்மை. உலகம் சீர்படவேண்டுமாகில் ஸ்திரீவர்க்கத்தைச் சீர்படுத்துவதே முதலிற் செய்யும் வேலை; அதுவே முதற்கடமை.

ஃ

இனி, எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியிற் புகுவோம். ஸ்திரீவர்க்க மின்சார சக்தி ஆடவரின் மனத்துள் ஊடுருவிப் பாய்ந்து பிரமிக்கவைப்பது போன்றே, ஆடவர் வர்க்கத்துள் அமைந்துள்ள மின்சாரசக்தி அன்னோது புருஷ கம்பீரத்தாலும், ஆண்மையுடன் அடியெடுத்துவைக்கும் வீரநடையாலும், உலகில் தாமே தலைமை படைத்துள்ளோமென்ற தலைமைத் தத்துவத்தாலும், இயற்கையில் அமைந்துள்ள புருஷத்துவத்தாலும், வலிவாலும், வதன வசீகரத்தாலும் ஸ்திரீவர்க்கத்தின் ஹிருதயத்தினுட் பாய்ந்து அன்னோரைத் தமக்கு உட்பட்டு நடக்கவும், தாம் அவர்களை அடக்கியாளவும் செய்துவிடுகின்றது.

ஃ

இந்த மின்சாரசக்தியில் இன்னொரு விசித்திரம் உளது. நெருப்பை நெருப்பு ஒன்றும் செய்வதில்லை. ஒரு மரக்கட்டை மற்றொரு மரக்கட்டையை

ஆண்மக்களையாவது பகைக்கலாம்- வீட்டுப் பெண்களைப் பகைத்துக் கொள்பவன் பெரிய முட்டாள். பெண்களைப் பகைத்துக்கொண்டு ஆடவர்களிடம் நற்பெயர் பெறமுடியாது. பெண் பேச்சுக்குத்தான் அதிக மகிமை.

ஒன்றும் செய்வதில்லை. ஆனால், நெருப்பிலும், மரக்கட்டையிலும் மின்சாரம் இல்லாமலில்லை; அவற்றினுள் பூர்த்தியாகவே இருக்கின்றது. ஆனால், தன் வர்க்கத்தின்மீது, தன் இனத்தின்மீது தன் மின்சார சக்தியைச் செலுத்த முடிகிறதில்லை. அவ்விதமே ஸ்திரீவர்க்கமும் தமது இனத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின்மீது தமது மின்சார சக்தியைக் காதல்வகையில்—காம வகையில் பிரயோகிப்பதற்கு—பாய்ச்சுவதற்கு முடிகிறதில்லை. அப்படியே புருஷவர்க்கமும் காமத்தின்சார்பிலோ காதற்சார்பிலோ தம்மினத்தைச்சேர்ந்த ஒரு ஆண்மகனிடத்துத் தமது மின்சார சக்தியை வீசுவதற்கு இயலுகிற தில்லை. பெண்களைப் பெண்கள் மோகிப்பரோ?—இல்லை. ஆடவரை ஆட வர் மோகிப்பரோ?—இல்லை. ஃ

இனி, நெருப்புடன் ஒரு மரக்கட்டையைச் சேர்த்துவிட்டுப் பார்ப் போம். அப்பொழுது நேரிடுவதென்ன?—ஸம்பவிப்பது யாது? நெருப்புடன் மரக்கட்டை சேர்ந்தவுடன் நெருப்பினிலுள்ள மின்சாரசக்தி மரக்கட்டையி னுள் வேகத்தோடும் பாய்ந்திட, அதே நிமிஷத்தில் மரக்கட்டையினுள் மறைந்துநிற்கும் மின்சாரசக்தியாகிய தீ நெருப்பின்மீது வலிவுடன்பாய, இரண்டும் ஒன்றுசேர்ந்துகொண்டு அதிக ஜ்வாலையுடன் பற்றிக்கொள்கின்றது. அதாவது, ஒன்றினிடத்துள்ள மின்சாரசக்தி மற்றொன்றின்மீது பாய்வதற்கு அந்த ஒன்றைச்சேர்ந்த இனமல்லாததான வேறொரு அன்னிய இனம் எதிர்ப்படவேண்டியதாகி, அப்படி எதிர்ப்படும்போது ஒவ்வொன்றுக்குள் உள்ள மின்சாரசக்தி மற்றொன்றின்மீது பாய்ந்து இரண்டும் ஒன்றாகி முன்னை யினும் அதிகமான மின்சக்தியை இந்த இரண்டுமே கொண்டுவிடுகின்றது. இன்னும் இதை விளக்கிச் சொல்வதானால், ஒன்றினிடத்து மறைந்துள்ள மின் சக்தியை வெளிப்படுத்திக் காரியம் செய்வதற்கு, அதைச்சேர்ந்த இனமல்லாத மற்றொன்று வேண்டியதா யிருக்கிறதென்பதே.

ஃ

மரக்கட்டையினுள் தீயாகிய மின்சக்தி இருப்பினும் அது வெளியே தெரிவதில்லை. மரக்கட்டையைத் தொட்டுப் பார்த்தால் அது சுடுவதேயில்லை. ஆயினும் அதனுள் தீ மறைந்திருக்கிறதென்பது உண்மை. இவ்விதம் மரக் கட்டையில் மறைந்துள்ள தீ நெருப்புடன் சம்பந்தப்பட்டதும் வெளிப்பட்டு உலகுக்கு உபயோகமுள்ள கருவியாகின்றது. இதுபோலவே, ஸ்திரீவர்க்கமா கிய நெருப்பினோடு ஆடவர் வர்க்கமாகிய மரக்கட்டை ஒன்று சேர்ந்தவுடனே ஸ்திரீவர்க்க மின்சாரமாகிய நெருப்பு ஆடவர்வர்க்க மரக்கட்டையின்மீது வேகத்துடன்பாய, அந்த நிமிஷமே அந்த ஆடவ மரக்கட்டையினுள் மறைந் துள்ள மின்சாரத் தீ வெளிப்பட்டுப் பெண்வர்க்க நெருப்பின் மீது பாய, இரண் டும் ஒன்றின்மீதொன்று வீசிப் பற்றிக்கொண்டு முடிவில் இரண்டும் ஓர் உரு வாய் மாறிவிடுகின்றது. நெருப்பு வேறு, மரக்கட்டை வேறு என்ற பேதம் ஒழிந்துபோய் இரண்டும் ஒரே அக்கினியாகி முன்னிலும் பதின்மடங்கு அதி கரித்த சக்திகொண்டதாகிவிடுகின்றது. இந்த இரண்டும் ஒன்று சேர்ந்து ஓர் உருவாகி அதனால் அதிகரித்துவிட்ட சக்தியானது உலகத்திற்கு உபகாரப் பொருளாய் முடிந்து அதனால் உலகம் உஜ்ஜீவிக்கின்றது. இவ்வண்ணம் உலகு

காலம் அனுகூலமானால், தரித்திரம் பஞ்சாய்ப் பறந்துபோக அதிர்ஷ்டம் பிறக்கும். காலம் எதிரிடையாக இருப்பினோ எல்லாம் கண்ணீர் தான்!

செய்வதன்பொருட்டாகவே, உலக நலத்தின் பொருட்டாகவே, தனித்தனிப் பிரிந்து வெவ்வேறுபட்டுள்ள ஸ்திரீவர்க்க சக்தியையும், புருஷவர்க்க சக்தியையும் "விவாகம்" என்ற மகா வலிவுள்ள கயிற்றினுல் ஒன்றுபடக் கட்டி, அக்கயிறு அவிழ்ந்துவிடாதபடி தமது நாமத்தால் வழங்கும் மந்திரோச்சாடனங்களால் கெட்டிப்படுத்தி, தாமே முன்னின்று ஆசீர்வதித்து அனுக்கிரகித்துள்ளார் சர்வஜீவதயாபரராகிய கடவுள்! இவ்விதம் இரு சக்திகளும் ஒன்றாகூடிய பிறகே அந்தந்த சக்திக்கும் அதற்குமுன் இல்லாத ஒரு தனி மகிமையும், பிரதாபமும், வலுவேறிய திடனும் உண்டாகின்றது. விவாகமான ஆடவன் விவாகமான ஸ்திரீ—இவ்விருவரும் உலகில் எவ்வளவு உன்னதம் பெறுகின்றனர்! எவ்வளவு மதிக்கப்படுகின்றனர்!! இந்த உன்னதமும் ஒளியும் விவாகமில்லாத ஆடவனுக்கும் ஸ்திரீக்கும் ஏற்படுவதில்லையன்றோ?

ஃ

ஸ்திரீவர்க்க மின்சாரமும், ஆடவர்வர்க்க மின்சாரமும் தத்தம் சக்தியை ஒன்றின்மீதொன்று வீசுங்காலையில் அவற்றைத் தாம் ஆசீர்வதிப்பதின் அறிகுறியாக அந்த இரண்டும் ஒன்றுபடுவதினுள் அளவற்ற இன்ப பூர்த்தியைக் கண்டுணர்ந்து சுவைத்துக்கொள்ளுமாறு ஆதிபரம்பொருள் கடாக்ஷித்துள்ளார். அதிலும் ஒரு விந்தை! இடையே இருவரும் பிரிந்துவிடாவாறு அடுத்தடுத்து விரும்பும்வண்ணமாக நிமிஷத்திற்றோன்றி மறைந்து ஏமாப்புறும் இயல்பினதாக அமைத்திருப்பது வெகு விசித்திரம். அந்த ஏமாற்றத்தில் மீண்டும் மீண்டும் அதன்மீது தாகம் அதிகமாகி, மறுபடியும் அந்த ரம்மியம் காண அகம் அவாவுகின்றது. இவ்வளவு விசித்திரமாக அதனை யமைத்து, இறுதியில் அதனைச் சிற்றின்பமென்றே தெளிவாக அறிந்து ஒதுக்கிவிடப் பக்தவ ஞானம் நல்கி, இச்சிற்றின்பச் சேற்றினின்றே பேரின்பவாரிதி காணத் தாவுமாறு இறைவன் அற்புதப்படுத்தியுள்ளார். கடவுளின் ஒப்பற்ற அருள் திறத்தினை எண்ண எண்ண எழும் இன்பத்தினை அளந்தறியவசமோ!

ஃ

இங்கு ஒரு கேள்வி. வாயில் ஊறிய எச்சிலை உமிழ்ந்துவிடுகின்றனர் மூக்கில் வரும் சளியைச் சிந்திவிடுகின்றனர்; காதின் தினவைக் குறும்பியெடுத்துத் தீர்த்துக்கொள்கின்றனர்; அரிப்பு கண்ட இடத்தில் சொறிந்து நிவர்த்தி செய்துகொள்கின்றனர்; மலஜல உபாதைகளையும் அவற்றை வெளிப்படுத்தித் தணித்துக்கொள்கின்றனர்; அவ்விதமே காமவிகாரத்தையும் எவ்விதமோ ஒருவகையில் தீர்த்துக்கொள்ளக்கூடியதா யிருக்க, அதற்கு மட்டும் சாஸ்திரத் தடைகளையும், புண்ணிய பாவ பயத்தையும், கண்டனங்களையும் விதித்திருப்பானேன் என்பது வினு? மற்ற அவஸ்தைகளின் நிவர்த்தியில் உலகுக்கு எவ்வித கெடுதியுமில்லை. ஆனால், காம நிவர்த்தியிலோ பிரஜாவுற்பத்தி சம்பந்தப்பட்டுள்ளது. முறைகேடான காமத்தால் உத்தமப்பிரஜை உண்டாவது தடைபட்டு, குலத்துக்கும் லோகதர்மத்திற்கும் நன்னெறிக்கும் பழுதான வழியில் தவறுதலான சந்தானேற்பத்தி நேர்ந்துவிடுவது கூடும்.

ஒன்றைச் செய்யத்தொடங்கும் பொழுதெல்லாம் இதனுல் எனக்கு உண்டாகும் லாபம் என்ன என்று கேட்பவன் பார காரியத்தை ஒருபொழுதும் சாதிக்க மாட்டான். அதிக சுயநலமுள்ளவன் உருப்படான்.

அதனால் நல்லொழுக்கம் குன்றிப் பாவம்மிகுந்து ஒரு கட்டுப்பாடான ஒழுங்கு தவறி உலகும் நாளடைவில் நசித்துப்போம். அங்ஙனம் பாவபூமியாகிவிடாதிருக்கவும், அதர்மப் பிரஜையின் ஆபாஸ உற்பத்தியைத் தடுக்கவும் காம விர்த்தியில் சாஸ்திர விதிவிலக்குகளையுண்டுபண்ணி ஒரு ஒழுங்கு திட்டங்களேற்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டங்களால்தான் அந்தந்த ஸமூகமும் அழிந்துவிடாமல் ஒரு உருவுடன் நிலைத்துக் காக்கப்பட்டு வருகின்றது. எனவே, காமம் என்பதை விவாகமுறையிலே—அந்த உத்தம வழியில் கொண்டு குறித்த ஒரு எல்லையில் நிற்கவேண்டுமென்பது உலக ஒழுங்கு—ஜனக் கட்டுப்பாடு.

ஃ

சாஸ்திரக்ஞர்களின் நுண்ணிய ஆராய்ச்சியின் பயனாக மின்சார சக்தியால் உலகுக்கு உண்டான அநுகூலங்கள் அனந்தம். அத்தனையும் சாஸ்திர விதிகளுக்கும் ஒழுங்குகட்கும் உட்பட்டிருக்கும்வரையுமே நலம்செய்யவல்லது. சாஸ்திரவிதிகளை மீறி ஆயுதங்களைக் கொண்டல்லாமல் கைகளால் மின்சாரத்தைத் தொட்டால், நன்மைக்கான மின்சாரமே உயிரைப் போக்குதற்கும் அபாயமான கருவியாய்விடுகின்றது. அதுபோன்று விவாகம் முதலிய ஜனக் கட்டுப்பாடுகளை மீறி, ஒழுக்கங்கெட்ட வழியிற் செல்லும் ஸ்திரீபுருஷர்களிடையே பரஸ்பரம் பாயும் மின்ஸாரம் உடல்நலத்திற்குக் கேட்டையே விளைத்துப் பிணிவாய்ப்படவும் செய்து, நெறிதவறிய அவமானகரமான சந்தானங்களையும் உற்பத்தியாக்கிவிடுகின்றது. உலகுக்கு இதனினும் ஸர்வநாசம் வேறென்ன வேண்டும்?

ஃ

மனிததேகத்துக்குள்ளாக மின்சாரசக்தி இருக்கிறதென்றோம். தேகத்திலுள்ள நரம்புகளை மின்சாரக்கம்பிகளுக்கு இணையாகப் பேசலாம். ஒரு வஸ்துவைக் கண்கள் கண்டதும் மூளைக்கு அவ்வஸ்துவின் லக்ஷண விவரத்தை ஒரு நரம்பு தக்ஷணமே தெரிவிக்க, அதற்குமேல் மூளையினின்றும் ஏவுதலான உத்திரவுகள் வெளிப்பட, உடனே கைகால்கள் அசைந்து அந்த ஏவுதலின்படி அதது தொழில்செய்ய ஆரம்பித்துவிடுகின்றது. இவ்வளவும் ஒரு இமைப்பொழுதில் மின்சாரவேகத்துடன் நடைபெறுகின்றன. இன்னொரு அற்புதம்: பிரசவித்த தக்ஷணமே பால் சுரக்கத்தொடங்கிக் குழந்தைக்கு அது திவ்ய அமிர்தமாவது எத்துணை ஆச்சரியம்! எத்துணை மின்சாரவேகத்துடன் இது நடைபெறுகின்றது! ஆடவர் மகளீர் இருபாலாரிடத்தும் மின்ஸாரசக்தியிருத்தலால்தான் ஒருவரையொருவர் தொட்டளவிலேயே ஒருவித பரிசவுணர்ச்சி யுண்டாகி ஒரு வசிகரிப்பு தோன்றுகின்றது. திருமண நாளில் நலுங்கிடுவதென்பதும் மணமகனுக்கு விவாக உணர்ச்சியைத் தோற்றுவித்து ஆசீர்வதித்தற்குத்தான். ஈரமான கட்டையில் நெருப்பு உடனே பற்றுவதில்லை. அதுபோல் மின்சாரசக்தி ஆடவர் மகளீர் இருபாலாரில் ஒருவருக்கு இல்லாமலோ, குறைவுபட்டோ போய்விடுவதில், பரிசவுணர்ச்சியை யுண்டாக்கும் சக்தி மங்கிப்போய் ஊடல் இன்பம் காணாது வாடி வருந்தி நோக நேர்கின்றது.

ஃ

உன் பலஹீனத்தை எந்த நாளும் வெளியில் தெரியும்படியாகக் காண்பித்துக் கொள்ளாதே. எந்த சங்கதியையும் நீ முடித்துவிடக்கூடிய ஆற்றலுள்ளவனாகவே பிரகாசமான கண்களுடன் மற்றவரின் எதிரில் நிமிர்ந்து நில்.

நட்பு, காதல், உறவு, பாசம் முதலியனவும் ஒருவகை மின்சாரக்கவர்ச்சியினாலேயே பெருகி ஓங்கிச் செல்கின்றன. 'ஆ! தம்பி எப்போதடா வந்தாய்' என்று ஒரு தமக்கை தன் உடன்பிறப்பின் கரங்களை ஆவலுடன் பற்றுகின்றாள். அச்சமயம் இருவரிடத்துமுள்ள மின்சாரம் ஒருவர்மீதொருவருக்குப் பாய்ந்து அத்யந்த ஆநந்தபரிதர்களாகின்றனர். ஒரு தாய் தன் குழந்தைக்கு எத்தனை அன்புடன் பால் கொடுக்கின்றாள்? மாதாவின் மார்பகத்தோடு அந்தக் குழந்தை பொருந்தியிருக்கும் அழகு ஒரு தெய்வீக அழகன்றோ? அந்தக் குழந்தை பூர்ணமான மின்சார சக்தியோடுங்கூடிய ஒரு வசீகர உருவமாகும். அதன் மின்சாரம் தாய்க்குப் பாய்ந்திட, தாயின் பரமகருணையான மின்சாரம் குழந்தையின்மீது வீசப்பட, இரண்டும் இனிது பொருந்தி இன்பவாரிதியாகின்றது.

ஃ

மிக்க வலிமைபொருந்திய மின்ஸாரசக்தி மகாத்மாக்களிடம் காணப்படுகின்றது. அவர்களின் ஹஸ்தங்கள் பட்டவிடமெல்லாம் மின்ஸாரஜோதி வீசுகின்றது. புதிதாக ஒரு கோயிலை நிர்மாணித்து அங்கு மகான்களைக் கொண்டு பூஜாவிசேஷங்களை நிறைவேற்றுவதில், அந்த மகான்களின் ஹஸ்தம் அங்கு பட்டவுடன் மின்ஸாரம் பாய்ந்து தக்ஷணமே தெய்வீகஜோதி தோற்றுகின்றது. பாடல்பெற்ற ஸ்தலங்கள் என்பவையெல்லாம் மஹான்களின் ஹஸ்தவிசேஷம் பட்டவைகளேயாகும். ஃ

மகாத்மாக்களின் மின்ஸாரசக்தி அவர்களது ஆத்மஸக்தியால் வெளிப்படுகின்றது. அவர்களினும் மேலான நிகரற்ற சக்தி ஸர்வலோக நாயகரான கடவுளிடம் உள்ளது. அந்தப் பரம்பொருளைத் துதித்தற்கென்று உலக மாந்தர் ஆங்காங்கு அமைத்துக்கொள்ளும் ஆலயம்போன்ற தியானஸ்தலங்களிலெல்லாம் அந்த இறைவனின் மின்ஸாரசக்தி ஸம்பூர்ணமாய்ப் பிரவகித்து விசையுடன் பாய்கின்றது. எத்தகைய பாபியும் அந்தப் பரிசுத்தமான தியானஸ்தலத்தை, அதாவது ஆலயத்தையடைந்ததும் அவன்மீது பகவத் அநுக்கிரகம் என்ற மின்சாரசக்தி வீசப்பட்டு அவன் மனத்தைச் செம்மைப்படுத்திப் பக்திப் பரவசத்தோடும் துள்ளியெழச்செய்து தன்னைத்தானே மறக்கவைத்துவிடுகின்றது. தியான ஸ்தலத்தினின்றும் திரும்புகையில் அவன் புது மனிதனாய் வெளியில் வருகின்றான். பக்தர்களின் மனத்தை வசீகரித்துத் தம்மிடம் இழுத்துக்கொள்வது ஆதி பரஞ்ஜோதியின் அருட்சக்தி. அந்த ஜோதியினுள் பரிபூர்ணமான மின்ஸாரசக்தி நிறைந்துள்ளது. சரீரத்தினூடே மீன்ஸார சக்தியும் கலந்து நிற்பது பரமனின் அருள். அவ்விதம் கலந்துநிற்றலால்தான் உலகம் இயங்குதலும் சாத்தியமாகின்றது. சாதாரண சரீரங்களில் மின்ஸாரசக்தி ஜீவன்பிரிந்ததும் விலகிவிடுகின்றது. மகாத்மாக்களின் சரீரங்களிலோ அவர்கள் மரித்தபின்னரும் மீன்ஸாரசக்தி தங்கி நின்று அவர்களின் சமாதியில் பற்பல அற்புதங்களைத் தோற்றுவிக்கின்றது. ஆ! மின்ஸார சக்தியின் பிரபாவம்—மகத்துவம் இருந்தவாறென்னே! அந்த மின்ஸார சக்தியை உலகினுக்கு உபகரித்த ஆதிசக்தியாகிய இறைவனது அருளுக்கு வியந்து அந்தப் பரம்பொருளை மனமொழிமெய்களால் அந்தரங்க சுத்தியுடன் துதிக்கக்கடவோம். ஆதிசக்தி—ஆதிமூலம்—ஆதிபகவன் வாழ்க.

கற்பனாசக்தி என்னும் அகக்கருவி ஜன்ம இயற்கையாக வந்து அமைவதன்றிக் கல்வியினாலேயே வந்துவிடுவதல்ல. கவி பாடுந்திறன் கருவுள் அமைப்பு.

அறிவுக்கு உணவு.

1. அனுபவத்தின் தனிப் பெருமை :—பாடசாலையை நடத்திக் கல்வி கற்பிக்கும் வகையை அனுபவத்தாலொழிய வேறு விதமாய் ஒருவனும் அறிய மாட்டான். ஒரு உபாத்தியாயன் தனக்கு அனுபவப்பட்டவைகளையும், அவைகளுக்குரிய யுக்திக் குறிப்புகளையும் எழுதிவைக்க, அவைகளைமற்றொருவன் வாசிப்பதனாலேயே அவனுக்குப் பாடசாலை நடத்திக் கல்வி கற்பிக்கும் சாமர்த்தியம் உண்டாகிவிடுமா? உண்டாகாது. ஆயினும் அவைகளை நன்றாய் யூகிப்பானாகில் பல தவறுகளுக்கு விலகுவான். அவ்வளவு வரைக்குமே அவன் பலன் பெறக்கூடும். மற்றபடி வாசித்ததைக் கொண்டு அனுபவ மடைந்துவிட முடியாது. அனுபவம் வேறுவிஷயம்.

2. படிப்பு இன்றி அனுபவம் மட்டுமே பெருமை பெறாது :—அநுபவம் அற்பமாயும் கல்வி நிறைவாயுமுடையவர்கள் கல்வி கற்காமல் அநுபவத்தில் மட்டுமே முதிர்ந்துள்ளவர்களை அவர்கள் அனுபவத்தால் அறிந்த விஷயத்திலும் வென்றுவிட வல்லவர்களாய் இருப்பார்கள். எப்படியெனில், படிப்பு இல்லாமல் அனுபவம் மாத்திரமுடைய வைத்தியரைத் திறமுடையவரென்று நம்பி நமது வியாதிக்கு அவரைக்கொண்டு மருந்து செய்விப்பது புத்தியென்று எவரும் சொல்லார்.

3. முதலில் படும் கருத்து :— மனதில் முதலில் படும் கருத்தில் பிடிப்பாயிருப்பது இயல்பு. விவேகிகளும் அதை எளிதில் விடார். முதலில் ஒருவனைக் குறித்துப் பிறர் மனதில் படும் கருத்துப் பெரும்பாலும் அற்ப எதுக்களால் உற்பத்தியாகிறது. அதுபற்றி அக்கருத்தை அற்பமென்று கொள்ளலாகாது. அது மனதில் அழுந்தி நெடுங்கால மட்டும் பலிக்கும். மனதில் படும் முதற் கருத்து அழுத்தமாயு மிருக்கும்.

4. ஒரு நிதானம் இல்லை வேண்டும் :—அளவுக்கு மிஞ்சித் தயை வைத்தால், முயற்சியும் ஜாக்கிரதையும் கெட ஒழுங்கின்மை மேலிடும். மனவுறுதி மிஞ்சினாலோ கண்டிப்புத் தலையெடுக்கும். இப்படி இல்லாமல் தயையும் மனவுறுதியையும் புத்தி பூர்வமாய் ஏற்ற அளவாக இசைத்துச் செலுத்துவதே உத்தமம்.

5. நம்பிக்கை :— நம்பிக்கையுள்ளவனுக்கு எந்தத் தொழிலும் எளிதாகும். அவநம்பிக்கையோ உற்சாகத்தைக் கெடுக்கும்.

6. உழைப்பு :—உழைப்பு குன்றாத மேன்மையுள்ளது. ஒருவன் அறியாமையில் மூழ்கித் தன் ஆத்ம நன்மையை எண்ணா திருந்தாலும் அவன் உழைத்து முயற்சியுடையவனாயிருப்பானானால், அவன் காரியம் நன்மையாய் முடியுமென்று நம்பலாம். சோம்பனுக்கு மாத்திரம் ஒரு பொழுதும் நம்பிக்கையில்லை. உழைப்பும் உயிரும் சரி. உழைக்கிறவனுடைய உள்ளத்தில் கடவுளினுடைய அருளாகிய ஊக்கம் பிறக்கும். ஜீவனுக்கு ஆதாரமாகிய அத்திவ்ய ஊக்கம் சர்வவல்ல கடவுளால் புகட்டப்பட்டதே. அவன் உழைக்கத் தொடங்கவே இவ்வூக்கம் அவன் உள்ளத்தின் கண்ணைத் திறந்து, மகிமை இன்னதென்று காட்டி, தன்னை அறியும் அறிவு முதலான சகல அறிவையும் உணர்த்தும். உழைக்கும்படி உனக்குத் துணை நிற்

கும் அறிவு பெரிது. அதைச் சார்ந்தொழுகு. உழைப்பும் பக்தியும் ஒன்றுகும். முற்காலத்து முனிவர் "உழைப்பும் தேவவழிபாடும் ஒக்கும்" என்பர். தக்க உழைப்பெல்லாம் திவ்யமானது. கைத்தொழிலும் அப்படியே. உழைப்பு என்னும் மலையின் அடி பூதலமெங்கும் அகன்றிருக்க, அதன் சிகரம் வானத்தை அளாவுகின்றது.

7. பயனடைதல்:— மந்தமான உற்சாகமும் உபேட்சையு முள்ளவர்களுக்கு எந்தக் காரியமும் சித்தியாகாது. ஜீவகால மட்டும் அதுவே கருமமென்று கருதி அதனைக் கைக்கொள்வோர் மாத்திரம் பயன் அடைவர். நீ செய்வதற்கு உன் கைக்கு நேரிடுவ தெல்லாவற்றையும் பூரண ஊக்கத்துடன் செய்.

8. பட்சம்:—பட்சமானது ஒருவனுக்கு இயற்கையாய் இல்லாதிருந்தால், அதை அவனிடத்தில் தோற்றுவிப்பது சாத்தியமல்லவென்றே காண்கிறது.

9. அவநம்பிக்கையின் முடிவு:— தன் சாமர்த்தியத்தை நம்பாத ஒருவன் பேச வாய் திறக்கும்பொழுதே கேட்பவர்கள் அதைக் கண்டு, அவனை மதியார்கள்.

T. S. குழந்தைவேல் முதலியார்.

வெளிநாட்டில் கொள்ளையடித்தும் ஏமாற்றியும் மோசம் செய்தும் இழிதொழில் புகுந்தும் களவு நிகழ்த்தியும் செல்வ வானுகித் தன்னூரில் பிரதாபத்துடனுள்ளவனின் உள் ரகசியத்தை யாறிவார்? அவனது மகோன்னத நிலையில் அவனது பணத்தின் வேகம் எதற்கும் துணிய, எல்லோரும் அவனை மேலாக மதிக்க, அவனால் ஏமாற்றமுற்று நசுக்கப்பட்டோரோ கடவுளை நோக்கிக் கதற வேண்டியவ ராகின்றனர்.

ஒருவரைப்போல் மற்றவர் சாயல்.

சிற்சில வேளைகளில் அபூர்வமாய் ஒருவரைக் காண நேர்ந்து திடுக்கிட்டுவிடுகிறோம். நம் முன்பு எதிர்ப்பட்டவரின் சாயலாக இருந்து நம்மைவிட்டுப் பிரிந்துபோனவர்களின் நினைவு வந்து, அந்த சமயம் என்ன துடிதுடித்துப் போகிறோம்! அந்த மனிதரை அடிக்கடி பார்த்துக் கொட்டாவி விடுகிறோம். அவர் முகம், அவர் நடை, அவர் கை கால்கள், அவர் தேகபுஷ்டி யாவும் அந்த மறைந்த நமது மனிதரின் சாயலாகவே இருக்கின்றது. நாம் பெருமூச்சு விடுகிறோம். நாம் அடிக்கடி அந்த மனிதரைப் பார்ப்பதற்கு என்ன பொருள் என்பதை அந்த மனிதர் கண்டுணர முடியவில்லை. ஆனல் நாம் படும்பாடோ தெய்வம் அறியும்.

குணத்தை நிதானிக்கும் காலம்

ஒருவன் நல்லவனோ, கெட்டவனோ, அவனுடைய உண்மையான குணத்தை அவனுடைய கோப சமயத்திலோ, தரித்திர வேளையிலோ, செலவுக்குத் திக்குமுக்காடுகையிலோ, துக்க சமயத்திலோ கவனித்து அதுதான் அவன் குணம் என்று நிதானித்து விடக்கூடாது. கோப சமயத்தில் தன் அறிவை அவன் மறந்தபோது அவனைமூர்க்கன் என்று குறித்துக் கொள்வதா? பிறகு அவன் எவ்வளவோ சாந்தஸ்தனாக இருக்கலாம். ஒருவன் ரதிசமயத்தில் காமாந்தகாரனாக இருக்கலாம். அதுகொண்டு அவனைக் காமியென்று பழிப்பதா? பின், அவன் பெரிய வேதாந்தியாயிருக்கலாம். ஒருவன் தன் செலவுக்கே வழியின்றி எங்கும் கடனாகக் கிடந்து தவிக்கையில் முன்பின் சொல்லாமல் திடீரென்று ஒருவர் தன் மனைவி, மக்களோடு விருந்தாளியாய் இரண்டு வாரத்திற்குக் குந்திக்கொண்டால்—அதுவும் காபி பலகாரத்தோடானால் அவன் எப்படி சமாளிக்க முடியும்? ஓயாத இருமலில் அவஸ்தைப்படும் தன் குழந்தைக்குக் கால்படி பால் வாங்கித் தரக் கதியற்றுத் தவித்த அவன் இவர்களுக்குப் பாலும் காபியும் படைக்க எவ்வளவுக்குக் கண் விழி பிதுங்கக்கூடும்? குடும்பத்துடன் புறப்படுகிறவர்கள் முன்னதாகக் கடிதமூலம் அறிவித்து, அவ்விடத்திய சமய சந்தர்ப்பங்களைத் தெரிந்துகொண்டு, அதன்பின் அவர்கள் வரும்படி எழுதியதற்குமேல் புறப்படுவதே சரி. அவ்விதமின்றித் திடீரென்று வந்து குந்திக்கொண்டு அதில் அவன் தத்தளிக்கையில்—அவனைப்பற்றி பந்துக்களை உபசரியாதவனென்றும், மிகவும் செட்டுக்காரனென்றும், தூற்றுதலும் கோபித்தலும் பொருந்துமா? இவ்விதம் தத்தளித்தவன் தன்கையில் பணம் தாராளமாக இருந்தபோது எத்தனையோ பேர்களை உபசரித்தவனாக இருக்கலாம். இப்போதுள்ள கஷ்ட நிலையிலும் அவன் எதிர்பார்த்த பணம் அவன்கைக்குக் கிடைத்து விடுமாயின் உடனே நெய்யும் சக்கரையும் மாவும் வாங்கிப் பக்ஷணங்கள் செய்து உபசரிக்கக் கடைக்கு ஓடுபவனாக இருக்கலாம். அவனது தாராளமான கைவற்றிக் கிடக்கையில் அவனைப்பற்றி அவன் கருமியென்று துவேஷிப்பது அநியாய நிந்தையாகும். ஒருவன் தன் வீட்டின் பல தொந்தரையாலும், வீட்டிலுள்ளோர் பிணியால் நொந்து படுவதாலும் அதிக துக்கிதனாக இருக்கையில், அந்த வேளையிற் சென்று உட்கார்ந்து கொண்டு நெடுநேரப் பேச்சைத் தொடங்கினால், அவன் வந்தவர்களோடு எவ்விதம் ஸந்துஷ்டியாய் வார்த்தையாட இயலும்? அவன் உள்ளத்தில் மறைத்த துயரத்துடன் சகித்தபடியே பத்து வார்த்தைக்கு ஒரு வார்த்தையாகப் பதில் சொல்லுகையில் அவன் தன்னுடன் சரிவரப் பேசவில்லையென்று குறை கூறுவது தர்மமா? அவனுடைய துயரம் தீர்ந்து சந்தோஷமாக இருக்கும் காலத்தில் அவன் எவ்வளவோ மிருது மதுரபாஷிதனாய் சரஸகுண முன்னவனாய் இருக்கலாம். ஆதலின், எல்லா சமயத்திலும் பிறரது குணத்தை நிதானித்து விடுவதென்பது பொருந்தாது. அது பெருந் தவறாகும்.

யோக்கியதையின் உயர்வு.

இவ்வுலகில் மன்னுயிர்களுக்கு மகுடமும் மகிமையும் அவரவர்களுடைய யோக்கியதையே. மனிதர்களுக்கு எல்லாப் பேறுகளிலும் நற்குணமே பெரும் பேறாகும். அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்தும் இதுவே; அனைவரும் உள்ளமுவந்து அங்கீகரிக்கத்தக்க ஆஸ்தியுமிதுவே. யோக்கியதை எந்தெந்த நிலைமைக்கும் பெருமை யுண்டாக்கும்; எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியையும் உயர்த்தும். சற்குணம் செல்வத்திலும் அதிக செல்வாக்குள்ளது. பிரசித்தி பெறவேண்டுமென்ற பேராவலில்லாமலே பலவிதமான கீர்த்தியையும் உண்டாக்கும். சற்குணமுண்டானால், அதனோடு ஸகல விதமான செல்வாக்குமுண்டாகும். எப்படியெனில், யோக்கியதை, உண்மை, மாறுபடாத மனவுறுதி— ஆகியஇச்சற்குணங்களேசெல்வாக்கை யுண்டாக்குகின்றவை. மனிதர்களுக்கு இச்சற்குணங்களுள்ளவரிடத்திலுண்டாகும் நம்பிக்கையும் மதிப்பும் மற்றெந்தக் குணமுள்ளவரிடத்திலும் உண்டாவதில்லை.

ஃ

யோக்கியதை யென்பது மனிதருடைய நல்ல சுபாவத்திற்கு அடையாளமாம். அது வடிவெடுத்து வந்த நீதிநெறியேயன்றி வேறல்ல. நற்குணமுள்ளவர்கள் மற்றெல்லோரும் தத்தம் ஹிருதயம்போலவே நம்புவதற்கு இடமாயிருப்பது மாத்திரமேயன்றி, செம்மையாய்அரசாளப்படும் ராஜாங்கமனைத்திலும் உபயோகமான காரியம் யாவற்றையும் நடத்துவதற்குச்சிறந்த முதற்காரணமாகிறார்கள். ஏனெனில், முக்கியமாய் இவ்வுலகத்தை யாள்வன நீதி நெறிகளேயன்றி வேறல்ல. யுத்தாங்கத்திலும் நீதி பலத்தால் எவ்வளவு காரியம் சாதிக்கலாமோ, அதில் பத்திலொரு பங்குதான் தேகபலத்தால் சாதிக்கமாளுமென நெப்போலியன் மொழிந்தார். ஒரு தேசத்தின் பலம், தொழில், முயற்சி, நாகரீகம் இவை அனைத்திற்கும் ஆதாரம் அங்குள்ள மனிதர்களுடைய நடத்தையே. தேச ரக்ஷணத்திற்கு மூலாதாரம் இதுவே. சட்டதிட்டங்களும் நிபந்தனைகளும் இதினின்று உற்பத்தியானவையே. கடவுளுடைய கோணாத கருணையால் இந்தப் பிரபஞ்சத்தில் ஸகல தேச ஜாதி மதஸ்தர்களுக்கும் அவரவர் நடத்தைக்கு ஏற்றவண்ணம் இன்ப துன்பங்கள் அமையுமேயன்றி மற்றப்படி அமையா. ஒரு காரியமுண்டானால் அதற்குக் காரணமுண்டென்பது எப்படி நிச்சயமோ, அப்படியே அவரவருடைய நடத்தையும் அததற்கேற்ற பயனை விளைவிக்குமென்பது நிச்சயம்.

ஃ

ஒருவன் மற்றவர்களைப்போல் அறிவில் பண்படாதவனும், அற்பசாமர்த்தியனும், தனஞ்சிறியனுமா யிருப்பினும், அவன் நடத்தையட்டும் மாற்றுயர்ந்திருக்குமானால், தொழிற்சாலையோ, வர்த்தகசாலையோ, மந்திராலோசனைச் சபையோ எவ்விடத்தி

என்னவோ பாவம்! ஏமாறிய ஏழை! என்னென்னவோ நினைத்து ஏங்குகிறான். கடவுளும் அவனையே சோதிக்கிறார். இருந்த வீடும் இடிந்து அவன் தலையில் விழுகிறது. ஆற்றுவாருமில்லை, தேற்றுவாருமில்லை.

லாயினும் அவனுக்குச் செல்வாக்கு அதிகமாகும். அறிவு மிகுந்தவர்களைக் கண்டு வியப்படையலாமென்றாலும், யோக்கியதையின் விசேஷ குணமிருந்தாலன்றி அவர்களிடத்தில் நம்பிக்கை கொள்ளலாகாது. ஏனெனில், அறிவு மிகுந்தவர்களிற் பலர் நயவஞ்சகர்களாயும், பெரிய மோசக்காரர்களாயும், நம்பிக்கைத் துரோகிகளாயும், கபட நட்பினர்களாயும், கற்பழிப்போராயும், பாமசண்டாளர்களாயும், ஏமாற்றுவோராயும் இருந்திருக்கிறார்கள்; இப்போதும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் யோக்கியதை என்பது மருந்துக்குமில்லை. ஆனால், அவர்களைத் தான் பரிசுத்தரெனவும் யோக்கியர்களெனவும் உலகம் நம்பி மோசம் போகின்றது. முக்கியமாய் ஒரு மனிதனைச் சிறப்பிப்பது அவனது யோக்கியதையினது நற்குணத்தின் வலிமையே. கல்வி, குணநலம் இவற்றின் உதவிமட்டும் இருக்குமானால், எவ்வளவு அற்ப சாமர்த்தியமாயினும், மற்றெந்தப் பொருளின் உதவியும் சிறிதுமில்லாமலே, உலக வியாபார விஷயத்தில் எவ்வளவு போட்டிகளும் பொறாமைகளுமிருந்தாலும் அவற்றின் நடுவே—தாமே—மேலுக்கு உயர்ந்து எவ்வகை அருந்தொழிலும் செய்யமாட்டும்.

ஃ

அறிவே பலமென்பார் சிலர்; ஆசாரமே பலமென்பார் சிலர். இவ்விரண்டினுள்ளும் இரண்டாவதிலேயே உண்மை அதிகம் இருக்கிறதென்னவேண்டும். ஆசாரமில்லாத மனமும், நல்லொழுக்கமற்ற அறிவும், சுகுணமில்லாத சாமர்த்தியமும் ஆகிய இவையெல்லாம் தத்தம் வழியில் வலிமை யுள்ளவைகளேயாயினும், அவற்றின் வலிமை விசேஷமாய்த் தீமை விளைவிப்பதற்குமட்டும் பலமாகுமேயொழிய மற்றப்படியாகா. அவை நமக்கு அறிவு புகட்டினாலும் புகட்டும். விநோதமாகப் பொழுதுபோக்காயிருந்தாலுமிருக்கும். ஆயினும், முடிச்சுமாரியின் கைத்திறமும், வழிகொள்ளைக்காரனுடைய குதிரையேற்ற நலமும் எவ்வளவு வியக்கத்தக்கவையோ அவ்வளவே சிலவேளை வியக்கத்தக்கவையாகும்.

ஃ

உண்மை, மனநிறை, நன்மையாகிய இவைகளே ஒருவனுடைய குணங்களில் மிகவும் முக்கியமானவையாம். இக்குணங்களோடு ஒருவனுக்கு மனவுறுதியு மிருக்குமானால், அவனுடைய வல்லமைக்குத் தடையொன்றுமில்லை. அவன் நன்மை செய்வதற்கும் சலிக்கமாட்டான்; தீமைகளை வெல்லவும் பின்வாங்கமாட்டான். வருத்தங்களையும் கஷ்டநிஷ்டூரங்களையும் உத்தரிக்கவும் வல்லவனாகிறான். மனநிலை மாறாத நேரியோனுடைய நற்குணம் நன்றாகப் பிரகாசிப்பது அவனுடைய கஷ்டகாலத்திலேதான். மற்றவையெல்லாம் துணையில்லாது தவறிப்போக, மனநிறையும் ஆண்மையுமே அப்போது அவனுக்கு முக்கியாதாரமாகின்றன. ஃ

எர்ஸ்கின் பிரபு பின்வருமாறு கூறுகிறார்:—தருமமென்று என் நெஞ்சு சொல்வதை எப்பொழுதும் செய்வதும், பின்பு அதனால் விளையும் பயனைக் கடவுள் திருவுள்ளத்தின் செயலென்று எண்ணிக்கொள்வதும் இளமையிலேயே நான் கைக்கொண்ட முதற் கற்பனையும் புத்தியுமாம். பெற்றோர் கற்பித்த இப்பாடத்தின்

உனக்குத் தெரியாவிட்டால் உளறாதே. தெரிந்ததுபோல் மறுத்துப் பேசாதே. உன் கர்வபுத்தியை வெளியிட்டுத் திரியாதே.

ஞாபகமும் சாதனையும் இதுகாறுவரைக் கும் என்னுடனே வரும். இன்றளவும் அதை அனுசரித்துக்கொண்டு வந் தேன். அதைக் கைக்கொண்டு எப் பொழுதேனும் எனக்குக் கஷ்டம் வந்ததென்று குறைகூற நிமித்தமொன் றுமில்லை. மேலும் செல்வமும், சாம் பிராச்சியமும் பெறுவதற்குரிய வழி அதுவேயென்று கண்டேன். நீங்கள் அனுசரிக்கவேண்டிய வழியும் இவ் வழியே யென்று என் பிள்ளைகளுக் கும் காட்டுவேனென்றார்.

ஃ

நன்னடக்கையுடைமையே இவ் வுலகில் உயர்ந்த பேறென்று ஒவ் வொரு மனிதரும் அதை நாடுவது கடன். தகுந்த சாதனங்களால் அதைப் பத்திரமாய்க் கைக்கொள்ளச் செய்யும் யத்தனமே அவனுக்கு முயற்சிசெய்ய மூகாந்தரத்தைக் காட் டும். ஆண்மையைப்பற்றி அவனுக் குள்ள அபிப்பிராயம் உயர உயர, அம்மூகாந்தரமும் நிலைபெற்றுத் திட முறும். உயர்ந்த ஒழுக்கத்தின் அளவை உள்ளபடி உணர நாம் வல் லவரல்லாதிருப்பினும், அதைக் கைக் கொள்வது நல்லது.

ஃ

மேல் நோக்கமில்லாத வாலிபன் கீழ்நோக்குவான். பணிந்த நடை யும் உயர்ந்த நோக்கமும் உள்ளவனு யிரு; அவ்விதம் இருந்தால் உனக்குத் தாழ்மையும் மேன்மையும் உண்டா கும். என்றும் மனவலி குலையவேண் டாம். ஆகாயத்தை இலக்காய்க் குறிப் பவன் எய்யும் அம்பு, மரத்தை இலக் காய்க் குறிப்பவன் எய்யும் அம்பைப் பார்க்கிலும் மிக உயரப் பறக்கு மன்றோ? எப்பொழுதும் நோக்கம் உயர்தரமாகவே இருக்கவேண்டும்.

ஃ

(1) தன்னிடத்தில் விளங்கிய சாத்விகமனைத்திலும் குறையாமல், பின்னும் ஆயிரமடங்கு அதிகமுண் டென நெஞ்சார நினைவார அறிந் திருப்பவனும்,

(2) உள்ளமும் ஒழுக்கமும் ஒத்தி ருப்பவனும்,

(3) நால்வருடன் கலந்து உறவா டும்பொழுது செய்யும் உபசாரமனைத் தோடுங்கூட, பெருந்தன்மையுள்ள மனத்தில் முளைத்தெழுந்த செடியிற் பூத்த மலர்போலும் மிகுந்த மரியா தைகள் இணைந்திருக்கப் பெறுவோ னும்,

(4) இவ்வண்ணம் சாது வென் னும் சிறப்புப் பெயரை ஏசுவாரின்றி அணிந்துகொள்வோனும்,

ஆகிய இத்தன்மையனைத் தவிர எப்பொழுதும் பெருமைபெற வல்ல வர் வேறு யார்? ஃ

புத்தி வைபவத்திற்கு உருவமைவது அந்தரங்கத் தில்; நல்லொழுக்கத்திற்கு உருவமைவது இப்பிரபஞ்ச மாகிய போர்க்களத்தில்.

ஃ

ஒரு தேசத்தை உயர்த்துவதும், ஒரு தேசத்தைத் திடப்படுத்துவதும், ஒரு தேசத்துக்கு மகத்துவம் உண்

ஒருவனை வாவென்று உபசரிக்கக் கூடிய ஒரு இடமிருந்தால், உடனே இன்னொரு இடமும், மற்றொரு இடமும் அடுக்கடுக்காகப் புறப்படும். உபசரிக்க ஒருவர்கூட இல்லாத சமயத்திலோ எந்தஇடத்திலிருந்தும் எவரும் அழையார்.

டாக்குவதும், அதன் அதிகாரத்தைப் பரப்பி அதற்குச் செல்வாக்குண்டாக்கிப் பிறர் அதற்கு அடங்கி அதை அபிமானிக்கும்படிச் செய்வதும், லக்ஷோபலக்ஷம் பெயர்களுடைய இருதயத்தை வணங்கி அதற்குமுன் இதர தேசத்தார்கள் சர்வமடங்கித் தலை வணங்கும்படிச் செய்வதும், கீழ்ப்படியச் செய்வதற்கு ஏற்ற கருவியும், மேன்மை பெறுவதற்கு மூலாதாரமும், ஒரு தேசத்தாருக்குமெய்யான சிங்காதனமும்--கிரீடமும்-செங்கோலுமாகிய இவையெல்லாம் குலப்பெருமையாலும் அமைந்ததல்ல; நாகரிகத்தாலும் வரப்பெற்றதல்ல; புத்தி சாமர்த்தியமொன்றாலும் அமைந்ததல்ல;——யாவும் நல்லொழுக்கத்தால் அமைந்தஆட்சிகளேயாகும். மனிதர்களுக்கு யோக்கியர்களாயிருக்கச்செய்யும் நல்லொழுக்கமே என்றும் போற்றத்தக்க மெய்யான குலவிருது வித்தையாகும். தாம் யோக்கியத்தைச் சரிவர அனுசரித்து வருவதைப்பற்றித் தம்மையே ஒவ்வொருவரும் கேள்வி கேட்டுக்கொண்டு உயரக்கடவர்.

சிலருடைய ஜாதகத்தின் அமைப்பு எப்பொழுதும் பத்துப்பேர்களுடன் நிறைந்து நிற்பதாகவே அமைந்துவிடுகிறது. தமமுடைய அதிகாரம் எங்கும் செல்ல, தாம் அனைவரையும் அடக்கி ஆள, தமது அன்பில் கட்டுண்டு தம்மைச்சுற்றி ஆர்வத்துடன் மற்றவர் சூழ்ந்து கிடக்க, இவ்விதமான வைபோகத்துடனேயே செல்வாக்காக எங்கும் எவரும் மரியாதைசெய்து வணங்க வாழ்கின்றனர். இது ஒரு அதிர்ஷ்ட ரேகை. இது இறைவனின் அருள்.

எவ்வளவோ செட்டாக இருந்தவர் நேற்றுக் கடவுளிடம் போய்விட்டார். ஒரு காசும் செலவிடாத அவர் தன்னோடு என்ன வாரிக்கொண்டு போனாரோ?

தன்னடக்கம் உள்ளவர்களுக்கும் டாம்பீக மனிதர்களுக்கும் எவ்வளவு வித்தியாஸம்? டாம்பீகத்திற்குப் பொய்யும் மோசமும் துணை.

கல்வியும் குணங்களும்.

(ஸ்ரீமான் ஸி. ஆர். ரெட்டிகாருவின் வாக்கு.)

இராஜீய வியவகாரமென்பதென்ன? ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்குமுள்ள சம்பந்தத்தையும், அதே மனிதனுக்கும் ஜனஸமூகத்திற்கு முள்ள சம்பந்தத்தையும் பற்றிய இயக்கங்களே ராஜீய வியவகாரமாகும். ஜன ஸமூகத்தைப்பற்றிய பிரச்சினைகளில் எல்லோருக்கும் சொந்தமுண்டு. ****

ஃ

கலாசாலைகளில் படிக்கிற காலத்தில் மாணவர்கள் ராஜீய விவ காரங்களில் சம்பந்தப்படக் கூடாதென்று சொல்லுகிறவர்களும், ராஜீய வியவ காரங்களை அவர்கள் தெரிந்துகொள்ளலாமென்று சொல்லுகிறார்கள். ***

ஃ

உங்களுக்குத் திருப்தி ஏற்படும்வரையில் நீங்கள் ராஜீய வியவகாரங் களைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். அவ்விஷயங்களைப்பற்றி நீங்கள் சிந்தனை செய்யலாம். காரியத்தில் நீங்கள் இறங்காதவரையில் அவ்விஷய மாகச் சிந்தனை செய்வதைப்பற்றி ஒருவரும் குறைகூற மாட்டார். *** இவ் வளவுதூரம் ஒப்புக்கொள்வது உலகில் வழக்கம். தேசபக்தி சட்டத்திற்கு விரோதமான ஒரு உணர்ச்சி என்று அவர்கள் சொல்லாதிருப்பதே பெரிய அநுகூலம். ** ஃ

கல்வி என்பது என்ன? மாணவன் குணசம்பன்னனாகும்படி செய்ய வேண்டியதே கல்வி போதிப்பதின் லட்சியம்.

நடத்தையன்றியில் குணம் எப்படி உண்டாகும்?

ஃ

தேசிய இயக்கமானது கேவலம் லௌகிக சாதகங்களை மாத்திரம் உத் தேசித்ததல்ல; சன்மார்க்க அபிவிர்த்திக்கும் அது இன்றியமையாதது.

சிலருக்குப் பெண்கள் மீதே நாட்டம். அதற்குத் தக்கபடி அவர்களுக்கு அல்ப புத்தியேயிருக்கிறது அவர்களின் கண்கள் நங்கையரை நடுங்கச் செய் கின்றன. ஆனால், யோக்கியர்கள்போல் தோன்றிக் கற்பு நாசம் தேடுகின்ற பரம சண்டாளர்களைவிட, இவர்கள் ஒருவகையில் மேல்தான். ஏனெனில் இவர்களின் குணம் பார்த்தவுடனேயே தெரிந்து எச்சரிக்கையாகிவிடுவதற்கு முடிகின்றதன்றோ? யோக்கியர்கள்போல் நடிப்போரின் குணம் அவ்விதம் எளிதில் அறிவதற்கு முடியவில்லையே!

வந்தால் பெரு வெள்ளம். வற்றினால் ஆறு சுடும்படியான மணல். இறந் தவனுக்காக 100-பேர் வந்து அழுவார். அவன் பிராணனை விட்டபோதோ இரண்டொருவருக்குமேல் எவரும் அருகில் இருந்திரார்.

தொழில் துறைகளில் உண்மை தவறாமை.

உண்மையை மறைப்பது எளிதல்ல; பொய் சொன்ன பின்பு உண்மையையே நாம் பேசியிருக்கலாகாதா என்று பலருக்கும் தோன்றுவது இயல்பு. வியாபாரத்தில் பொய் சொல்லுகிற வியாபாரிகள் நற்பெயர் பெறுவதில்லை. ஒரு கடைக்காரன் உண்மையான விலை சொல்லுகிறதில்லை யென்று தெரிந்தால் அவனிடத்தில் ஒருவரும் நம்பிக்கை வைக்கமாட்டார்கள்; சரக்கும் வாங்க மாட்டார்கள். அத்தகைய இடத்தில் தாங்கள் கொடுத்த விலை சரியானதோ அல்லவோ என்கிற சந்தேகம் இருந்துகொண்டே யிருக்கும். உண்மையே பேசுகிற வியாபாரியை யாவரும் நன்கு மதிப்பார்கள். அவன் சொல்லுவதை யெல்லாம் உண்மையென்று நம்புவார்கள். அவனிடத்தில் உண்மை இருப்பதாகத் தெரிந்தபோது ஜனங்களெல்லோரும் அவனிடத்திலேயே சாமான் வாங்குவார்கள்.

ஃ

உண்மையான வியாபாரி என்று நன்கு மதிக்கப்பட்டவன் எந்தச் சாமான் நல்லதென்று எடுத்துக் கொடுக்கிறானோ அதையே அவன் சொல்லுகிற விலை கொடுத்து வாங்குவார்கள். ஒரு துணியை யெடுத்து அது சாயம் நிற்குமா, உடை தாளுமா என்று ஒருவர் கேட்டால், வியாபாரி, ஆம், இல்லையென்று சொல்லவேண்டுமேயல்லது வேறுவிதமாக உண்மையை மறைத்துப் பேசக்கூடாது.

ஃ

தமக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் உண்மை பேசுவது யாவருக்கும் எளிது. தமக்கு நஷ்டம் உண்டாகிறதா யிருக்கும்போது உண்மை பேசுவதுதான் அரிது. உண்மையே பேசவேண்டு மென்கிற உறுதி இருந்தால் அந்த உறுதியை முடிப்பது பிரயாசையல்ல. ஆயினும் இவ்வாறு நடப்பது அருமையே. மரியாதையுள்ள வியாபாரிகளா யிருந்தபோதிலுங்கூட மோசம் செய்கிற வர்த்தகர்கள் அநேகருண்டு. தேவபக்தியுள்ளவர்கள் பொய் சொல்லுவதுதான் அதிகமாக இருக்கிறது.

ஃ

வியாபாரிகள் தங்கள் சரக்கு விலையாகும் பொருட்டுப் பிரகடன பத்திரங்களை அச்சிடுவதில் சொல்லியிருக்கிற பொய் இவ்வளவென்று நிதானிக்க முடியாது. சரக்குகள் அவைகளைச் செய்திருக்கிற சாமான்களாலும், நிறத்தினாலும், பலத்தினாலும், வேலைத்திறத்தினாலும் விலை மதிக்கப்படுகின்றன. ஜனங்களுக்கு இன்ன சரக்கு இன்ன விலையென்றும், இது உயர்ந்தது, இது தாழ்ந்தது என்றும் தெரியாது. கெட்டி சாயமான சீட்டியைத் தகுந்த விலை கொடுத்து வாங்குகிறதில்லை. விலை சகாயமா யிருக்கிறதென்று சாயம் போகிற சீட்டியையே வாங்குவார்கள்.

உன் பத்து விரலே உன் துணை. மற்ற துணைகள் அதற்குப் பிறகு தான்.

இவ்வாறான தெரியாமையினாலேயே உதவியற்ற சரக்குகள் நல்ல சரக்குகளாக எங்கும் விலையாகின்றன.

ஃ

உண்மைக்கு உண்மையே அலங்காரமாகும். நம்முடைய வாழ்நாளெல்லாம் சுகமாயிருக்க வேண்டுமானால் உண்மையை உரைத்து நமது கடமையைச் செய்யவேண்டும். நமது ஆசாபாசங்களும் மனோவிகாரங்களும் ஒரு பக்கம் கிடக்க, உண்மையானது கடமையோடு மாத்திரமே சிநேகம் செய்யும். நாம் தற்காலத்தில் கஷ்டப்பட்டபோதிலும் மனசாக்ஷி ஒத்துக் கொள்வதாயிருந்தால் அதனால் உண்டாகிற சந்தோஷம் வேறெதினாலும் உண்டாகாது. நியாயமாகவும் சத்தியம் தவறாமலும் நடந்தால் அதைக் கண்டு பணம சம்பாதிக்கத் தெரியாதவனென்று யாவரும் இகழ்வார்கள். அசத்தியம் செய்தே பணம் சம்பாதிக்க வேண்டுமென்றும், உண்மை உரைத்தால் பணம் அகப்படாதென்றும் ஜனங்கள் நினைப்பது என்ன அநியாயம்! திரவியம் ஸம்பாதிக்கும் பொருட்டே இவ்வுலகத்தில் உயிரோடிருக்கிறோமென்றும், அதைவிடப் பெரிய காரியம் இல்லையென்றும் மதியீனர்கள் கருதுகிறார்களே!

ஃ

ஒருவன் மடியில் பணம் இருந்தால் அவனுடைய முயற்சியின்றியே யாவரும் அவனைச் சிநேகிப்பார்கள். இரும்பு காந்தத்தில் ஒட்டிக்கொள்வதுபோல வந்து ஒட்டிக்கொள்வார்கள். ஆனால், பணம் இல்லாமல் உண்மையும் சத்திய குணமு முள்ளவனிடமோ எவரும் நெருங்கார்கள். அவனுடைய உத்தம குணத்தில் பூரித்து நிற்கும் இரண்டொருவரோ அவனுடன் குலாவுவர். இந்த இரண்டொருவர் குலாவுதல் என்றைக்கும் நீடித்திருக்கும். பணத்தின் பொருட்டுக் குலாவியவரோ பணம் செலவழிந்தவுடன் மறைந்துவிடுவர். நாளை உணவுக்குவகையில்லாதஎத்தனையோ சத்தியவந்தர்களை எத்தனையோ உத்தமர்கள் போற்றித் துதிசெய்து நேசமாயிருப்பதைப் பல இடங்களில் காண்கிறோம்.

ஃ

வர்த்தக விஷயத்தில் முதலாளியினுடைய சொந்தச் செலவு குறைவாயிருக்க வேண்டும். நல்ல விலை கொடுத்துத் தருந்த சரக்கை வாங்கி விற்கவேண்டும். தன்னுடன் சேர்ந்து உழைப்பவர்களிடமும் உண்மையாய் நடக்கவேண்டும். எதிலும் அதிக முதல் குவித்துவிட்டு, மற்றொரு செலவுக்குப் பணமில்லாமல் ஏங்கக் கூடாது. பணம் வேண்டுமானால் வேலையை நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். வேலையாட்கள் சந்தோஷப்படும்படி சரியான சம்பளங்கள் தரவேண்டும். சரக்கு உபயோகமற்றதா யிருந்தால், மோசம் போனவர்கள் மறுபடி கடைக்கு வரார்கள். உண்மை தவறாத வியாபாரி எங்கு கடைவைத்தாலும் வியாபாரம் லாபமாகவே நன்றாக நடக்கும்.

ஆபத்தான மனிதர்கள் சிலருண்டு. அவர்கள் எப்பொழுது அவன் ஏமாறுவான் — நாம் உள்ளே நுழையலாம்—என்று வெகு பக்குவமாய்த் தன் விரோதியினிடத்துங்கூடப் புன்சிரிப்பு சிரித்துக் காத்திருக்கிறார்கள். சில சமயங்களில் வலியவும் நுழைய வருகின்றனர். ஆனால் எச்சரிக்கையுடனுள்ள மனிதனோ விழித்தபடியே இருந்து இவர்களை உள் வரவொட்டாது துரத்திவிடுகிறான். சற்று கண் மூடினோ வந்தது தொல்லை.

உணவின் தன்மையும் உபயோகமும்

இயற்கையான உணவுப் பொருள்களுள் பாலொன்றே சிறந்ததாகும். நாவில் ஊறும் உமிழ் நீரும், ஈரலி லிருக்கும் பித்த நீரும், கண்ணீர் முதலியனவும் ஆகிய இவை யெல்லாம் நாம்பருகும் பாலினின்றும் உண்டாகின்றன. அன்றியும், பால் தேகத்தில் உஷ்ணத்தை உண்டாக் கித் தேகத்தின் உறுப்புகளை அசையும் படி செய்கின்றது. இவை யெல்லாம் பால் ஒன்றை மட்டும் உண்பதினாலே யுண்டாவனவே யல்லாமல் மற்றப்படி வேறுவிதமாய் உண்டாவன வல்ல. பாலானது தேகத்தின் கூறுகளாகிய எல்லாவற்றையும் உண்டாக்குவது மல்லாமல், சிறு கன்றைக் கடாரியாக வும், கைக்குழந்தையைச் சிறுபிள்ளை யாகவும் செய்விக்கின்றது. பாலில் பெரும்பாகம் ஜலமே; அத்தனை ஜலமும் நமது தேகத்திலுள்ள திரவ பதார்த்தம் உண்டாவதற்கு அவசியம் வேண்டும்

ஃ

பாலின் ஆடை அத்தனையும் கொழுப்பாகும். நீராவி யந்திரங் களுக்கு நிலக்கரி எப்படியோ அப் படியே நமது தேகத்தில் திடனையுண் டாக்கி இயங்கச் செய்வதற்கு இந்தப் பாலாடை காரணமாகும். தயிரானது தேகத்திலுள்ள தசை, தோல், மயிர், இரத்தாசயம், ஈரல் முதலியவற்றை வளர்ப்பதற்கும், நாள்தோறும் தேகத் தினின்று கழிந்து வெளிப்படும் பற்பல வாகிய பொருள்களுக்குச் சரியாகச் சென்று தேகத்தைப் போஷிப்பதற் கும் ஏற்றதாகும். தயிர்த் தண்ணீரில் உப்பு முதலிய ஜீரணம் செய்யத்தக்க பதார்த்தங்களும், எலும்பை யுண் டாக்கத் தக்க பொருள்களு முண்டு. அது பாலாடையைப் போலவே தேகத்தில் அனலை யுண்டாக்கிப் பல னைக் கொடுக்கும்.

ஃ

நாம் உணவோடு கலந்துண்ணும் பொருள்களுள் உப்பு உயிர் வாழ்க் கைக்கு இன்றியமையாதது. உண்ட உணவு சுகமாய் ஜீரணிக்கிற சிறு குழந்தைக்கு அவசிய மன்று. உப்பை உணவோடு உட்கொண்டால் அதனால் இரண்டு பொருள்கள் உண்டாகும்; அவற்றுள் ஒன்று நாம் உண்ட உணவை ஜரிக்கச் செய்கிற புளிப்பு ஜலம் உண் டாக உதவுகிற ஓர் புளிப்பாம்; மற் றொன்று, உணவானது ஜரித்து ரச மாவதற்கு முன்பே அதை இவ்வாறு பிரியும்படி அதனோடு சேரும் பித்த ஜலம் என்னும் லவணரசமாம். நாம் உண்ணும் உணவுப் பொருள்களில் நமது தேகத்தின் சௌக்கியத்திற்கு வேண்டிய அளவு உப்பின்மையால், நாம் உண்ணும்போதெல்லாம் உப்பை உணவுப் பொருள்களோடு கலந்து புசிக்க வேண்டியதாகிறது.

ஃ

கடுகானது உணவோடு சேர்க்கப் படும் பண்டங்களுள் அதிக சாதாரண

ஏழை யென்று நாம் இரங்கப்போக, அவர்களோ அளவுக்கு மிஞ்சிப் பிடுங் கப் பார்க்கிறார்கள் என்கிறார் ஒருவர். தயாளுவைக் கண்டால் அதிகம் நெருங்கு வது எங்கும் இயற்கையே. அதற்காகக் கோபித்தல் தர்மமல்ல.

மானது. அதைச் சிறிது உட்கொண்டால் பசியை யுண்டாக்கி ஜீரண சக்தியை விர்த்தி செய்யும். ஆனால் அளவின்றி அதிகமாக உட்கொண்டால் இரைப்பையில் மிக்க எரிச்சலை யுண்டாக்கி அதிக தீமையை யுண்டு பண்ணும். கடுகு நல்ல மருந்தாகும்.

ஃ

மிளகானது உண்ணும் உணவுக்குச் சுவை யுண்டாகச் செய்கின்றவைகளில் ஒன்றாகும். ஆனால் அதை அதிகமாக வழங்கினால், அது அன்னாசயத்தைக் கெடுத்து விடுகிறது.

ஃ

மனிதர் உட்கொள்ளும் உணவு எங்கும் ஒரே வகையாய் இருப்பதில்லை. அவற்றின் செய்பாகமும் இடத்திற்குத் தக்கபடி பேதப்படுகிறது. சென்னை மாகாணத்தின் உணவு பம்பாய் மாகாணத்தில் பேதப்படும். ஐரோப்பியரின் உணவு வேறு. அயர்லாந்திலுள்ள அநேக எளியவர் உருளைக்கிழங்கும் எடுத்த பாலும் புசித்து ஜீவிக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் வெகுவாய் ரொட்டியை உண்ணுகின்றனர். அரபி தேசத்தார்களுக்குப் பேரிச்சம்பழமும் தாமரைக்கிழங்கினால் செய்த ரொட்டியுமே தவிர வேறு உணவில்லை. சிலருக்கு மச்சமே உணவாயிருக்கிறது. தென் அமெரிக்காவில் அநேகர் எருமை மாட்டு மாமிசத்தையே புசித்து வருகிறார்கள். கீழ் இந்தியா தீவிலுள்ளவர்கள் பனை மட்டைகளிலுள்ள ஜவ்வையே உணவாய்க் கொண்டிருக்கிறார்கள். பயிர் செடி மரம் முதலியவைகள் ஒன்றும் வளர மாட்டாத சீதபூமியில் உள்ளவர்கள் திமிங்கிலக் கொழுப்பையும், இன்னும் தங்களுக்குச் சுலபமாய்க் கிடைக்கத்தக்க மாமிசங்களையும் உட்கொள்ளுகிறார்கள்.

ஃ

மற்ற ஜந்துக்களுக்கு அநேகமாய் இரண்டொருவகையான உணவுதான் உண்டு; அதனால் அந்த ஜந்துக்களெல்லாம் அவைகளுக்கு இரை எங்கே விசேஷமாய் இருக்கிறதோ அவ்விடத்திலேதான் ஸாதாரணமாய் அகப்படும்.

ஃ

மனிதர்களுக்கோ ஆகாரம் எங்கும் அகப்படும். பூமியின் மேலாவது, பூமியின் கீழாவது, கடலிலாவது, ஆகாயத்திலாவது, பலவித பழங்களையும் இலைகளையும், விதைகளையும், கிழங்குகளையும், மிருகங்களையும், பக்ஷிகளையும், மச்சங்களையும், மனிதர்களுக்கு உணவுகள் நிறைந்திருக்கின்றன.

ஃ

இப்படி இவ்வுலகக் காட்சியை வெகு விநோதமாய் அலங்கரிக்கின்ற பலவித ருதுக்களையும், அந்தந்த ருதுக்களிலுண்டாகின்ற நானாவிதமான இலைகளையும் கனிகளையும் இவ்வுலகத்திலுள்ள உயிர்கள் சுகமாய் ஜீவிப்பதற்காகவே ஜகதீசன் உண்டு பண்ணியிருக்கிறார்.

ஃ

ஆடு மாடுகளுக்குப் புல்லை யளித்திருப்பது போலவும், பூச்சி புழுக்களுக்கு இலைகளை யளித்திருப்பது போலவும், நமக்கும் ஒரு வருத்தமுமில்லாமல் அடையத் தக்கதாய் ஆகாரத்தைக் கடவுள் உதவி யிருந்தால் மிக்க நலமென்று சிலர் நினைப்பார்கள்.

மனைவியின் மீதுள்ள ஆசையை இன்னொரு பெண்ணைக் கண்டுமோகித்து மறந்து விடலாம். ஆனால் தன் பெண்மீதும், குமாரன்மீதும் உள்ள ஆசையை மறக்க இந்த ஜென்மத்தில் முடியுமா?

மற்ற ஜந்துக்களைப் போலவே நாமும் அதே மாதிரியாய்ப் புசிப்பதும் தூங்குவதும் இறப்பதுமா யிருந்தால் அப்படியே இருந்திருக்கும். மன்னுயிர் வாழ்வோ அத்தன்மையதன்று. ஸகலமான விஷயங்களையும் செம்மையாய் ஆராய்ந்து அறியவும், நன்றாய் உழைத்து வேலை செய்யவும் நமக்குக் கடவுள் புத்தி வலிமையும் தேகவலிமையும் கொடுத்திருக்கிறார். அது மற்ற ஜந்துக்களுக்குக் கிடையாது. நம்முடைய மனதும் தேகமும் எவ்வளவு சுகமா யிருக்கிறதோ அவ்வளவு சீராய் அந்த வலிமையை நாம் உபயோகிக்கலாம.

ஃ

தேகவலிமையும் புத்தி வலிமையும் காரணமாக, பற்பல காட்டு மிருகங்களையும், மீன் முதலிய அநேக ஜல ஜந்துக்களையும் பிடிக்கும் விதங்களையும், பூமிகளைப் பண்படுத்தி விதை விதைத்து அறுவடை யாக்குகிற வழிகளையும், தங்களுக்கு வேண்டிய வேலைகளை எளிதில் முடிக்கும்படி ஆயுதங்கள் யந்திரங்கள் இவற்றை உபயோகிக்கத்தக்க மார்க்கங்களையும், பூமி அதிகமாய் விளையும்படி அதைச் சீர்படுத்தத்தக்க வழிகளையும், தங்களுக்கு உதவியான ஜந்துக்களை வளர்க்கத்தக்க விதங்களையும் மனிதர்கள் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சுபாவத்தில் புசிக்கக் கூடாமல் கடினமா யிருக்கிற பதார்த்தங்களை நெருப்பில் பாகம் பண்ணிப் புசிக்கப் பக்குவப்படுத்திக் கொள்ளுவதும பகுத்தறிவின் பயனே. தங்கள் தேசத்தில் உணவு பூர்த்தியாய்க் கிடைக்காவிட்டால் தேசாந்தரத்தி னின்றும் அழைப்பித்துக் கொள்வதும் புத்தியின் வலிமையால் தான். இப்படி மனிதர்கள் தங்கள் சரீரத்தைப் போஷிப்பதற்காகப் படுகிற பிரயாசமெல்லாம், அவர்கள் மனதிற்கு மிகவும் உற்சாக முண்டாக்கி, அவர்களை அதிகயுக்தியும்யோசனையும்உடையவர்களாக்கி, அந்த யுக்தியையும் யோசனையையும் வேறு காரியங்களிலும் உபயோகிக்க வல்லவர்களாகும்தன்மையில் வழி யுண்டாக்கிக் கொடுக்கிறது.

ஃ

கடவுள் தாம் மனுஷ்யர்களுக்குக் கொடுத்திருக்கிற வல்லமையையும் யுக்தியையும் செம்மையாய் உபயோகிக்கத் தெரிந்தவர்க ளாகும்படி 'பசி' என்ற ஒன்றையும் ஒரு தூண்டுதற் கருவியாய் அமைத்திருக்கிறார். பசியானது எக்காலத்திலும் எந்த மனிதனையும் உழைக்கச் செய்து, ஸர்வ வல்லவரின் நோக்கத்தைநிறைவேற்றுகின்றது. அந்த அரிய பசி யொன்று இல்லையாயின் முயற்சியும் இல்லை, உழைப்பும் இல்லை, கடைசியில் உலகமே இல்லை யென்பதாகவே முடியும்.

தங்களின் முயற்சி பலிதமடையாமற் போனாலும் வஞ்சகர்கள் அதை விடுவதில்லை. கடைசிவரையும் அடுத்திருந்து கெடுக்கவே பார்ப்பர்.

ஆரோக்கிய லாபம்.

உலகத்தில் எவ்விதத் தொழிலிலாவது நன்றாய்த் தேர்ச்சியடைந்தவர்களுடைய சரித்திர வரலாற்றை வாசித்துப் பார்க்கும்போது அவர்களிற் பெரும்பாலார் தேக ஆரோக்கியம் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். ஃ

பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போனபின்பு பிள்ளைகளுக்குப் பாடம் படிக்க வேண்டுமென்கிற கவலை இருக்கக்கூடாது. அவ்வாறே கடை கட்டிய பின்பு அந்தக் கவலை வியாபாரிக்குச் சற்றேனும் கூடாது. வளைந்த வில் சில காலம் நிமிர்ந்திருக்க வேண்டும். எப்போதும் வளைந்திருந்தால் பலவீனம் உண்டாகும். ஃ

நமக்கு உண்டாகிற வியாதிகளில் சரிபாதி நல்ல பல் இல்லாமையாலும், சோற்றையும் கறிகளையும் சீக்கிரமாக விழுங்குகிற மூடத்தனத்தாலும் நேரிடுகிறதாகத் தெரிகிறது. பல்லினால் நன்றாய்க் கடித்துச் சிதைத்துச் சாப்பிடுவதை விட்டுக் கோழிகள் தவிட்டை விழுங்குவதுபோல் சாதத்தையும் கறியையும் உண்பது மௌடீகம். புத்தியை விருத்தி செய்யப் பிரயாசைப்படுவது போலவே தேக சௌக்கியத்தைக் காப்பாற்றவும் முயலவேண்டும். ஃ

கவலையே நோய்க்கு ஹேது, கவலை அதிகரிக்கவே சரீர சுகம் குறைகிறது. வைத்தியனுக்குப் பணத்தைக் கொடுத்து அருவருப்பான மருந்தை வாங்குவதைப் பார்க்கிலும், வயல்களில் அலைந்து திரிந்து பணச்செலவின்றி சரீர சுகத்தைச் சம்பாதிப்பது நலம். ஃ

கத்தியைப் பார்க்கிலும் பேனாவுக்கு அதிக பலம் என்று லிட்டன் பிரபு சொல்லியிருக்கிறார். கத்தியில்லாவிட்டாலும் ராஜ்ய காரியங்கள் நடக்கும். பேனாமாத்திரம் இல்லாவிட்டால் ஒன்றும் நடவாது. பேனாவைஉபயோகிக்கப்புத்தி கூர்மை வேண்டும். புத்தி கூர்மைக்குத் தேக சௌக்கியம்இன்றியமையாதது. தேகசௌக்கியம் இருந்தால்தான் புத்தி சீராயிருக்கும்.

பலம் வேறு, சுகம் வேறு. இவற்றுள் சுகமே விசேஷமானது. பலம் என்பது ஒவ்வொரு அவயவத்தைப் பற்றினது. சுகமோ அப்படியன்று; அது தேகமுழுமையும் பாவி நிற்பது. குறைவாகப் போஜனம் செய்து இறந்து போகிறவர்களைப் பார்க்கிலும், அதிக போஜனம் செய்து இறந்து போகிறவர்களே மிகுதி என்று பிரான்சு மண்டலாதிபதியான நெப்போலியன் சொல்லுவார். கடைசியாக, ஒவ்வொரு மனிதனுக்கும் ஆரோக்கிய லாபம் அவனது மாதாவோ மனைவியோ ஊட்டும் அன்னத்திலும் அவனது தேக முயற்சியிலு மிருக்கிறது.

> அளிக்கிறபரிசளத்துணை அற்பமானதா யிருந்தாலும், அதைத்தருவாரும் பெறுவாரும் அன்பின் களஞ்சியங்களாயின் அந்த அற்பமே அவர்கட்கு மிக்க மகத்துவமுள்ளதாகி விடும். மனமே காரணம்.

பால்யத்திலிருந்த உயர்குணங்கள்.

அதோ உன் அம்மா வெகு ஆசையுடனே முத்தமிடுகிற அந்தக் கைக்குழந்தையைப் பார்; அந்தக் குழந்தை உனக்கு என்னவேண்டும் என்று சின்னஞ்சிறு பையனைக்கேட்டால், "அது தன் தங்கை" என்று வெகு கம்பீரமாய்ப் பதில் சொல்லுகிறான். அந்தப் பதிலிலே தான் ஒரு அண்ணனாக இருக்கிற பெரிய மனிதத்தன்மையையும் அந்த சமயம் காண்பித்துக் கொள்ளுகிறான். தான் முன்பு தன் தாயிடம் அருந்திய பாலையும், தன் தாய் தனக்கு இட்ட முத்தங்களையும் அந்தத் தங்கையும் பெற்றுக்கொள்ளப் பாத்தியமுடையவளென்று "தன் தங்கை" என்ற சொல்லிலே காட்டிக் கொள்கிறான். "தங்கை" என்று அவன் சொல்லும் போது ஒரு பிரகாசமும், ஒரு புன்சிரிப்பும், அண்ணன் ஒருவன் பெற்றிருக்கவேண்டிய பெருந்தன்மையும் கூட அவன் முகத்தில் கம்பீரமாய்ப் புலனாகின்றது. தன் கையிலுள்ள பக்ஷணத்தைத் தங்கைக்கு என்று கேட்டால் உடனே கொடுத்துவிடுகிறான். தன் தங்கை அதைத் தின்பதை ஆசையுடனே பார்க்கிறான். தன் தங்கையிடம் போய்க் கொஞ்சுகிறான். தன் தங்கையின் தொட்டிலை ஆட்டுகிறான். அதைத் தூக்கிக்கொண்டு திரிகிறான். அவளோடு விளையாடுகிறான். இவ்வளவு செய்யும் இவனும் ஒரு பச்சைக்குழந்தையே. ஆ! கடவுள் மனித ஜீவியத்தின் துவக்கத்தின்போது எவ்வளவு பெருந்தன்மையையும் உத்தம குணங்களையும் கற்பித்தருளியிருக்கின்றார்! இவ்வுயர் குணங்கள் கடைசிநாள் வரையும் அப்படியே நிலைத்திருந்து விட்டாலோ ஆ! அப்பொழுது இந்த உலகம் எவ்வளவு இன்பம் செறிந்ததாயும் மேன்மையானதாயுமிருக்கும்? முதலில் தோன்றிய நல்ல புத்தியும் பெருந்தன்மையான குணங்களும் ஏன் பிற்காலத்தில் மாறிப்போகின்றன? ஆ! இப்படி மாறிச் சிதைவது ஒரு பெருந்தூர்ப்பாக்கிய மல்லவோ! மனிதன் இந்த துரதிருஷ்டவசத்தையுணர்ந்து தன்னைத் திருத்திக் கொண்டு, பால்யத்தில் தன்னிடத்து அமையப்பெற்றிருந்த உத்தம குணங்களின் இருப்பிடத்திற்கு மறுபடியும் திரும்பிச்சென்று அதைப் பெற்றுக் கொள்வானாக. எவன் அப்படிப் பெறுகிறானோ அவனே பாக்கியவான்; அவனே உலகிற் சிறந்தோன்; அவனுக்குக் கடவுள் ஆசியுமுண்டு.

பழமொழிக் குறிப்புகள்

3. இல்லறம்.

(703-ம் பக்கத் தொடர்ச்சி.)

212. "அடங்காத மனைவியும் ஆங்கார புருஷனும்."
213. "கெட்ட பயலுக்கேற்ற துட்டச் சிறுக்கி."

இவ்விரு பழமொழிகளின் கருத்தும் ஒன்றே. ஸம்சார வாழ்க்கையில் ஒருவர் கோபிக்க மற்றவர் பொறுத்துக்கொண்டு செல்ல, இவ்விதமாக இரண்டில் ஒன்றாவது நற்குணமுடையதாயிருந்தால் எவ்விதமேனும் குடித்தனத்தை வெளிக்குக் கௌரவமாய் நடத்திக்கொண்டு போய்விடலாம். வீட்டின் ரகசியமும் வெளியில் வராது. அவ்விதமின்றி மனைவி அடங்காத தன்மை கொண்டு நிற்க, வீட்டுக்காரனோ ஆங்கார புருஷனாவதெனில் அந்தக் குடும்பம் ஒருப்பட்டு முன்னேறுவதேது? சில இடங்களில் "கெட்ட பயலுக்கேற்ற துஷ்டச் சிறிக்கி" என்று சொல்லும்வாறாக எவ்விதமோ அவ்விருவருக்கும் விவாகமுடிச்சு ஏற்பட்டுவிடுகின்றது. நித்தமும் அவர்களிடையே ஒரு கலகம் தான். பெண்ணும் அடங்குகிறவளாக இல்லை. ஆணும் அவளை அடித்துப் புடைப்பதில் ஒய்பவனாக இல்லை. அந்த அடியானது படாத இடத்தில் பட்டு அதனால் மரணம்நேர்ந்தால் இவனுக்குத் தூக்குத்தண்டனை கிடைக்கிறது. வீணாக ஒரு குடும்பம் பாழ்படுகிறது. அந்தோ! இதுதானா விவாக சுகம்? அடிக்க—திட்ட நினைக்குமுன் நூறுவரை எண்ணு.

214. "அடங்காப் பெண்சாதியால் அத்தைக்கும் நமக்கும் பொல்லாப்பு."

கணவன்—மனைவி இருவருள் கணவன் உத்தமனாகவே இருக்கின்றான். அவனது மனைவியோ அத்தையின் குமார்த்தி. தந்தையின் ஸகோதரியையே அத்தை என்பது. அது எவ்வளவோ நெருங்கிய இரத்த சம்பந்தமான சொந்தமே. இந்த சொந்தத்தால் சில இடங்களில் மனைவி தனக்கு ஏற்பட்ட கணவனை, எல்லாம் முன்பு தெரிந்து பழகியவர்தானே என்று அலக்ஷியமாய் நினைத்து எதிர்க்கவும், மீறவும் தொடங்கிவிடுகிறாள். இது கணவனுக்கு சகிக்காமல் அவளைக் கண்டிக்கத் தொடங்குகிறான். அப்பெண்ணின் தாய் அதற்கு வருத்தப்பட்டுக்கொண்டு தன் புத்திரியை அவன் ஹிம்ஸிப்பதாக நினைத்து கனத்த சினம் கொள்கிறாள். அப்பொழுது வீட்டுக்காரன் எல்லாக் கலகமும் அவளால் விளைய, நிரபராதியாகிய தான் வீணாக அத்தையிடம் திட்டுகள் பட

அடக்கத்தை பூண்டுபேணிக்கொள்வதில்தான் மானிடர்களுக்கு அதிக வெற்றியும் சக்தியும் அநுகூலமும் ஏற்படுகிறது.

வேண்டி நேர்ந்ததே யென்று வாடுகிறான். அவ்விதமாக வாடும்பொழுது மேற் கண்ட பழமொழியை உபயோகித்துக்கொள்கிறான். என் செய்வது? தாமும் குருவும் தலைவிதியைப் பொறுத்து அமைகிற சங்கதி.

215. "அது அதற்கு ஒரு கவலை, ஐயாவுக்கு எட்டு கவலை."

இவ்விதம் சண்டை ஏன் உண்டாகிறது? அது அங்குள்ள பெண்ணால் இருக்கலாம். அவள் ஏதாவது ஒன்றை விரும்பிக் கேட்டிருப்பாள். கேட்டபடி தன் கணவன் தனக்குக் கொடுக்கவில்லையே என்பதுதான் அவளுடைய விசாரம். அந்த ஒரு கவலையைத் தவிர வேறு கவலை அவளுக்கு இல்லை. ஆனால் அவள் கணவனான ஐயாவுக்கோ எட்டு கவலை; அதாவது பல கவலை. அந்தக் கவலையாலும், கையிற் பணம் இன்மையாலும் தன் மனைவி தன்னைக் கேட்டுக் கொண்டதைச் செய்யாது எப்படியோ நாட்கள் கழிந்துபோகின்றன. இதில் மிக்க வெறுப்பும் சலிப்பும் சினமும் கொண்டு அடிக்கடி அதனால் அடிதடி சண்டை நேர்ந்து வீடு கலகக்குப்பையாகிறது. அந்த சமயத்தில் அங்கு வந்தவர்கள் கலகத்தின் காரணத்தை யறிந்து, "அது அதற்கு ஒரு கவலை, ஐயாவுக்கு எட்டு கவலை" அவர் என்ன செய்வார் பாவம் என்று வீட்டுக்காரன் பக்கமாய்ப் பேசி, ஆத்திரப்பட்ட பெண்ணுக்குப் புத்தி சொல்வார்கள்.

216. "அவதிக்குடிக்குத் தெய்வமே துணை."

எப்பொழுதும் ஓயாக்கலகமும் குழப்பமுமாயுள்ள குடும்பத்தில் மனைவியோ கணவனோ தற்கொலை செய்துகொண்டு இறக்கவும் நேரலாம். அல்லது கணவனின் அடிதடிகளால் மனைவி பரலோகம் செல்லலாம். இவ்விதம் ஆகாதிருப்பது தெய்வத் துணையாலேயேயன்றி வேறில்லை. இப்பழமொழிக்கு இன்னொரு கருத்தும் உண்டு. காலமுற்றும் தரித்திரமும் பிணியுமாக அவதிக் குடித்தனமாயுள்ள இடத்தில் யார் வந்து உதவி இரக்கப்படப்போகிறார்கள்? அந்த அவதிக்குடித்தனத்திற்குத் தெய்வம்தான் துணையாக இருந்துக் கஞ்சி வார்த்துக் காக்கவேண்டுமென்றபடி.

217. "அள்ளாது குறையாது, சொல்லாது பிறவாது."

இது ஒரு அழகான பழமொழி. குடும்பத்தில் ஒரு பெண்ணைப்பற்றியோ ஒரு ஆணைப்பற்றியோ அவ்வீட்டுக்கு வந்தவர்கள் ஒருவிதத் தாழ்ச்சியான எண்ணங்கொண்டு வளர்க்கிறார்கள். அன்றுதான் அவ்வீட்டிற்குள் வந்தவர்களுக்கு ஒருவரை உயர்த்தியும் மற்றவரைத் தாழ்த்தி அலக்ஷியமாயும் நடந்துகொள்ளும் புத்தி எப்படிப் பிறந்தது? அவர்கள் வந்தபொழுதே அவர்களிடம் வீட்டுக்குள் இருப்பவர்கள் வீட்டுச் சங்கதிகளைப்பற்றி ஒரு பிரஸங்கம் செய்து தீர்த்துவிடுகிறார்கள். உடனே வந்தவர்களும் பசையுள்ள பக்கத்தில் தாவிக்கொண்டு, பசையற்ற பக்கத்தில் ஒதுங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். இவ்விதம் அநேக குடும்பங்களில் நடக்கின்றன. மேலும் ஊரார் ஒருவனைப் பற்றி, அவனா பொல்லாத எமகாதகனாயிற்றே என்கிறார்கள். இந்த விஷயம்

யோசனை சொல்லி ஒரு வருஷம், அதைக் கவனிக்க மற்றொரு வருஷம், பிறகு முயற்சி எடுத்துக்கொள்ள இன்னொரு வருஷமுமாக எவ்வளவோ காலம் வீணாய்ப் போய்விடுகிறது. இப்படியும் சிலரது வழக்கம்.

ஒருவருக்கொருவர் கோபத்தில் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள் மூலமாக, அந்த சமயம் அங்கு நின்று கேட்டவர்களுக்குத் தெரிந்துபோய் அதை அவர்கள் ஊர்முழுதும் பரவச்செய்துவிடுகிறார்கள். "ஓ! அவள் கற்பு கெட்டவள், எனக்கு நன்றாகத் தெரியும்" என்று கணவன் தனது ஆத்திர வேளையில் அநியாயச் சொற்களை நிரபராதியான பெண்ணின்மீது கொட்டுகிறான். அல்லது! நெடுநாள் மறைத்துவைத்த அச்சங்கதியை அவ்வேளையில் வெளியே கக்கிவிடுகிறான். இந்தச் சொற்களைக் கேட்டவர்கள் 'அந்தப் பெண்ணின் நடத்தை சரியில்லாமலும் இருக்கலாம்' என்று பேசத் தொடங்கிக்கொள்கிறார்கள். ஒருவரைப்பற்றி இன்னொருவரிடம் பழிப்பாக ரகசியமாய்ச் சில சங்கதிகளைச் சொல்ல, அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களோ அந்தப் பழிக்கப்பட்டவரிடம் சென்று 'உங்களைப்பற்றி இன்னார் இந்தவிதமாகப் புகார் செய்தார்கள்' என்று சொல்ல, அதற்கு அவர்களும், சொல்லாமல் பிறக்குமா?— அவர்கள் எனக்கு வேண்டியவர்களாயிருந்ததால்தான் என்னிடமும் அந்தச் சங்கதியைச் சொன்னார்கள் என்று அவர்களை உயர்த்திவைத்துப் பேசிவிட்டு, எப்படி என்மேல் சொல்லலாம் என்று அப்பொழுதே ஒரு கலகத்தை ஆரம்பித்துக்கொள்வார்கள். இன்னும் எத்தனையோ விஷயங்களிலும் இந்தப் பழமொழியை உபயோகிப்பதற்குக் கூடும்.

218. "அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பக்கூடாது."

இதுவும் ஒரு உண்மையான பழமொழி. மனோதைரியத்தை விட்டுவிட்டுச் சோர்ந்துபோய் அழுவதற்கு உட்கார்ந்துகொண்டவன் பெரிய காரியங்களைச் சாதிப்பதற்கான ஆற்றல் படைத்துள்ளவனாகமாட்டான். அவனுக்குத் துணிவும் இல்லாமலே போய்விடலாம். இத்தகைய கோழை நெஞ்சனை நம்பி என் செய்வது? அவ்விதமே சிரிக்கிற பெண்ணும் சீரைக் குலைத்தவளாய் விடக்கூடும். அவள் ஒரு சமயம் நடத்தைப்பிசகுள்ளவளாகவும் ஏற்பட்டுப் போகலாம். ஆதலின் அவளை முற்றிலும் நம்பிவிடவும் கூடாது என்று இப்பழமொழி இடித்துக் கூறுகின்றது.

219. "காட்டில் புதைத்த கனதனமும், பாட்டில் புதைத்த பழம் பொருளும், வீட்டில் மனையாள் மனமும் நாட்டில் தெரிவரிது."

தனத்தைப் புதைத்துவைத்த இடம் மறந்துவிடின் பின் கண்டுபிடிப்பது அருமை. பாட்டில் மறைந்துள்ள அரும்பொருளைப் பெரியோர் மூலம் அறியவேண்டும்; தானே உற்றுணர்வதற்குமுயலின் தெளிவுபடா. அவ்விதமே மனைவியின் மனமும் இன்னவாறென முற்றிலும் அறிதல் கூடாமை, தம் மனத்துள் உள்ளதை வெளியிடாத ஒரு பக்குவத்தன்மை மகளிரிடம் பொருந்தியுளது. அதை ஆடவர் அறிதல் கடினமே. கணவன் மனம் நோகுமென்று சில விஷயங்களை வெளிவிடாமலே மனத்துள் வைக்கலாம். தனது அதிர்ப்தியைக் காட்டாது மனத்தில் ஒளிக்கலாம். வெளியிடுவதில் வீண் மனஸ்தாபத்திற்கு ஏதுகரம் என்று எண்ணும் விஷயங்களையும் மனத்திலேயே அடக்கிவிடலாம். இவற்றையெல்லாம் ஆடவர் புகுந்து கவனியாமல் சரிசரி என்று சென்றால்தான் குடித்தனம் செம்மையாக நடக்கும்.

220. "மரத்தை இலை காக்கும், மானத்தைப் பணம் காக்கும்."

இல்வாழ்க்கையில் மானத்துடன் நடந்துகொள்ளப் பணமே முக்கியம். பணத்திற்கு வழி சம்பாத்தியமாகும். சம்பாத்தியத்திற்கு லக்ஷணம் தடவை தோறும் ஒரு மிச்சம்பிடித்து எடுத்து வைத்தலாம். அன்றன்று பெற்றதை அன்றன்று தின்று அழிப்பின் பிறகு மானம் கெடுவது திண்ணம்.

221. "வையம் பெரிது, அதில் வருத்தமும் பெரிது."

இதன் பொருள் சுலபம். வருத்தம் என்பது வறியர் செல்வர் இருவருக்குமுண்டு.

222. "வையத்தில் தெவிட்டாத பொருள் அன்னமும் தண்ணீரும்."

அன்னம் தண்ணீர் அந்தந்த வேளைக்குக் கிடைக்கச் செய்வது இல்லறமாகும். அந்த இல்லறம் எத்துணைத் துன்பங்கட்கு வழிவைப்பினுங்கூட, அது தெவிட்டாததாகவே தோற்றும். மேலும் மற்ற உணவுகள் தெவிட்டி விடலாம். அன்னமும் தண்ணீருமோ என்றைக்கும் தெவிட்டாத அமிர்தமாம். (தொடரும்.)

கண்டு மகிழும் விநோதம்.

நெடுநாளாய் ஒருவரைக் காணவிரும்பி ஆவலோடும் காத்திருக்கின்றார்கள். அவரும் வந்து சந்திக்கின்றார். அரைமணிநேரமும் இடையே கழிகின்றது. அன்பு சம்பாஷணையும் பூர்த்திகொள்கின்றது. இனிமேல் பேசுவதற்கு வார்த்தைகளே கிடைப்பதில்லை. வெட்டிச் சங்கதிகள் புறப்படுகின்றன. உங்கள் கண் சுகமா? காது க்ஷேமமா? கழுத்து முதுகுபக்கம் திரும்பக்கூடியதா யிருக்கிறதா? தங்களுக்கு இதுவரை விழுந்த பற்கள் எத்தனை? தங்கள் மூக்கு ஆரோக்கியமா? வயிற்றில் முன் இருந்த தொந்திகள் சரியாய் இருக்கிறதா? காலில் உள்ள விரல்கள் நகங்கள் சௌக்கியந்தானா?—என்ற பேச்சுகளும் விசாரிப்புகளும் புறப்படுகின்றன. அதன்பின் வந்தவர் போய்வருவதாகச் சொல்லுகிறார். அவரைக் கண்டவர்க்கும் காணவேண்டுமே என்றிருந்த ஆவல் நிறைவேறிப் போய்வரும்படி வழியனுப்புகின்றார். இந்த அரைமணிநேரத்துச் சந்திப்புக்குத்தானா அத்தனை கடிதங்கள்! அத்தனை உபசார அழைப்புகள்!! அத்தனை எதிர்பார்ப்புகள்!!! வந்தவர்கள் எப்போது போவரோ என்று எண்ணுபவர்களும் இல்லாமலில்லை!

சென்றுபோன நாட்கள்.

ஸ்ரீமான் K. S. கதிர்வேலு நாடார்,

சென்னை "விஜய விகடன்" பத்திராதிபர்.

மிகுதியும் யோசித்து அதிக சிரமத்துடன் வியாசங்கள் வரைபவர் பலர், எவ்வித சிரமமின்றி நினைத்தளவில் தானே ஆற்றின் பெருக்குபோன்று மடமட வென்று வியாசங்கள் எழுதிச் செல்வோர் சிலர். இன்னோர் பிறவி ஆசிரியர்களா யிருப்பர். இவ்வகையினருள் சில காலத்திற்கு முன் சென்னையில் பிரபலமாக இருந்த "விஜய விகடன்" பத்திராதிபரான ஸ்ரீமான் கதிர்வேலு நாடாரவர்களும் ஒருவராவர். இவர் மிக்க ஏழ்மை படைத்தவர். சென்னையில் முன்பு நடைபெற்ற "மஹா விகட தூதன்" பத்திரிகையின் அச்சுக் கூடத்தில் அச்சுக் கோர்க்கும் தொழிலில் இருந்தவர். அந்த சமயம் சென்னையில் மூர் மார்க்கட்டு ஒன்று கட்டி முடிந்தனர். சென்னைக் கவர்னரவர்கள் அதன் திறப்புவிழாவை நடத்தியபோது சென்னையில் ஒரு வதந்தி பரவியது. திறப்புவிழா நாளன்று ரூபாய்க்கு எட்டு படி யரிசி வீதம் ஏழைகளுக்கு விற்கப்படப் போவதாய்ப் பலர் பேசிக்கொண்டனர். இதைக் கேட்ட ஏழை ஜனங்களும், செல்வந்தர்களும் கூடைகளோடும், பைகளோடும் மூர்மார்க்கட்டைச் சுற்றிக்கொண்டு கனத்த கூட்டமாய் நின்றனர். எதிர்பார்த்ததுபோல் எட்டுபடி யரிசி கொட்டியளக்கவில்லை. அனைவரும் ஏமாப்புற்று இல்லம் திரும்பினராக, இவற்றையெல்லாம் ஸ்ரீ கதிர்வேலு நாடார் ஒன்று சேர்த்து ஒரு அகவலாக இயற்றி அதை "மஹா விகடதூதன்" பத்திரிகையில் பிரசுரிக்கக் கொடுத்தார். அதன் அழகும் அருமையும் நோக்கிய "விகட தூதன்" ஆசிரியர் அதனையே பத்திரிகையின் தலையங்கமாகப் பிரசுரித்து, அன்றுமுதல் அச்சுக் கோர்க்கும் தொழிலை விட்டுவிட்டு, உதவி ஆசிரியாக யிருந்து "விகடதூத"னுக்கு விஷயங்கள் வரைந்து வருமாறு செய்தார்.

ஃ

"விகடதூதன்" உதவி ஆசிரியராக இருந்துவந்த ஸ்ரீ கதிர்வேலு நாடார் பிறகு அதினின்றும் விலகி, சென்னை ராயபுரத்தினின்றும் "விஜய விகடன்" என்ற வாரப்பத்திரிகையை ஆரம்பித்து நடத்தத் தொடங்கினர். ஸ்ரீ கதிர்வேலுநாடார் இயற்கையிலேயே ஒரு விகட கவி. சாதாரணப்பேச்சுகளும் விகடமாகவே இருக்கும். அத்துடன் பிறவி ஆசிரியருமாவர். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் பெரிதும் வாய்த்தவர். அவர் பாடசாலையில் படித்தது வெகு சொற்பமாகத் தான் இருக்க வேண்டும். ஏனெனில், எழுத்துப் பிழைகள் அதிகம் காணப்பட்டன. ஆயின், கவிகளிலோ பழுது இல்லை.

தங்களை அலக்ஷியம் செய்த மனிதர்களிடத்தில்தான் மதிப்பு ஏற்படுகிறது. தங்களுடன் விசேஷமாகக் கலந்து பழகுவோரை சாமான்யர்களாக எண்ணி விடுகிறார்கள். விரோதித்துங் கொள்கிறார்கள். ஏமாற்றுகிறார்கள்.

கற்ற இலக்கணமும் சிறிதுதான். ஆனால், பாடல்களோ இலக்கண அமைதியைத் தழுவி நின்றன. விருத்தம், வெண்பா, கலித்துறை எவ்வகையிலும் மடமடவென்று கவிகள் இயற்றும் இயற்கைத்திறன் மிகுதியும் அவர்பால் காணப்பட்டது. வியாசங்கள் வரைவதில் இருவிதம் உண்டு. ஒன்று தாமே எழுதுகோல் பிடித்து வரைவது. இப்பழக்கமுடையார்க்குத் தாமே வரைந்தால்தான் நன்கு அமையும். மற்றொன்றுவது, தாமே எழுதாமல் வாய்மொழியாகச் சொல்லிக்கொண்டே செல்ல, மற்றொருவரைக் கொண்டு அதை எழுதுவித்தலாகும். இந்த ஆற்றலே அத்யந்த விசேஷமுடையது. இந்த சக்தி வாய்ந்தவர்கள் தாம் பிறருக்குச் சொல்லி எழுதச்செய்யும் சக்தியோடு, தாமே எழுதுகோல் கொண்டு எழுதிக்கொள்ளக்கூடிய திறனும் அமையப் பெற்றவரா யிருப்பர். தாமே எழுதுகோல் பிடித்து வரைந்தாலன்றி செம்மையாய்ப் பொருந்தாதென்னும் வழக்கமுடையோர் அந்த விதமாகத் தாமே எழுதும் ஆற்றல் ஒன்றையே கொண்டவராவர். ஸ்ரீ கதிர்வேலு நாடார் தாமே எழுதுவதுண்டாயினும், விசேஷமாய்த் தாம் சொல்லிச் செல்லப் பிறரைக்கொண்டு எழுதுவிக்கும் வழக்கமே அதிகமாகக் கொண்டிருந்தார். "விஜயவிகடன்" பத்திரிகை யாவராலும் விரும்பப் பெற்று விகட விநோதக்களஞ்சியமாக இருந்தது.

ஃ

ஸ்ரீ கதிர்வேலு நாடார் தமது வழ்மைக்கேற்ப மரத்தாற் செய்த பிரஸையே வைத்துக் கொண்டு அதில் "விஜயன் விகடன்" பத்திரிகையைப் பதிப்பித்து நடத்துவதானார். பின் அதை வாரம் இருமுறைப் பத்திரிகையாக்கினார். இந்த சமயத்தில் "படு தோஷி விலாஸம்" என்ற விகடநூல் ஒன்றை வெளியிட்டார். அதன்பின் "காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் கொண்டுபோன கேஸ்" என்ற ஒரு விநோதக் கதையைப் பிரசுரம் செய்தார். சென்னையில் ஒருவர் ஒரு புது வியாபாரம் ஆரம்பிப்பின் அதற்கு உடனே போட்டி தோன்றுவது சாதாரணம். அவ்விதமே அவரது நூல்களுக்கும் போட்டி தோன்றியது. "விஜய விகடன்" நேர்த்தியான விகடப் பத்திரிகை யாயினும், சிற்சில சமயங்களில் விஷயங்கள் 'பச்சை' யாகவும் வெளிவந்தமையால், அதற்கு இருந்த காலணு ஸ்டாம்பு ஒட்டும் சுதந்திரம் எடுபட்டுப் போயிற்று. ஆயினும், ஸ்ரீ கதிர்வேலு நாடார் பின்னடையாது வாரத்தின் இரு பத்திரிகைகளையும் ஒன்று சேர்த்து அரையணுஸ்டாம்புஒட்டி யனுப்பி முன்னிலும் பிரபலமாக நடத்தினார். மரப் பிரஸைத் தூக்கி எறிந்து விட்டு உயர்ந்த அச்சுக்கூடம் அமைத்துத் திறமையாகப் பத்திராதிபத்யம் செலுத்தினார். விகட கவிகள் அடங்கிய சிறு நூல்களையும் வெளியிட்டார். "விஜய விகட பூஷணம்" என்ற பெரியதோர் நூலையும் பிரசுரம் செய்தார். பத்திரிகை நன்றாக நடந்துவந்த சமயத்தில் நோய் வாய்ப்பட்டுக் காலமானார். அவருடன் "விஜய விகட" னும் நின்று விட்டது. தமிழ்ப் பத்திரிகைகளின் கதி இதுவாகும். ஸ்ரீ கதிர்வேலு நாடார் நல்ல நிர்வாகசாலி. சாமர்த்தியசாலி. எவருக்கும் அஞ்சாத சிங்கம். மனத்தில் தோன்றியதை அவ்விதமே எழுதிவிட்டுச் சமாளிக்கும் தன்மை அவரிடமிருந்தது.

ஸம்சாரிகளுக்கு நேரும் செலவுகளை ஒரு அளவுக்குட்படுத்த எப்போதுமே முடிகிறதா? எப்படியோ பல செலவுகள் குறுக்கிடுகின்றன.

வாழ்க்கைக் குறிப்புகள்.

(596-ம் பக்கத் தொடர்ச்சி.)

8. உலகம் ரமணீயமாய் ஜ்வலிப்பது பெண்மையினாலும் ஆண்மையினாலுமாம். பெண்மையின் குணம் கற்பைப் பேணி, மக்களைப் பரிபாலித்து, இல்வாழ்க்கையைச் சிறப்பித்து, அதைப் பரகதிக்கு அனுகுணமான வழியில் சிரேஷ்டமுள்ளதாக்கி, உலகையே இயக்கி நடத்துவிக்கும் மகத்துவமிக்க அரியதோர் சக்தியாயுள்ளது. நாணம், மடம் அச்சம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களும் பெண்மைக்கு நான்கு காவல்களாகி, கற்பு என்னும் தேவி அந்த நான்கு கோட்டைகளின் நடுவேயுள்ள பெண்மை என்னும் ஸிம்ஹாஸனத்தின்மீது கொலுவீற்றிருக்கின்றாள். ஆ! அவளது கண்களில் கருணையையும் அநுக்கிரகத்தையும் பார்க்கிறோம். எவர்பாலும் இரங்கி உருகும் அந்த நயனங்களின் காட்சி ஒரு அபூர்வ சுந்தரம்! உலகின் அழகெல்லாம் அந்த நேத்திரங்களில் சோபிக்கும். முகமோ ஸதா புன்சிரிப்புடன் விளங்குவது. அந்த முகத்திற்குத் தகுந்த மூக்கு! மூக்குக்குத் தகுந்த மூக்குத்திகள்!! இன்னின்னார் நல்லவர்—தீயவரென்ற வாசனையை அந்த மூக்கு ஒருகணத்தில் அறிந்து கொள்கின்றது. நாவோ அமிர்த வருஷம் வருஷிப்பது; குளிர்ந்தசொல் உடையது; ஆறுதல்கூறும் பக்குவம் வாய்ந்தது; இனியது. குரலோ கந்தர்வ கானரஸம் பொழிவது. செவிகளோ கடோர ஸப்தத்திற்கு நடுங்குவது; ஒரு சிறு சப்தத்திற்கும் விழித்துக் கொண்டு கற்பு தேவியைக் காவல் செய்வது. அவ்விரு செவிகளிலும் பிரகாசிக்கும் ஆபரணங்களோ இகலோக வாழ்விலும், பரலோக வாழ்விலும் இவ்விரண்டிலுமே ஸமத்வமான அழகு திகழ்வதாய் விளக்குவதுபோலுள்ளது. இகலோக வாழ்வில் எவ்வித தாழ்மையும் இல்லை. தூய்மையும், கடமையும், பற்றுதலற்ற சிர்தையும், பகவத் தியானமும், கருணைவெள்ளமும் இவையெல்லாம் பரலோக பாக்கியத்தை இவ்வுலகிலேயே கண்டு அனுபவிக்கும்படி செய்துவிடுகின்றன. பெண்மையின் திறன் இவ்வுலகை இன்பமயமாக்கி விடுகின்றது. பெண்மையின் ஒளியே இறைவனின் ஒளி. மற்றொன்று பரம சாம்ராஜ்ய பரமபத வாழ்வு. இவையிரண்டிலும் இணையற்ற இன்பம் நிலவுமாறு பெண்மை செய்கின்றது. உயர்வு தாழ்வற்று இருசெவிகளிலும் ஸமத்வமாய் விளங்கும் ஆபரணங்கள் ஈருலகவாழ்விலும் ஸமத்வமான ஆனந்தத்தைப் பெறலாமென்று உணர்த்தும் இரு தீபங்கள் போலுள்ளன. கழுத்தோ, உலகினை இறும்பூது கொள்ள வைப்பது. இம்மையிலும் மறுமையிலும் வாழ்விலும் தாழ்விலும் யாவற்றிலுமே கடமையின் உயர்வையே பெரிதெனக்கொண்டு பணிந்து ஒழுகும் சத்திய ஆபரணம் அந்தக் கழுத்தில்தான் விளங்குகின்றது. அதற்கு மாங்கல்யம் என்று பெயர். அதற்கு நிகரான ஆபரணம் இவ்வுலகினில் எது? அது ஒரு ஒப்பந்த மஹாசாசன பத்திரமன்றோ? தோள்களோ குடும்ப பாரத்தைத் தாங்குவன. கைகளோ கட்டியணைப்பன; அரவணைத்துப் பரிபாலிக்கும்

“ என்னிடம் தங்க நகை இருக்கா என் செலவுக்கு உதவ? எல்லாம் அந்த முண்டைக்கு (மருகிக்கு) போட்டுத் தொலைத்து விட்டேனே! (ஒருமாமி)

தன்மையன; உலகினுக்கே அன்னமிட்டு ஆதரிப்பன; அருட்கடலாயுள்ளதும் அதுவே. பெண்மையின் மார்பகமோ பெண்மையினை அளந்து காட்டும் ஒரு தெய்வீகத் திராசுபோல்வதாம். பெண்மையின் லாவண்யம் அங்குதான் பொருந்துகின்றது. அந்த அழகின்றி மற்ற எந்த அழகு கூடினும் பெண்மையில்லை. பெண்மையின் மார்பகமே நாம் முதன் முதலாக உணவுகொண்ட முதலாவது இடம். நமது சிசுப்பருவத்தில் தாயின் மார்பகமே நமக்குப் பெரிய ஆஸ்தியாக இருந்தது. நாம் பெரியவர்களாய் விட்ட காலத்துங்கூட நமது தாயின் மார்பில் சாய்ந்துகொண்டு உட்கார நமக்கு சுதந்திரமுண்டு. அதுவே நமக்கு இறைவன் அளித்த முதல் பொக்கிஷம்; மகா பெரிய சொத்து. அந்த சொத்து இல்லாவிடில் அப்பொழுதே நாம் உணவற்று மடிந்திருப்போமன்றோ? அந்த சொத்து ஏழைகளுக்கும் செல்வர்களுக்கும் சரி சமத்வமாய்க் கொடுக்கப்பட்டுள்ளது. மானிடன் மட்டுமல்ல, ஜீவவர்க்கங்கள் யாவும் தாயின் பாலையுண்டு வளர்ந்தவைகளே. இனி, பெண்மையின் திருவயிறோ வாடகையில்லாமல், வறுமை நோயினையே யுணராது நாம் குடியிருந்த பூர்வ அரண்மனை. பெண்மையின் தொடைகளோ அங்குதான் நாம் சிசுப் பருவத்தில் படுத்துக் கிடந்தோம்; உட்கார்ந்திருந்தோம்; நித்திரை செய்த இடமும் அங்கேயே. கால்களோ ஓயாத உழைப்பினை ஏற்று உலகுக்குத் திருத்தொண்டு புரிவது. சீர்பாத கமலங்களோ அன்னநடை கொண்டது. நாம் அனைவரும் நித்தநித்தம் பணிந்து போற்றக்கூடிய பரம புனிதத் தன்மை பெற்றது. தாயின் பாத கமலங்களும், இறைவனின் பாத கமலங்களும் இரண்டும் ஒன்றே தான். இறைவன் எங்கோ மறைந்து கிடக்கின்றார். அவரது பாதகமலங்கள் நமது ஊனமான கட்புலனுக்குத் தென்படுவது அருமை. அன்னையின் பாதகமலங்களோ நாம் வணங்குவதற்கு வெகு சுலபமாய் நம்மருகிலேயே இருப்பது. அன்னையின் பாத பத்மங்கட்குச் செய்யும் நமஸ்காரங்கள் பெண்மைக்குச் செய்யும் நமஸ்காரங்களேயாகும். பெண்மையே மஹா சக்தி, பெண்மையே சாக்ஷாத் ஈசுவர சொரூபத்தின் மற்றொரு பாகம். அந்தப் பெண்மைக்கு அழகு செய்யும் ஆபரணம் கற்பு ஆகும். உலகு தோன்றியது பெண்மையால். யாவுமே பெண்மையால் தான். பெண்மைக்கு அழிவு நேரின் உலகுக்கும் அழிவு நிச்சயம். பெண்மையின்றேல் ஞாலமும் இல்லை. பெண்மையின் பெருமை பேசவும்படுமோ ?

ஃ

9. இத்துணைப் பெருமை சான்ற பெண்மையைக் காத்துப் பரிபாலிக்க ஆண்மையின் துணை அவசியமென்பது ஆண்டவனின் அமைப்பு. ஆ! ஆண்மை!—அது ஒரு கம்பீர ஜோதி. பெண்மையில் பெண்மையின் மானம் காக்கப்படுதல் போன்று, ஆண்மையிலும் அதன் கம்பீர தத்வம் என்றும் இழிவுபடாது உயர்ந்து விளங்கவேண்டும். ஆண்மை நிறைந்தவனின் வதனம் அத்யந்த சோபிதமாய் ஒரு தனி அழகோடும் விளங்கும். அந்த அழகில் பெண்மை மயங்கி பணிசெய்து அடிமைப்பட வலிய வந்து நிற்கும். ஆண்மையே ஆண் மகனுக்கு உறுதியும் திடனும் பராக்கிரமமும் தருவது, ஆண்மை

“அவர் எங்களின் ஆசிரியராதலின் அவருக்கு உண்டாகும் புகழ் எல்லாம் அவருடைய மாணவர்கள் என்ற வகையில் எங்களுக்கும் பங்கு உண்டு.”

யின் முன்னர் எதுவும் சிரம் தாழ்த்து நிற்கும். ஆண்மைத் தத்துவமுடையாரிடம் எதையும் அடக்கியாளும் சக்தி மிகுந்திருக்கும். ஆண்மையுள்ளவனின் கரங்கள் ஒரேயொரு குத்தில் பத்து பேர்களைக் கீழே வீழ்த்த வல்லது. ஆண்மையே பெண்மையின் இச்சா இன்பம் தணித்துத் திருப்தி தருவது. பூரணத்வமுள்ள ஆண்மையையே பெண்மை கோரி ஆவற்படும். ஆண்மை முதலில் அகத்தில் விளங்கி பின் முகத்தில் ஒளிர்வது. சரீரத்தின் உட்கருவிகளில் ஆண்மை தோன்றி, அங்கிருந்து ஜனனேந்திரியங்கட்குப் பாய்ந்து, அதன் உறுதித் திடத்திற்கேற்ப முகத்திலும், கால் கைகளிலும் பிரதிபலித்துக்கொண்டு ஜெகஜ்ஜோதியாய் விளங்கும். பூரணத்துவமுள்ள ஆண்மை ஒருநாளும் பெண்மையினிடத்துக் கற்புச்சந்தேகம்கொண்டதில்லை. ஆண்மையின் அகராதியில் ஸம்சயம் என்றே சொல்லேயில்லை. ஆண்மையே கற்பைக் காப்பது. ஆண்மையே பெண்மையை மகிழ்விப்பது. ஆண்மையே பெண்மைக்கு அழகு செய்வது. ஆண்மை ஒரு பெரிய லோக வசிகரம். ஆண்மையற்றோர் எக்கம் பெருகிய நடைப்பிணமாவர். ஆண்மைக்குறைவே வீட்டின் கலக சந்தேகங்கட்குக் காரணம். ஆண்மையின் தளர்ச்சியே பெண்மையின் மீது பலவித ஸம்சயங்களைக் கொள்ள வைக்கின்றது. ஆண்மையற்ற தன்மை முகத்தில் தெரிந்துவிடும். உலகின் முன் நடுங்கவும் செய்யும். ஆண்மை இறைவன் அருளிய ஒரு தனியருள். ஆண்மையில் இன்ப பூர்த்தி கொள்ளுதற்குப் பெண்மை துணை. பெண்மையின் உதவியுடன் ஆண்மை அரசு செலுத்தவேண்டுமென்பது இயற்கைச் சட்டம். அவ்வியற்கை முறையில் பெண்மையும் ஆண்மையும் ஒன்றுபடுமிடத்து இருவரின் சக்தி நாளுக்குநாள் பெருகுவதன்றிக் குறைவதென்பதே யில்லை. அது பெரிய பர்வத சிகரத்தினின்றும் படிகளின் வழியாக இறங்குதல் போன்றதாம். எத்தனை முறை இறங்கிப் பின் பர்வத உச்சிக்குச் செல்லினும் ஆயாஸமிராது. அதனுல் தேகம் திடமுற்றுப் பலங்கொள்வதே சகஜம். ஆண்மையை இவ்வாறு இயற்கை வழியிலன்றி செயற்கையில் பாழ்படுத்துதலானது பர்வத சிகரத்தினின்றும் படிகளின் வழியாக இறங்கிவாராமல் மேலிருந்து கீழே திடீரென விழுந்து கைகால்களையோ, தலையையோ உடைத்துக் கொள்ளுதல் போன்றதாகித் தேகத்திற்குக் கனத்த அதிர்ச்சியை விளைத்து ஸர்வநாசம் செய்துவிடும். ஸ்திரீ புருஷர்கள் வெளியுலகத்தில் மட்டும் ஒன்றுபட்டு வாழ்தல்போல் காட்டுதல் போதாது. அது வெளிநடிப்பாக இருப்பினும் இருக்கலாம். வெளியில் முகத்தில் புலப்படுத்திக்கொள்ளும் ஒற்றுமை போன்று — உள்ளுக்தும் — உள்ளுறுப்புகளுக்தும் அந்த ஒற்றுமையும்திருப்தியும் இருக்கவேண்டியதே பிரதானமாய்க் கவனிக்கப்படவேண்டிய விஷயம். பெண்மையின் உள்உறுப்பாகிய கர்ப்பகோசத்தின் நுனியும், ஆண்மையின் உள் உறுப்பும் அன்புமிகுந்து ஒற்றுமைப்பட்டுச் சந்திப்புகள் கொண்டு இறும்பூதுறுதலைப் பொறுத்தே வெளிவாழ்வில் ஸ்திரீபுருஷ ஐக்கியமும் இருக்கும். உள்வாழ்வில் உள் உறுப்புகளின் ஒற்றுமை ஏற்படாவிடில் வெளிவாழ்விலும் ஒற்றுமை தோன்றாது. உள்வாழ்வு உன்னதமாகப் பொருந்தித் திருப்திபடச் செய்வதற்கு ஆண்மையின் அரசாட்சி தேவை. அந்த அரசாக்ஷியில்தான் எல்லா குடும்ப ரகசியங்களும் விருத்தியும் இருக்கின்றது.



கள்ளக் காதலன் துரோகவலை :—

[ஸ்ரீமான் V. N. ரங்கசாமி ஐயங்கார் அவர்கள் மொழிபெயர்த்தது. கிளேஸ் காகிதப் பதிப்பு. அட்டை பயிண்டு. ஏழு அழகிய படங்களுடன் கூடியது. டபிள் கிரவுன் 1x16-ல் 318-பக்கங்கள். விலை ரூ. 2.]

இதன் ஆசிரியர் உயரிய நோக்கங்களுள்ளவர். தமது மனஸாக்ஷியையே மதிப்பவர். ஒரு சிறந்த பத்திராசிரியர். எவருக்கும் அஞ்சாத எழுதுகோலின் வன்மையைக் கொண்டவர். அவர் இயற்றிய இந்த நாவல் அவரது கௌரவத்தை அதிகரிக்கச் செய்கின்றது. பகல் 2-மணிக்கு வாசிக்க ஆரம்பித்து இரவெல்லாம் விழித்து காலை 4½ மணிக்குப் பூர்த்தி செய்தோம். புஸ்தகம் மூடமுடியாதவாறு அத்துணை ஸ்வாரஸ்யமாய்க் கதாரஸம் இருந்தது. மிக்க உன்னதமான நாவல். அபூர்வ அனுபவங்கள். மேரியின் காதலைப் பெற்ற கொரான்டுவின் தென்னாப்பிரிக்கா பயணமும், அங்கு அவன் படும் பாடும், புகும் சிறையும், காதலியால் விடுவிப்பும், விவாகமும் வாசகர்களின் மனத்தைக் கவருகின்றன. மேரியின் காதலும், கப்பலினின்று இறங்கியதும் கண்ட ஏமாற்றமும், வக்கீலின் உதவி பெறுதலும், பெருஞ் சீமாட்டியாதலும், தன் நாதனை விடுவித்தலும் வாசித்தே சுவைக்கவேண்டும். மேரி விவாகத்திற்கு ஒப்பாமலே கொரான்டுக்காகக் கடைசிவரையும் காத்திருந்தால் அதிசிலாக்கியம் தரும். பிராக்ஸ்டன் வீசும் கள்ளவலை நன்கு படித்தறிந்து அந்த அறிவில் முதிர்ந்த குள்ளநரி செய்யும் வேலை. இது சிரித்துக்கொண்டே கழுத்தறுக்கும் தந்திரம். இந்தப் படுபாவி சிறைசெல்லும் இடத்தைச் சற்று விவரமாகக் காட்டுவது அவசியம். அவன் துள்ளத் துடித்துப் போலீஸாரிடம் சிக்குவதை விரிவாய்க் காண வாசகர்களின் ஆத்திரக் கண்கள் ஆவலுறுகின்றன. 195-ம் பக்கம் 9-ம் வரியில் "கற்பைத்—தின்று" என்றுள்ளதைத் தமிழகம் விரும்பாது. அப்பதத்தை நீக்குக. வக்கீல் கிளாட்டின் தர்ம உதவி கடவுள்வரைக்கும் எட்டும். ஒரு பெண்ணின்மீது வைத்த காதலும் மோகமும் எவ்வளவுதூரம் வேலை செய்து விடுகிறதென்பதை இந்த நாவலில் நன்கு காணலாம். [இது "அமிர்த குணபோதினி" ஆபீஸில் கிடைக்கும்.]

தான் ஒரு வேலைக்காரனாய் இருந்தும், மற்றொரு வேலைக்காரனை ஏவி ஒரு வேலையைச் செய்யச் சொல்லுகையில் தன்னை ஒரு எஜமானாக நினைத்துக்கொண்டுவிடும் பேதமை என்னே! மற்றவர்களைத் தடபுடல் அதிகாரம் செய்த தானும் ஒரு நாளில் வேலையிலிருந்து தள்ளப்பட்டுப் போகலாம்.

ஒரு வஸ்து ஒருவனுக்கு சாமான்னியமாகப் படுகிறது. அதே வஸ்துவை ஒரு புத்திசாலி பார்க்கும்பொழுது ஒரு அற்புதமான கற்பனை அவன் நெஞ்சில் திடீரென்று தெய்வீகமாய் உதிக்கிறது. அக்கற்பனையைச் செய்கையளவில் காரியப்படுத்திக்கொண்டு அவ்வழியில் அவனும் மிக உயர்ந்து விடுகிறான்.



பெரியாரின் மொழிகள்



(695-ம் பக்கத் தொடர்ச்சி.)

634. A cat is free to contemplate a monarch. DICKENS.

ஒரு பூனைக்கு ராஜாவாக எண்ணை ஓய்வு நேரம் இருக்கிறது. டிக்கன்ஸ்.

635. Though it be honest, it is never good; To bring bad news; give to a gracious message; A host of tongues, but let ill tidings tell; Themselves when they be felt. SHAKESPEARE.

கெட்ட சமாசாரங்கள் உண்மையாய் இருப்பினும் அவைகளைச்சொல்வது நன்றன்று; நல்ல சமாசாரங்களை எவ்வளவேனும் சொல்லு. ஆனல், கெடுதியானவைகளைக் குறித்துப் பேச்செடுக்காதே. அவை—அவைகளாகவே தெரியப்படுத்திக் கொள்ளும். ஷேக்ஸ்பியர்.

636. What is called Taste is only another for Fact.

DICKENS.

நான் அதை விரும்புகிறேன் என்று சொல்வது அதிலுள்ள உண்மையை வேறு மொழியில் சொல்வது போலாம். டிக்கன்ஸ்.

637. Mine honour let me try: In that I live and for that will I die. SHAKESPEARE.

நான் கௌரவம் சம்பாதிக்க முயற்சிக்கின்றேன். அதிலேயே நான் வசிப்பது. அதற்காகவே நான் இறக்கப் போவதும். ஷேக்ஸ்பியர்.

638. The vast cathedral of Nature is full of Holy Scriptures and shapes of deep mysterious meaning. LONGFELLOW.

இயற்கையென்னும் பெரிய மாதா கோயிலில் அநேக பரிசுத்தமான மாதா புஸ்தகங்களும், வெவ்வேறு அர்த்தங்களைக் கொள்ளக்கூடிய உருவங்களும் செறிந்து கிடக்கின்றன.

லாங்பெல்லோ.

639. If I didn't tell her I loved her, where would be the use of my being in love?

DICKENS.

நான் அவளிடத்தில் காதல் மிகுந்துள்ளேன் என்பதைக் கூறுவிட்டால் நான் காதலிப்பதின் பயன் என்ன?

டிக்கன்ஸ்.

640. Ah me! for aught that ever I could read, Could ever hear in tale or history, The course of true love never did run smooth. SHAKESPEARE.

எந்தக் கதைகளிலும், எந்தச் சரித்திரத்திலும் நான் படித்தமட்டில் உண்மைக் காதல் எக்காலத்தும் மிக எளிதில் அடையப் பெறவில்லையென்றே உணர்கிறேன்.

ஷேக்ஸ்பியர்.

641. In trickery, evasion, procrastination, spoilation,

---

botheration, there are influences that can never come to good.

DICKENS.

ஒருவரை ஏமாற்றுவோரும், நாளை செய்வோம் என்று தள்ளி வைப்போரும், தாமதப்படுத்துவோரும், ஒருவரைக் கெடுப்போரும், மற்றவரை அதிக தொந்தரவு படுத்துவோரும் எக்காலத்தும் நன்மையை யடைய மாட்டார்கள். டிக்கன்ஸ்.

642. Thou wilt keek him in perfect, peace, whose mind is stayed on Thee. ISA. 26, 3.

நின்னையே நினைந்துருகும் நின் அடியாரது உள்ளத்தைக் கலக்காது அமைதியில் வைத்தருளும். பைபில்.

643. Behold, how good and how pleasant it is for brethren to dwell together in unity!

Ps. 133, 1.

ஒருவருக்கொருவர் சச்சரவின்றி ஒற்றுமையுடன் வாழ்தல் எவ்வளவு நன்மையாகவும் எவ்வளவு விரும்பத் தக்கதாகவும் இருக்கிறதென்று நீ நினைத்துப் பார். பைபில்.

644. I will not say that humility is the only road to excellence, but I am sure that it is one road. LONGFELLOW.

தாழ்ந்து போதலே மேன்மை யடைய ஒரு வழி என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், அது எப்படியும் அதை அடைய ஒரு வழி.

645. If our Inclinations are but good and open-hearted, let us gratify them boldly, though they bring upon us loss instead of profit. DICKENS.

நம்முடைய எண்ணங்கள் நன்மையாகவும் சிறந்தவைகளாகவுமே இருந்தால் அவற்றைத் தைரியமாய் வெளி விடுவோம். அவை நமக்கு நஷ்டத்தை லாபத்திற்குப் பதிலாகக் கொண்டுவந்தாலும் பொருட்படுத்த வேண்டாம். டிக்கன்ஸ்.

646. I am not of that feather to shake off; My friend when he must need me.

SHAKEEPEARE.

என் உதவியை நாடியிருக்கும் என் நண்பனை விட்டகல்வது என்னிடத்தில் கிடையாது.

ஷேக்ஸ்பியர்.

647. When the heart goes before, like a lamp, and illumines the pathway, Many things are made clear that else lie hidden in darkness.

LONGFELLOW.

எப்படி ஒரு விளக்கு நமக்கு முன் வெளிச்சம் கொடுத்து நமக்குப் போக இடம் தருகிறதோ அதே மாதிரி நம் இருதயமும் நம் செய்கைக்கு முன் சென்று ஆலோசித்து, ஒவ்வொன்றையும் இருளினின்று பிரகாசிப்பித்துத் தெளிவுபடுத்துகின்றது. லாங்பெல்லோ.

648. Every traveller has a home of his own, and he learns to appreciate it the more from his wandering. DICKENS.

ஒவ்வொரு பிரயாணிக்கும் ஒவ்வொரு வீடு இருக்கிறது. அவன் எவ்வளவுக்கெவ்வளவு அதைச் சுற்றி யலைகின்றானோ அவ்வளவுக் கவ்வளவு அவன் அதை அதிகமாகப் புகழ்கின்றான். S. ஸ்ரீரங்கராஜு.



நமது கதாப் பிரஸங்கி.

அத்தையின் பேராசை.



அன்றைக்குத் தான் அம்மணி யம்மாள் கல்யாணப் பெண்ணாகத் தன் கணவனாரின் வீட்டுக்குள் அடி எடுத்து வைத்து நுழைந்தாள். அன்றைய சாயந்திரமே நாத்தி அம்புஜம்மாள் அதிகாரம் செய்ய ஆரம்பித்து விட்டாள். வீட்டுக்காரரும் புது மாப்பிள்ளையுமான மோகனரங்கம் பிள்ளைக்கு அம்புஜம்மாள் ஒரே யொரு தங்கை. குணங்களோ தங்கம். அவளுடைய பட்டி வாய்த்தனத்திற்குப் பயந்தே வெகு பேர் அவளை விவாகம் செய்துகொள்ள மறுத்து விட்டனர். அம்புஜம் பெரிய பெண்ணாகி ஆறு வருஷங்களாக வீட்டுக்குள் அழுகிக் கொண்டிருக்கையில் தான் தமயனாரான மோகனரங்கம் பிள்ளைக்கு விவாகம் நடந்து அம்மணி யம்மாளும் கணவனோடு வாழ்க்கை நடத்தவந்தாள். தனக்கு இன்னும் விவாகம் நடவாதிருக்கையில், வீட்டில் பெரிய மனுஷியாகி யிருக்கிற தங்கையை ஊலைப் போல்நிலத்தோடு நிலமாகப் புதைத்து வைத்து விட்டு, ஊர் வழக்கத்துக்கு விரோதமாகக் கலியாணம் செய்து கொண்டாரே என்று அண்ணன்மீது எரிந்து விழுந்தாள். ஃ

“நான் என்ன செய்வேனம்மா, நீ உன்னைக் கேட்டு விட்டுப்போக வருபவர்களுக்குமுன் உன் திருவாயைத்திறவாமலிரு என்று எவ்வளவோ தடவை வேண்டிக் கொண்டேனே. அப்படியே வாய்மூடி யிருந்தால் இதுவரை உனக்கு விவாகம் நடந்து குழந்தைகளும் பிறந்திருக்குமே. வந்தவர்கள் எழுந்து போவதற்குள் ஏதாவது ஒன்று வெடுக்கென்றுபேசி விடுகிறாய். அவர்களும் திடுக்கிட்டுச் சொல்லாமலே போய்விடுகிறார்கள். இப்போதும் நான் சும்மா இருக்கவில்லை. குப்பாபுரம் ஸ்டேஷன் மாஸ்டர் கொம்பு பிள்ளையிடம் பேச்சுகள் கொடுத்து வந்திருக்கிறேன். ஒரு வாரத்தில் அவர்கள் வருவார்கள். எவ்விதமும் விவாகம் நடக்கும். அந்த விவரம் தெரிந்து கொண்டுதான் என் விவாகத்திற்கும் சம்மதித்தேன்” என்றார். ஃ

“அதென்ன கொம்பு பிள்ளை, கோணல் பிள்ளை? இருந்திருந்து இப்படியா பேர் வைக்கவேணும்! இதனாலேயே அவர்களின் பவிஷு தெரிகிறதே” என்றாள் ஸ்ரீமதி அம்புஜவல்லித் தாயாரம்மாள். இதுதான் இந்தப் பெருந்தேவியாருடைய பெருமையான-சரியான-நேரான பெயர்!

ஃ

“சரி, சரி, உன் நாறும் வாயை யடக்கு; அவர்கள் வந்திருக்கும்போது இந்த மாதிரி பேசினால் இந்த இடமும் தவறித்தான் போகும்” என்று கோபத்துடன் சொல்லி வெளியிற் சென்றார் மோகனரங்கம்.

வீட்டின்நிலைமைக்கு அனுகுணமாக நடந்துகொள்ளக்கூடிய அறிவு தேவை.

"புது மாப்பிள்ளை யல்லவா, அந்த முறுக்கை என்னிடம் காட்டி வீசுகிறூராக்கும்! அதற்குள் வந்த சிறுக்கி என் அண்ணனை மயக்கி விட்டாளே! கல்யாணமாய் விட்ட தென்ற கர்வமா அவனை இப்படித் துள்ளச் செய்கிறது" என்று அம்புஜம் உள்ளே சென்று புதுப் பெண்ணின் கன்னத்தில் ஒரு குத்து குத்தி, என்னடி என்னைப்பற்றி உன் புருஷனிடம் தலையணை மந்திரம் படித்தாயா என்று அதட்டினுள். ஃ

வாரம் சென்றது. கொம்புபிள்ளை வீட்டார் வந்து பெண்ணைப் பார்த்து விட்டு, பரம சாது, வாயில் விரலை வைத்தாலும் கடிக்கத் தெரியாது என்று எண்ணிக் கொண்டு சந்தோஷப்பட்டு விடை பெற்றுப் போனுர்கள். ஸ்ரீமதி அம்புஜத்தம்மாள் அன்று வேண்டு மென்றே அப்படித் தங்க விக்கிரகமாக வேஷம் போட்டாள். வந்தவர்கள் முன்பு உட்கார்ந்து குனிந்த தலையை அவர்கள்போகும் வரையில் மேலெடுத்துப் பார்க்கவேயில்லை. கால் விரல்கள் எத்தனை, அதிலுள்ள நகங்கள் எத்தனை என்று எண்ணிக் கொண்டிருந்தாளோ என்னவோ? எப்படியோ காரியம் முடிந்தது. காயா பழமா?—பழம் தான்.

ஃ

அம்புஜம்மாளுக்கும் கொம்புபிள்ளைக்கும் விவாகம் நடந்து மூன்று மாதங்களாயின. கல்யாணம் செய்து கொண்ட அதிர்ஷ்டம் கொம்புபிள்ளைக்கு வேலைபோய் விட்டது! வண்டிகள் ஒன்றூே டொன்று மோதிக் கொண்டுசனத்தசேதமாய்விட்டவிசாரணையில் ஜெயிலுக்குப் போகாமல் வீடு வந்து சேர்ந்ததே பெரிய பாக்கியம்! வேலை போய்விட்ட பிறகு வேறு ஏதேதோ வியாபாரங்கள் தொடங்கியும் எல்லாம் நஷ்டப்பட்டே வந்து, அதே துக்கத்தில் வைகுண்ட டிக்கட் பெற்றுக்கொண்டார். அம்புஜம்மாளிடம் ஏதோ பைராகி கொடுத்த வசிய மருந்து இருக்கிற தென்றும், அதை அவள் கணவனுக்குக் கொடுத்து வசியமாக்கிக்கொள்ள நினைக்க, அந்தப் பாழும் மருந்தோ இரத்தத்தை முறித்து கொம்பு பிள்ளையை வைகுண்டத்தில் கொம்பு ஊதும்படி அனுப்பிவிட்ட தென்றும் ஆற்றங்கரையில் பெண்கள் பேசிக்கொண்டார்கள். மொத்தத்துக்கு இந்த சாந்ததேவி புருஷனிடம் வாழ்ந்தது ஐந்து வருஷங்களாகும். புருஷன் போனபிறகு கர்ப்பம் உண்டாகாதென்று தெரிந்த அம்புஜத்தேவி அதற்கு முன்பே நாலுமாதம் நல்ல வேளையாக முழுகாதிருந்தாள்.

ஃ

கொம்பு பிள்ளையின் ஆஸ்தியான இரண்டாயிரம் ரூபாயோடு அண்ணன் வீட்டிற்கு வந்து அவர் மனைவிக்குக் கொம்பு ஊத ஆரம்பித்துக் கொண்டாள். அம்மணியம்மாளுக்கு மூன்று வயது பையனும், கையில் ஒரு ஆண் குழந்தையும் இருந்தது. அம்புஜம்மாள் பத்தாவது மாதம் ஒரு அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். தனக்குப் பிறந்தது பெண் என்று தெரிந்ததும், தன் அண்ணனின்மூத்த மகன் ராமசாமிக்குக்கொடுப்பதென்று பிரஸவவீட்டுக்குள்ளேயே தீர்மானித்துப் பெரிய முடி போட்டுக் கொண்டாள். ஃ

அம்மணியை அம்புஜம் படுத்திய பாடு அந்த ஊரெல்லாம் தெரியும். அது மட்டுமா? அந்தப் பைராகி மருந்

பட்ட நிந்தை, கேட்ட திட்டு, பழிச்சொல்—இவற்றின் அசுத்தங்களை சதா எண்ணி ஏங்காதே. நீ தூய்மை யுடையவனுக மட்டும் உன்னைக் கவனித்துக்கொண்டு போ. உன் தூய்மையே எதிர்ப்பாளரை நாசம் செய்யும்.

தையும் எப்படியோ கொடுத்துவிட்டாள். அது தேகத்தின் சதையை எல்லாம்கரைத்து எலும்புக்கூடாக்கி விடவே அம்மணி பாயும்படுக்கையுமானள். மோகனரங்கம் பிள்ளைக்கே தனது மனைவி படும்பாடு சகிக்காமல் கைக் குழந்தையான கல்யாணசுந்தரத்தோடு அவன் தாய் வீட்டுக்கு அனுப்பி விட்டார். தனக்குத் துணையாயிருக்க மூத்த குமாரனை ராமசாமியை மட்டும் தன்னிடம் வைத்துக்கொண்டார்.

ஃ

ராமசாமியை வளர்த்துப் பதினெட்டு வயதாக்கியது அம்புஜம்மாள் தான். ராமசாமிக்கே எல்லா சொத்துகளும் வீடும் வயலும் சேரவேண்டுமென்றும், துஷ்டப்பயலான கல்யாண சுந்தரத்துக்கு ஒன்றும் கொடுக்கவேண்டாமென்றும், கொடுத்தாலும் அவன் அதை வைத்துக் காப்பாற்ற மாட்டானென்றும் அம்புஜம் தன் அண்ணனுக்கு ஓயாமல் உபதேசங்கள் செய்தவாறு இருந்தாள். மோகனரங்கம் பிள்ளையும் தன் தங்கை சொல்லியபடியே முக்கால் பாகத்துச் சொத்துகளை மூத்தவனுக்கே எழுதி வைத்து விட்டார். அம்புஜம்மாளுக்கு இதில் அதிக சந்தோஷம். ஏனெனில் தன் பெண்ணான மீனாக்ஷியை ராமசாமிக்குக் கொடுத்துத் தன்னிடம் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது பிரஸவ அறையிலேயே செய்துகொண்ட தீர்மான மல்லவோ?

ஃ

கல்யாண சுந்தரத்தின் கதியென்ன? கால்பாக சொத்துக்கள்தானு அவனுக்கு? ஒரு கண்ணில் வெண்ணெயும், மற்றொரு கண்ணில் சுண்ணாம்புமா? மோஹனரங்கம் பிள்ளை யோக்கியராயிற்றே, அப்படிச் செய்வாரா? சென்னையிலிருக்கிற பதினைாயிரம்ரூபாய் பெறக்கூடிய தனது அச்சுக்கூடத்தை அவனுக்குக் கொடுத்து ரகசியமாய்ச் சென்னைக்கு அனுப்பிவிட்டு எங்கோ காணாமற்போனான் என்று தன் தங்கைக்குச் சொல்லிவிட்டார். அது அம்புஜத்துக்கு வயிற்றில் பால் வார்த்ததுபோல் ஆயிற்று. மிகுந்திருக்கும் கால்பாக சொத்தையும் ராமசாமிக்கே எழுதி வைத்துவிடும்படியும், ஓடிப்போன கலியாணம் இனி ஒரு நாளும் திரும்பிவரப் போகிறதில்லையென்றும் உபதேசம் ஓதினான்.

ஃ

அம்மணியம்மாளின் கதியென்ன? கொஞ்சம் கொஞ்சமாகத் தேகம் தேறி சதைபிடித்து இப்பொழுது சுகமாகவே இருக்கிறாள். அவளைத் தாய் வீட்டிலேயே இருக்க விட்டுத் தான் வாரத்துக்கு நாலுநாள் அங்கு தங்கிக்கொள்வதான வழக்கத்தைக் கொண்டார் மோஹனரங்கர். இங்கு வரவும் வேண்டாம்; தன் தங்கை மறுபடி மருந்து வைக்கவும் வேண்டாம்; கலகமும் வேண்டாம் என்பது அவரது எண்ணம்.

ஃ

ஒருநாள் பகல் பத்துமணி இருக்கும். ராமசாமி பாக்குக்கூடையும் வெற்றிலைக் கூடையுமாக இரு ஆட்களுடன் வந்து தன் தகப்பனுக்கும் தன் அத்தை அம்புஜம்மாளுக்கும் வெற்றிலைப்பாக்கும் திருமணப் பத்திரிகையும் வைத்துக் கொடுத்தான். மோஹனரங்கம் பிள்ளை சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டார். அத்தையம்மாளும் வெற்றிலைப் பாக்கைப் பெற்றுக் கொண்டு யாருக்குக் கல்யாணமப்பா என்று கேட்டாள். கல்யாணப் பத்திரிகையை வாசிக்கத் தெரிந்தமீனாக்ஷி அதைப் படித்து விட்டுச் சிரித்துக்கொண்டாள். அப்பொ

ஆணித்தரமான நூல்களை அவதானமாக ஆராய்ந்து, அநேக நுட்பங்களை அரும் பொருளான மனம் என்னும் களஞ்சியம் நிறையக் கட்டிவை.

மூறு தபால்காரன் ஒரு கார்டைக் கொண்டுவந்து கொடுக்க, அதை ராமசாமி பார்த்துவிட்டு, மீனுக்ஷி, இந்தா உனக்குக் காகிதம் வந்திருக்கிறது என்று அவளிடம் கொடுத்தான். அவளும் அதைப் பிரியமாக வாங்கிக் கொண்டாள். எந்த ஊரிலிருந்து கடிதம் வந்தது என்று அம்புஜம் கேட்க, அதற்கு ராமசாமி என் தம்பி எழுதியிருக்கிறான் என்றான். "அந்தப் பயல் இன்னுமா இருக்கிறான். அவன் மீனுக்ஷிக்கு ஏன் காகிதம் போடவேணும்? அவளை மயக்கப் பார்க்கிறானு" என்று சீறிக்கொண்டு எழுந்தாள். பிறகு மறுபடி ஞாபகம் வந்து, யாருக்கப்பா கல்யாணம் என்று திரும்பவும் கேட்டாள். என் தாய் மாமன் பெண்ணுக்குக் கல்யாணம் என்று ராமசாமி சொல்ல, மாப்பிள்ளை எந்த ஊரு என்று அம்புஜம் கேட்க, நான்தான் மாப்பிள்ளை அத்தே என்றான் ராமசாமி.

ஃ

என்னடா கேலி செய்கிருயா என்று அம்புஜம் சொல்ல, அதற்கு ராமசாமி, சந்தேகமா யிருந்தால் அப்பாவைக் கேட்டுக்கொள்ளு என, அவரும் "ஆம்" என்று தலையை யாட்ட, தள்ளிக்கொண்டு எழுந்தாள் அம்புஜம். "என் பெண் இருக்கையில் எப்படி யண்ணு நீ வேறு பெண்ணைப் பேசலாம்" என்று கோபாக்கினியுடன் கேட்க, அதற்கு அவர் "கலியாணம் செய்து கொள்வது நானல்ல, ராமசாமியே செய்து கொள்வது; அவன் பிரியம், அவன் தாயார் பிரியம்; நான் இதில் குறுக்கிடுவது சரியல்ல. உன் பெண்ணை வேண்டுமானல் நீ விட்டை விட்டு ஓட்டி விட்ட அந்த மூடக்கல்யாண சுந்தரத்துக்குக்கொடு; அவன் மீனுக்ஷிமேல் பிரியம் வைத்து அடிக்கடி அவளுக்குக் கடிதம் எழுதுகிறான்" என்றுசொன்னார். அம்மணிச் சிறிக்கிக்கு இவ்வளவு ஆணுவமா என்றாள் வயிறெரிந்து அம்புஜம். என் தாயாரை வைதால் ஓங்கிக் கன்னத்தில் அறைவேன்; அத்தை, உன் வாயை யடக்கு என்றான் ராமசாமி.

ஃ

ராமசாமிக்குக் கல்யாணம் நடந்துவிட்டது. அம்புஜம் அதற்குப் போகாமல் அன்றெல்லாம் ராமசாமியைச் சபித்துக் கொண்டே கிடந்தாள். மோஹனரங்கம்பிள்ளை அன்று முதல் தன் மனைவியிடமே தங்கிவிட்டார். அம்புஜம் என்ன செய்கிற தென்று கையைப் பிசைந்தாள். கல்யாண சுந்தரத்தின் மீது அவள் கவனம் போயிற்று. "அவனுக்குச் சொத்துக்கள் எதுவும் வைக்காதபடி செய்து முக்கால் பாக சொத்தையும் ராமசாமிக்கே தரும்படி செய்து விட்டேனே பாவி" என்று கலங்கினள்.

ஃ

ஒரு வருஷத்திற்குப் பிறகு கல்யாண சுந்தரம் சென்னையி லிருந்து வந்து தன் தாயாரிடம்போய் முத்தங்கள் பெற்றுக்கொண்டு, அந்த முத்தங்களை மீனுக்ஷிக்குத் திருப்பிக் கொடுப்பதற்காகத் தகப்பனர் வீட்டுக்குவந்து மீனுக்ஷிக்கு அவற்றை அன்புடனே கொடுத்தான். வெளியில் போயிருந்த அத்தை அம்புஜம்மாளும் அந்த சமயம் உள்ளேவந்து சுந்தரத்தைக்கண்டு "வா அப்பா வா" என்று உபசரித்தாள். "என்ன அத்தை! உபசாரம் பலமாயிருக்கிறதே; என் அண்ணு மீனுக்ஷியை விவாகம் செய்து கொண்

மனேபலத்தின் ஓர் அங்கமாகிய பொறுமை என்பது மிக நண்ணியது, கனம் மிக்கது, அரியது. போகம் அனைத்திற்கும், பராக்கிரமம் அனைத்திற்கும் மூலமாயுள்ளது பொறுமை. அந்தப் பொறுமை இல்லாவிடில் இதயத்திற்கு இன்பம் தரும் ஆசையும் துன்பமாய்விடும். (ஜான்ரஸ்கின்.)

டிருந்தால் என்ன இப்படி உபசரிப்பாயா ?" என்றான். அம்புஜத்துக்கு இது சரிஎன்று தைத்தது. பதில் பேசினால் சுந்தரம் எங்கே கோபித்து விவாகத்துக்கு மறுத்து விடுகிறானோ என்று தன் பவளவாயை மூடிக் கொண்டாள். அம்புஜத்தின் ஆயுவில் வாயை மூடிக்கொண்டது இதுவே முதல் தடவை! காலம் எவரையும் அடக்கிவிடும் தானே!

ஃ

அடுத்த மாதம் அம்புஜத்தின் பெண்ணான மீனாக்ஷிக்கும் கல்யாண சுந்தரத்துக்கும் விவாகம் நடந்தேறியது. அம்மணியம்மாள் ராமசாமி எல்லோரும் வந்திருந்து ஆசீர்வதித்தனர். இது நடந்து இப்போது நான்கு வருஷங்களான போதிலும், இன்றைக்கும்கூட ராமசாமிக்கு முக்கால்பாகம் சொத்துக்கள் போய் விட்டதே யென்று அம்புஜம்மாள் ஆங்காரத்துடனே ராமசாமியைக் கண்டபடி வைதுகொண்டிருப்பதாகக் கேள்வி.

அது எனது பாக்கியமே.

ஞானம், விவேகம், அனுபவம் இவற்றின் களஞ்சியமாக இருந்து தமிழ்ச் செல்வர்களுக்கு மிகுந்த உத்ஸாகத்தைக் கொடுத்தவரும் "அமிர்த குணபோதினி"யின் ஆறுவது வருடத்தில், நானும் புது சந்தாவைச் செலுத்தித் தொடர்ந்து பெறுவது எனது பெரும் பாக்கியமாகவே எண்ணுகின்றேன்.

செல்வாக்குள்ள பக்கமே தலையை ஆட்டி சேருவர்

எதிரில் நிற்பவன் ஏழையாக இருந்து, அவனை எதிர்த்துக்கொண்டவர் செல்வாக்குள்ளவராக இருந்தால், ஏழையின் பக்கமே நியாயம் இருப்பினும், செல்வாக்குள்ளவர்கள் பக்கமேதான் எல்லோரும் சேருவார்கள். தாயாரின் பேருக்கே வீடும் ஸர்வ சொத்துக்களும் இருந்திருந்து, அந்தத் தாய் மருகிமீதுள்ள துவேஷத்தால் குமாரனை எதிர்த்து அவமதிப்பின் அருகிலுள்ளோர் செல்வாக்குள்ள அந்தத் தாயாரின் பக்கம் சேருவார்களேயன்றி, பரிதபிக்கத் தக்கவிதமாய் வாடிப் புண்பட்டுள்ள அந்த ஏழையான குமாரனின் சார்பில் சேரவோ, அவனுக்காகப் பரிந்து பேசவோ வரமாட்டார்கள். ஆனால், யாவற்றுக்கும் மேலே பகவான் ஒருவர் இருக்கிறார். அவர் பாரபக்ஷமுடையவரல்ல. ஏழையின் கண்ணீரை அவர் நன்றாக அறிவார்.

விரோத வெறிப்பட்டு விபரீதமாய் நடப்பவர்கள் எதற்கும் ஒரு கை துணிந்து விடுவர்.

சாமான்னிய புத்தியுள்ளவர்கள் கண்ணெதிரிற் காணும் பொழுதன்றி, கண்டபின் அதைக்குறித்து ஏதும் நினையார்கள்.—விவேகிகளே—?



தானே செலவிடுகையில் தெரியும்



“மிளகாய் நேற்றே கிடையாது, மிளகும் போதாது. உப்பு ஆகிவிட்டது, புளியுமில்லை” என்று நீ சொல்லுகையில், அதற்கு உன் கணவனர் எப்படியோ இன்றைக்குச் சமாளித்துக்கொள்ள முடியுமல்லவா என்று திருப்பிக் கேட்கிறார். அந்த வார்த்தை உன் மனதுக்கு வருத்தமாய்க் குத்துகிறது. ஒன்றுமேயில்லையென்று சொன்னால் இன்றைக்கு எப்படியாவது சமாளித்துக் கொள்கிறதா?— என்று கோபத்துடன் முகத்தைச் சுளித்துக் கொள்கிறாய். கையில் பணம் இல்லாத அவர் கஷ்டத்துடன் திகைத்து, கடையில் கடனுக்குச் சாமான்களை வாங்கிவந்து போடுகிறார். அவருடைய அந்தக் கஷ்டத்தை நீ அறிகிறதேயில்லை. பிறகு நீ அதை உணர்வதற்கும் ஒரு காலம் வருகிறது. உன் கணவனர் தொழில் நிமித்தமாக உன்னிடம் வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியூருக்குச் சென்றுவிடுகிறார். இப்பொழுது நீ வீட்டிவில்லாத சாமான்களைத் தாராளமாக வாங்கிக் கொள்ளலாமல்லவா? உன் கணவனரிடம் ஒரு பதார்த்தத்துக்குச் சொல்லி, அதற்கு அவர் நாளைக்கு ஆகட்டுமென்று தலையசைக்க, அதன்மேல் நீ அவரைக் கோபித்துக் கொள்வதான தொந்தரைகள் எல்லாம் இப்போது இல்லையல்லவா? நீ நினைத்ததை வாங்க இப்போது எவ்வளவோ சௌகரியம் கிடைத்துவிட்டது. உன்னைத் தடுக்க எவருமில்லை. உன் கையிலும் பலமாகப் பணம் இருக்கிறது. இராஜாத்தி மாதிரி எதையும் நீ வாங்கலாம்; எந்தச் செலவும் செய்யலாம்.

ஃ

ஆனல், நீ அப்படி இப்போது தாராளமாகச் செலவிட முற்படுகிறாயா? அதுதான் காணேம்! உன் கையில் பணம் ஒருமிக்கக் கிடைத்து, உன் கணவனரும் ஊரில் இல்லாமல், அவரது குடும்ப நிர்வாகப்பொறுப்பு உன் தலைமேல் சுமந்தபின்பு—நீ உன் கையிலுள்ள பணத்தை நினைத்த விதமாகவெல்லாம் கண்டபடி செலவிடுவதென்றால் அதற்கு முடியாமலே போய்விடுகிறது; அதற்கு உன் மனமும் சம்மதிப்பதில்லை. நீ பொறுப்புக்காரியாய், நிதானமுள்ளவளாய் மாறிவிடுகிறாய். முதல் இரண்டு தினத்தில் உன் கை தாராளமாகச் செலவிட்டது உண்மை தான். ஆனல், மூன்றுவது நாளோ—இப்படி மனம் போனபோக்கில் செலவிட்டால்—நாளைக்குப் பணம் முற்

குடும்பப் பெருச்சாளிகள் வீட்டுத் தலைவனுக்கு அஞ்சாது.

றிலும் தீர்ந்து விடுமானால்—அதற்குப் பிறகு செலவுக்குப் பணத்திற்கு என்ன செய்கிறது என்ற கவலையும் விசாரமும் உன்னைப் பாதிக்கத் தொடங்கும். அந்த எச்சரிக்கை உன் நெஞ்சில் சுரீர் என்று குத்தித் தைக்கும். ஆகவே, மூன்றாவது தினத்தில் நீ செலவிடுவது வெகுவாகக் குறைந்துபோய் விடும். வெகு செட்டாகச் செலவிடத் தொடங்கிக்கொள்வாய். இன்றைக்குப் புளியில்லாவிடினும், இருக்கிற சொற்பத்தில் இன்று குழம்பு வைத்துக்கொண்டு பொழுது போக்கி விடலாமென்று எண்ணுவாய். அவ்விதமே செய்யவும் தலைப்படுவாய். இது மூன்றாவது நாள் தெரிந்துகொள்ளுகிற படிப்பினையும் அனுபவமுமாகும்.

ஃ

இனி, நான்காம் நாள் பொழுது விடிகின்றது. வீட்டில் புளியும் இல்லை, மிளகாயும் இல்லை. நேற்று சமாளித்ததுபோல் சமாளிக்க இன்று வகையுமில்லை. வீட்டு வழக்கமோ புளி இரண்டு வீசையும், மிளகாய் ஒரு வீசையுமாக மொத்தமாய் வாங்குவது தான் வாடிக்கை. அப்படி இப்போதும் வாங்கிவிட்டால் கையிலுள்ள பணம் அதிகம் செலவாகிவிடுமே யென்று உனக்குத் தோன்றுகிறது. அத்துடன்கூட மற்றொரு குடும்ப அநுபவஞானமும் உன் மனதில் உதயமாகின்றது. அதாவது—அதிகமாகவும் மொத்தமாகவும் ஏராளமாய்ச் சாமான்களை வீட்டுக்கு வாங்கிப்போட்ட சமயத்தில்—அதற்குத் தக்கபடி—அது செலவழிந்துவிடும் படியாக—உடனே அன்று மாலைக்குள் தானே ஒரு பெரிய விருந்துக் கூட்டம் வந்து குந்திக்கொண்டு பல நாளைக்கும் போகாதபடி யாவும் தின்று அழித்துவிட்டுப் புறப்பட்டிருக்கிற சம்பவங்கள் உன் ஞாபகத்திற்கு வருகிறது. அது உன் நினைவுக்கு வந்தவுடனே, அதிகமும் வாங்க வேண்டாம், அது தின்றுதீர அதிக மனிதர்களும் வந்து தொலையவேண்டாம்; அவர் இல்லாத சமயத்தில் யாரால் இந்த விருந்துகளைச் சமாளிக்கமுடியும்; மேலும் அவர் எப்போது பணம் அனுப்புவாரோ என்னவோ, கையில் உள்ளது ஆகிவிட்டால் எவ்வளவோ திண்டாட வேண்டிவருமே என்று ஆயிரம் நினைவுகள் நினைத்துவிட்டு — ஒரு வீசை மிளகாய்க்குப் பதிலாகக் கால் வீசை மிளகாயும், இரண்டு வீசை புளிக்குப் பதிலாக அரை வீசைப் புளியுமாக வாங்குகிறாய். நான்காவது நாளில் நீ எவ்வளவு சிக்கனமுள்ளவளாகிவிட்டாய் பார்த்தாயா ?

ஃ

இந்த சிக்கனம் உன் கணவனார் வீட்டிலிருக்கையில் உனக்கு வரவில்லையே! அவர் இரண்டு கூடை நிறைய சாமான்கள் வாங்கிவந்தால்—இந்தப் புளி போதுமா என்பாய். காய்கறிகள் வாங்கிவந்தால் இந்தப் பாவக்காய் உங்களின் ஒரு இலைக்கே சரியாய்ப் போகுமே. இதைக் கறியாக்கி யாருக்கு வைக்கிறது—ஒரு வாய்க்கே போதாதே—அதிகமாய் வாங்கி வருகிறது தானே—இப்படியெல்லாம் செட்டு காண்பித்தா

சாமான்னியன் ஒன்று செய்தால், அது நன்றானாலும் தீதானாலும் பிறர் அதைக் கவனிக்கிறதில்லை. சற்று வியாபகனாயுள்ளவன் ஒரு தீமையான காரியத்தைச் செய்தாலோ, அதை மற்றவரும் கவனித்து, அதற்கு ஒரு மதிப்பும் தந்து பாராட்டித் தாமும் அவ்வாறே செய்து, அதுதான் நாகரீகமென்றும், அதில் தமக்கு ஒரு பெருமை ஏற்பட்டு விடுவதாகவும் எண்ணி விடுவர்.

குடித்தனம் விடியப்போகிறது ?—என்று எவ்வளவுக்குப் பழித்துக் குத்திப் பேசியிருக்கிறாய்? ஓயாத விருந்து வந்து செலவுக்குக் கலங்கினால், ஒரு பெண் என்று வீட்டில் இருந்தால் அவளைச் சேர்ந்தவர்கள் வருவார்கள் தான் போவார்கள்தான்; அதற்கு இப்படி நடுங்குகிறீர்களே என்று எவ்வளவு சிடுசிடுத்துப் பேசுகிறாய்? எவ்வளவு அதிகச் செலவுகள் செய்யும்படி ஏவியிருக்கிறாய்? பால் எவ்வளவுக்கு வாங்கி யிருக்கிறாய்? தெருவில் போகிற ஜவுளிக்காரனை வீட்டிற்குக் கூப்பிட்டு வேண்டிய துணிமணிகள் வாங்கிக்கொண்டு நாலு ரூபா எழனு கொடுங்கள் என்று உன் கணவனிடம் கேட்கிறாய். அவரோ என் கையில் பணம் இருப்பதும் இல்லாததும் தெரிந்துகொண்டல்லவா—என்னைக் கேட்டுவிட்டல்லவா—நீ ஜவுளி வாங்கவேண்டும்; ஏதுமே கேளாமல்—நீயே துரைசானிபோல் வாங்கிவிட்டுப் பணத்தை யெடு என்றால் என்ன செய்கிறது—இருந்தால்தான் தருகிறேன்—என் பெட்டியில் பணம் இல்லாவிட்டால் எவ்வளவு கஷ்டம் என்று சொல்லிவிட்டு நீ கேட்ட பணத்தைத் தருகிறார். அவர் சொன்ன புத்திமதி உன் மனதில் படுகிறதா? இல்லவேயில்லை. "இவ்வளவு சொல்லிக் காட்டித் தான் பணத்தை எடுத்துக் கொடுக்க வேண்டுமோ?—பேசினது போதும்—சரி சரி—உங்கள் பேச்சு அவ்வளவில் இருக்கட்டும்—ரூபாயை இப்படிக் கொடுங்கள்" என்று வாங்கிக்கொண்டு போய்விடுகிறாய். அவரோ இவளுக்கு எவ்வளவு சொல்லியும் புத்தி வரவில்லையே என்று வருத்தப்படுகிறார். இன்னும் தெருவில் போகிறதை யெல்லாம் வாங்கிக் கொடுக்கும்படி தொந்தரை செய்தாய். அவரைப் படாதபாடு படுத்தினாய். பணத்தின் அருமையும், அதைத் தேடுவதிலுள்ள பாடும், பரிதவிப்பும் சற்றேனும் உனக்குத் தெரியவேயில்லை. பக்கத்து வீட்டுக்கும் எதிர்வீட்டுக்கும் இரவல் கேட்டபோதெல்லாம் தாராளமாகக் கொடுத்தாய். அது திரும்பி வரவேயில்லை. கொஞ்சமாகத் தருகிறதுதானே என்று உன் கணவனார் சொல்லியதற்கு—நீங்கள் என் இதிலெல்லாம் தலையிடுகிறீர்கள்—நான் கொஞ்சமாகத் தராமல் வாரிவாரியா கொடுத்து விட்டேன்-இதிலெல்லாமா வீட்டுப் புருஷர்கள் வந்து நுழைவது;—ஏன் இப்படிப் பிடுங்குகிறீர்கள் என்று வெடுவெடு எனப்பட்டிருக்கிறாய். இவ்வளவும் உண்மையேயல்லவா? இப்படி அவரைப் பாடுபடுத்தி நீ கண்டபலன் என்னவோ?

ஃ

ஸகோதரியே! இப்போது நீ எப்படியிருக்கிறாய்? உன் பர்த்தா வெளியூருக்குச் சென்றபின்பு எவ்வளவு சிக்கனமும் செட்டுமா யிருக்கிறாய்? நீ அத்தனை சொற்பமாய் வாங்கின புளி, மிளகாய் உன் கண்ணுக்கு அதிகமாகவே தோன்றிற்றல்லவா? கால் வீசை உருளைக்கிழங்கை இரண்டு நாளைக்கு வைத்துக்கொள்கிறாயே. விருந்தினர் எவராவது வந்தால் அவர் ஊரில் இல்லையென்று சொல்லி காபிக்குப் பதில் வெந்நீரும், மூன்று இட்டிலிக்குப் பதில் இரண்டு இட்டிலியும், நெய் சக்கரைக்குப் பதில் மிளகாய்த் துவையலும் வைத்து உன் இல்லாமையைக் காண்பித்து சீக்கிரம் அன்றைக்கே விருந்தினர் புறப்பட்டுப் போகச்

வா வா வா என்று சிலரை விருந்துக்கு அழைத்துவிட்டு, அவர்கள் வந்த பிறகு கிசு கிசு வெனப் பேசிக்கொண்டு முழிக்கிறதும் சில இடங்களில் உண்டு.

செய்துவிடுகிறாய். அல்லது அவர்கள் உன்னவர்களானால் அவர்களையே விட்டுச் செலவு செய்யும்படி தூண்டுகிறாய். ஜவுளிக்காரன் வீதியில் சென்றால் மவுனமாயிருந்து விடுகிறாய். அரையணா தயிர்வாங்கிய நீ காலணா தயிருக்கு வருகிறாய். இரவல் தருவது முதலியதெல்லாம் சுருங்கிவிடுகிறது. பக்கத்துவீட்டுப் பார்வதி காப்பித்தூள் இரவல் கேட்டதற்கு, ஐயோ! இல்லையேயம்மா, இருந்த கொஞ்சத்தைக் காப்பி வைத்துவிட்டேனே என்று கையை விரிக்கிறாய். உள்ளேயோ டப்பியில் நாலு பலம் காப்பித்தூள் அப்படியே உட்கார்ந்து கொண்டு இருக்கிறது. இவ்விதமாகச் சிக்கனம் செய்து உன் பர்த்தா கொடுத்துச்சென்ற ரூபாய்க்குள்ளாகவே குடித்தனத்தை நிர்வகித்து, கையில் இரண்டு ரூபாய் மிச்சமாகும்படி செய்துகொள்கிறாய். இதற்குப் பிறகு அடுத்த மாதம் உன் செலவுக்கு உன் பர்த்தாவிடமிருந்து மணியாடர் வருகிறது.

ஃ

உன் பர்த்தா ஊரில் இல்லாதபோது கடந்துகொண்டு காட்டிய சிக்கனத்தை அவர் வீட்டில் இருக்கும்பொழுதே காண்பித்து அவர் மனம் நோகாமலும், அவர் அதிகப்பட்ட செலவுகளைச் செய்யும்படி செய்து அவரைக் கசக்காமலும், அவர் கண்ணில் விரலைப்போட்டு ஆட்டாமலும், அவரது மனது குளிரும்படியாக—அவர் உன்னைக் கொண்டாடும்படியாக—குடித்தனத்தை நடத்தினால் எவ்வளவு மேன்மையாக இருக்கும்? வெளியிற் சென்று நாலாவகையிலும் துன்பப்பட்டு வீட்டில் ஏதாவது சுகம் கிடைக்காதா என்று உன்னிடம் வருகிற உன் பர்த்தாவுக்கு நீ ஆறுதல் உண்டாகும்படி நடந்தால் வாழ்க்கை எவ்வளவு உன்னதமாகப் பரிமளிக்கும்? நீ ஆட்டிவைத்தபடியே குடும்பம் ஆடுகிறது. குடும்பத்தை மேன்மையாகவோ தாழ்வாய் ஊர் சிரிக்கும்படியாகவோ நடத்திக்கொண்டு போகக்கூடிய சக்தியை என் அருமை அக்கா! உன் கையில் பகவான் கொடுத்திருக்கிறார். அதை உலக நன்மைக்கும், உன் குடும்ப நன்மைக்கும், உன் பர்த்தாவின் நன்மைக்குமாக உபயோகிக்கக்கடவாய்.

ஃ

உன் பர்த்தா உன்னால் ஏதாவது ஸந்தோஷம் கிடைக்குமென்றே இல்வாழ்க்கையில் புகுந்தார். அந்த வாழ்க்கை தேவேந்திர போகமாய் இருக்குமென்று அவர் ஆகாசக்கோட்டை கட்டினார். ஆனால், கண்ட அனுபவமோ—சதா கவலையும், ஸஞ்சலமும், செலவுக்குப் பலவகையில் தத்தளிப்பும், எவ்வளவு கொண்டுவந்து போட்டாலும் திருப்தியில்லாத வீடும், விசுவாசம் காணாத முகங்களுமாக இருக்கின்றன. இவ்வளவு அமாவாசை இருட்டிலும் உன்னுடைய புன்னகை யொளிர்வதனமாகிய சந்திரன் தோன்றினால், அவர் ஸகல துன்பங்களையும் மறந்து ஆநந்தபரவசராகி விடுகிறார். ஆகவே, ஸகோதரியே! அவர் இப்பூவுலகில் உள்ளவரை ஸந்தோஷத்துடன் இன்புறுகிறவராகவே இருக்கச் செய்துவிட நீ முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்காய்! உனக்கு அந்த சக்தி இருப்பதால்தான் உன்னை வேண்டுகின்றேன். அவ்விதமே நடப்பாயாயின், அதுவே உனக்கு இகபர சுக சாதனமாக அமையும். உன்னால் கூடும். நீ இதைச் செய்து பார்.

அழகிய ஆடைக்குள் அந்த ஆடையைவிட அதிக வசிகரமான விரும்பத்தக்க வஸ்துவாகிய தேகம் மறைவுண்டிருக்கின்றது.



பிரிந்த தோழர்கள்.

(727-ம் பக்கத் தொடர்ச்சி.)

“ எதுவரை என் கை இளைக்காதிருக்குமோ
அதுவரை நெருங்கி அளவளாவிடுவர் :

எந்நாள் என்கை இளைத்த தறிவரோ
அந்நாளே எனை அகன்று போய்விடுவர் !

இத்தகைப் புன்மை இயல்பின ராய
எத்தனையோ சகர் இன்றிருக்கின்றனர் !

ஃ

அன்போடு குலவி அகம் மகிழ்ந்திருந்த
இன்ப நன்னிலையில், எனைத் தனி விட்டு

பறந்து சென்ற பட்சிகளே போல்
இறந்தும் வெளியே ஏகியும் பிரிந்த

தோழர் இன்றியும் துயரம் போக,
ஏழையேன் கடந்த(து) எண்ணி வருந்தி

ஏங்கி நிற்கச்செய் திருப்பவராய
பாங்கர்களென்னும் பண்பினர் சிலரே !

ஃ

செல்வச் செருக்கால் சென்ற காலத்தில்
பல்வித நட்புப் பான்மைக்(கு) உரிய

நிகழ்ச்சிகள் தமது நினைவிலிருந்தும்,
இகழ்ச்சியா(ல்) என்னை ஏறிட்டு நோக்கி

என்றனை முன்னர் எங்கும் காணா(து)
இன்றே கண்டவர் என்ன நடித்து

“ எங்கு நின்றும் எய்தினீர் இன்று ?
இங்கு வந்ததும் என்ன காரணமோ ?”—

என்ன வினவிய இயல்பினைக் கண்டு
பன்னு மவரைப் பார்த்து வியந்து,

உலகம் பித்துக்கொண்டது; கையில் பொருளுடையவன் கால் கீழ்த் தங்கும் இயல்புடையது. பணக்காரன் சொல்லுக்கெல்லாம் தலையாட்டுவது.

உள்ள மகிழ்ச்சிக்(கு) உறுதுணை என்ன
பள்ளியி லென்றன் பாங்கனு யிருந்து

என்னேடும் என்றும் இணை பிரியாது
மன்னிய நாளேலாம் மறந்தனை கோல்லோ?

என்னுயிர் நேசனுய் எண்ணி யிருந்த
நின்மனம் இவ்விதம் நேர்ந்ததும் என்னே?—

என்ன யானும் இயம்பினே னுக,
"என்ன கோள்வதற்(கு) இவ்வித புனைந்துரை?

பள்ளி நட்பாம்! பரிவுற வேண்டுமோம்!
எள்ளி நகைக்க இடனலவோ இது!"—

என்றுரை யாடிய இயல்பினைக் கண்டு
வன்றுயர் மிகுந்து வாடிப் பிரிந்து,

புதிய வாழ்வில் புத்தி மயங்கி
மதியா தொழிந்த மனிதர் சிலரை

எண்ணி எண்ணி ஏங்குவன், ஒருகால்
நண்ணிய அவர்தம் நட்பை நினைந்தே!

ஃ

பேதைமை யதனுல் பிழைசில நிகழ
ஓதுமவற்றை உள்ளங் கோண்டு,

என்னறியாமைக்(கு) இரங்குத லின்றி
என்னிடம் வெறுப்பு எய்திய சில்லோர்

விலகிச் சென்று வேற்றுராக
நிலவுதல் கண்டு, நேஞ்ச(ம்) உடைந்து

பழய நட்பின்பம் பாவியேன் இன்று
இழந்ததை எண்ணி ஏங்கி நிற்கின்றேன்!

அவரை அடுத்து அடியனேன் செய்த
தவறினைப் போறுத்து தக்கன உணர்த்தி

பழய நட்போடு பழகுவி ரேன்று
கழறியும் பயனிலை! கமை * அவர்க்(கு) இலையே!

ஃ

* கமை=போறுமை.

நலமுற நட்புடை நல்லோர்க் கிடையில்
கலகம் மூட்டிக் கதை பல கட்டி

'அடி பல அடிப்பின் அம்மியும் நகரும்
படி' யென, அடிக்கடி பகையது வளர

ஐயமும் வெறுப்பும் அவரிடை எழுப்பித்
துய்ய நட்பின் தூய்மையைக் கலக்கிக்

கயவர் பிரிக்கக் கருத்து வேறுகி
அயலவர் போலும் அகன்ற நட்பினரை

உன்னில் என் உள்ளம் உளையுமே பெரிதும்!
பன்னுமத் துன்பம் பகரவும் படுமோ?

அன்னவர் என்னை அகத்தில் வெறுப்பினும்
என் மனம் அவரை இனியும் வெறுக்குமோ?

பழய நாள் நினைவைப் பண்புற நினைப்பின்,
பழய தோழரைப் பகைக்கவுங் கூடுமோ

இறந்தனர் சிலர்! வெளி ஏகிவிட்டனர் சிலர்!
மறந்தனர் சிலர் புது வாழ்வில் மயங்கியே!

பெருகிய வறுமையால் பிரிந்தனர் சிலரே!
நெருங்குமென் பிழையால் நீங்கினர் சிலரே!

கலகர் சூழ்ச்சியால் கலங்கினர் சிலரே!
உலகில் இவரெலாம் ஒதுங்கி சென்றுலும்

என்றும் பிரியா(து) என்னுயிர்க்(கு) இனியனுய்
நின்று, நிகரிலா நேசனுய் இலகும்

அருட்பெருஞ் சோதி ஆண்டவன்றன்னை
மருளது நீங்க வாழ்த்துகின் றேனே!

(முற்றிற்று.)

ஆரியூர் - வ. பதுமநாப பிள்ளை

அருந்தமிழ்க்கே என்றும் அரிய பணி செய்
பொருந்துநல்ல போதினியாள் போந்தாள்—வருவீர்
ஒருமிக்க நாங்கூடி உற்றுதவி செய்தே
வருவிப்போம் இன்றே விரைந்து. மூ. துரைப்பிள்ளை.



நமது கடை இன்று மாலையில் கூடிற்று.

“கடிதங்கள் நெடுநாளாக ஒருவருக்கொருவர் எழுதிக் கொண்டிருந்து, பிறகு ஒரு தினத்தில் இருவரும் முதன் முதலாகச் சந்திக்கிறார்கள். ஒருவரை யொருவர் இன்னார்தான் என்று அறிந்துகொண்டு ஓ! நீங்களா என்று விசாரித்தவாறு வெகு அன்புடன் குலாவுகின்றார்கள். எவ்வளவோ ஸம்பாஷணைகள் இருவருள்ளும் நடக்கின்றன. முகத்தைக் கண்ட பின்னர் மனத்தின் பரிசுத்தத்தை யறிய விரும்புகிறார்கள். வந்தவர் ஒண்டி மனிதரா, அல்லது குடும்பஸ்தரா என்பதையறிய முயன்று, தனி மனிதராயிருந்தால் நம்பிக்கைத் தாழ்வும், விவாகமானவராக இருந்தால் ஒருவிதமான நம்பிக்கையும் கொள்கிறார்கள். ஏமாற்றல், மோசம் செய்தல், தோலிருக்கச் சுளைவிழுங்குதல் முதலிய உத்தம (?) குணங்கள் இவரிடமுளதோவென்று அவரும், அவரிடமுளதோவென்று இவரும் வெகு கருத்தாய் ஆராய்கின்றார்கள். அதில் ஒன்றும் அறிந்துகொள்ள முடிகிறதில்லை. அறிவதற்கான ‘சரக்கு’ம் அச்சமயம் கிடைப்பதில்லை. இவ்விதம் ஒருவரையொருவர் அவரவரின் அந்தரங்க நுட்பத்தைக் காணவிரும்புவதிலேயே சந்திப்பு நேரத்தின் முக்கால் பாகத்தைச் செலவிட்டு விடுகிறார்கள். மிச்சமுள்ள கால் பாகத்தில் அரைக்கால் பாக நேரம் வந்தவரை உபசரிப்பதில் செலவாகிறது. எஞ்சிய அரைக்கால் பாகத்து நேரத்தில்தான் ஒருவர்மீதொருவர் பிரீதித்து அன்பு குலாவ முடிகிறது. இந்த சொற்பநேரத்து அன்பு பின்னர் வெகு ஆழமாய் வேரூன்றி விருத்தி கொள்வதுமுண்டு. அல்லது நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாமலே போய்விடுவதுமுண்டு. சந்தித்த இருவரும் உலக அனுபவங்களில் நன்கு பண்பட்டவர்களாயிருப்பின், தங்களின் தீர்மானத்தை அவசரப்பட்டுச் செய்யாமல் சற்று தூரத்தில் விலக்கியே வைக்கிறார்கள். பிறகு இருவரும் உபசார மொழிகள் கூறிக்கொண்டு பிரிகின்றனர். வந்தவர் சென்றபின்பு மற்றொருவர் தமது அருகிலிருப்பவரை நோக்கி வந்தவரைப்பற்றி உமது அபிப்பிராயம் என்ன, அவர் குணங்கள் எப்படி என்று வினவுகிறார். அதற்கு அருகில் இருப்பவர், விசுவாசக் கொக்கோ என்னவோ, யார் கண்டார்; எவ்விதம் துணிந்து சொல்வது; கண்ட முதன் முதலிலேயே எப்படி அறிந்துவிட முடியும் என்கிறார். அதே கருத்து தான் இவருக்கும் படுகின்றது. இவ்விதம் ஸம்சயத்திலேயே பொழுது கழிவதன்றி அன்புச் சிந்தனைகளால் பூரித்திட நேரம் வாய்ப்பதில்லை. பின்னர் பல ஸம்பவங்கள் நேர்ந்து

கிருப நேயர்கள் பத்திராசிரியர்களின் கஷ்டத்தைக் குறைத்து சமய ஸஞ்சீவிபோல் உதவுபவராவர். அவர்களின் காலசகாயத்திற்குக் கைம்மாறு செய்ய இயலா.

கொண்டு, அவற்றின் மூலமாகவே குணங்களை ஒருவகையாய் நிச்சயிக்க முடிகிறது. ஒருவரையொருவர் நம்பிச் சில காரியங்கள் செய்தே அதிலிருந்து அவரவர்களின் குணங்களையறிய நேர்கின்றது. அவ்விதம் நம்பித் துணிவதில் நஷ்டமோ லாபமோ இரண்டுக்கும் தைரியப்பட்டு ஒரு கை பார்த்தால்தான் எதையும் கண்டுணர வாய்க்கும். குணங்களையறிவதற்கு ஸம்பவங்கள் முக்கியம்" என்று ஆழாக்கு அரிசி அழகிரிசாமி பேசினார். ஃ

"ஆழாக்கு அரிசியார் சொல்லியது ஆடவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்ட விஷயத்துக்குப் பொருந்தும். ஆனால், ஒரு ஆடவனும் ஒரு பெண்மணியும் முதன் முதலிற் சந்திப்பாராயின், அது எலுமிச்சம்பழ ரஸத்தில் சோடா உப்பு கலந்ததுபோன்று பொங்கி எழும். சந்தேகிக்க இடமின்றியே இருவரும் அங்கு பரிசுத்தமான அன்பையே கொண்டு வளர்க்கலாம். பரஸ்பரம் பேசும் சொற்களும் சத்திய வாசகமாகலாம். இருவரும் ஆரம்பத்தில் பேசுதற்கு சங்கோசப்பட்டுப் பின்னடைந்து பிறகு தாராளமாக ஸம்பாஷிக்கத் துவக்கலாம். இருவரும் ஒருவரையொருவர் பரிசுத்தமானவர்களாகவே நினைத்து விடுவதுதான் அதிகமாக மாக நடக்கும் சங்கதி. பிறகுதான் ஸம்பவங்கள் ஏற்பட்டுக்கொண்டு அவரவரின் உண்மைக் குணங்களும், நாற்றங்களும் வெளியாகின்றன"— என்று இஞ்சி பச்சடியார் இயம்பினார்.

ஃ

"பெண்கள் இருவரும் சந்தித்துக் கொண்டாலோ?" என்று ஆமவடைப் பண்டாரம் இடையே ஒரு கேள்வியைப் போட்டார். "அவ்விதம் சந்தித்த இருவரும் பெண்மணிகளாயின், இயற்கைக் கவர்ச்சியினோடு அந்த நிமிஷமே உள்ளம் ஒன்றுபட்டுப் போய்விடுவர். பரஸ்பர சுகதுக்கங்களைப் பற்றியும் எவ்வித மறைவுமின்றி உள்ளம்விட்டுப் பேசிக்கொள்வார்கள். உபசரிப்பிலோ உண்மையாக நிற்பார்கள். ஒருவர்மீதொருவர் மிக்க வாத்ஸல்யம் கொண்டுவிடுவார்கள். ஒருவர் குழந்தையை இன்னொருவர் எடுத்து முத்தமிடுவார்கள். அவரவர்களின் குடும்ப ரகசியங்கள் அவ்வளவும் வெளிவந்துவிடும். இவ்வித ஒற்றுமை ஆடவர்களின் சந்திப்பில் நிலவாது" என்று அல்லா பிச்சை நவின்றார்.

ஃ

"ஒரு கடிதத்தை வாசிக்கையில் ஒரு வரியை இன்னொரு வரியாகப் பிழைபட வாசித்துவிட்டு அந்த வரியின் முடிவுக்கு வருகையில், அந்த முடிவு சரியாயில்லையென்று நமது மனத்துள் மறைந்துள்ள ஒரு சக்தி நமக்குக் கூறுகின்றது. மறுபடியும் அவ்வரியை ஆராய்கையில் நாம் தவறுதலாக வாசித்த பிழையை யுணர்ந்து திருத்திக்கொண்டு படிக்கையில் முடிவும் சரியாய்ப் பொருந்துகின்றது. அதை நம்மனத்துள் மறைந்திருக்கும் சக்தியும் ஒப்புக்கொள்கின்றது. இங்ஙனம் ஒன்றைச் சரியல்லவென்றும், சரியென்றும் எடுத்துக்காட்டுகிற அந்த சக்தி எதுவாயிருக்கலாம்? அந்த அறியப்படாத தெய்வீக சக்தியே இவ்வுலகையும் தீமைகளின்றும் காத்து நலம் புரிந்து வருகின்றது" என்று தாண்டவக்கோன் மொழிந்தார். ஃ

பஞ்சைக் கோலமாய்த் தென்படுவோரிடத்தும் ஒளி விளங்கும் விவேகம் நிறைந்திருக்கக் காணலாம்.

"ஜீவனத்திற்கான ஒரு வழியைத் தனது முதல் நோக்காகத் தேடிக்கொண்டு, வாழ்க்கையை அழகு படுத்துவதற்கான அளவு கல்வியும் பெற்றுவிடில் அதுவே போதும்; அதனின்றும் வானம்வரை எட்டி உயரலாம். மிக்க உயர்தரக்கல்வியை யடைந்து, பின்னர் ஜீவனார்த்தத்திற்கு ஏதுகரமின்றி ஒரு குமாஸ்தா ஆவதினும் ஒரு வியாபாரியாகலாம்; அல்லது உயர்தரக் கல்விக்காகத் தனது நிலங்களை விற்காமல் அதைக் காத்துக் கொண்டு, தனது சொற்ப கல்வியை நாளடைவில் சலியா முயற்சியுடன் விருத்தி செய்தவாறு நல்லொழுக்கத்தில் பற்றுடையவராய் நிற்றல் எத்துணையோ மேன்மை" யென்று தொந்திச் செட்டியார் கூறினர்.

ஃ

"ஒருவன் தான் களவாடிய ஒன்றை உபயோகப்படுத்தித் தன் வேலையை முடித்துக்கொண்ட பின்னர், சுயநன்மையைக்கோரி அந்த அன்புடையாரிடமிருந்து அபகரித்தோமே என்ற வருந்திய உணர்ச்சியோடும் நல்லெண்ணத்துடனும், அதன் சொந்தக்காரனுக்குத் திருப்பித்தந்து மன்னிப்பு பெற மனஸ்பூர்வமாய் விரும்புகிறான். அவ்வித மன்னிப்பால் தன்னைப் பரிசுத்தனுக்கிக் கொள்ளவும் ஆவற்படுகிறான். ஆனல், வெளிக்கு மன்னிப்பினும், ஹிருதய பூர்வமான மன்னிப்பு தனக்குக் கிடைக்காதென்றும், தன்னை ஒரு கள்வனென்றே கருதி தான் நிற்குமிடத்தில் காவல் காத்து, இனிவரும் காரியங்களிலும் ஜாக்கிரதைப்பட்டுத் தன்னிடம் சந்தேக உள்ளத்தோடு நம்பிக்கையற்றே நடப்பானென்றும், தான் களவாடியதைத் திருப்பித் தருவதனல் அவன் உண்மையாகவே சந்தோஷப்பட்டு விடானென்றும் பலபல நினைத்து வாடி உள்ளம் சோர்ந்து, தான் திருப்பித் தர நினைத்ததை அவ்விதம் செய்யாமல் அதை ஒரு மூலையில் எறிந்து மௌனமாய் விடுகிறான். மனஸ்பூர்வமான மன்னிப்பு உலகில் அருமையாய் இருப்பதால் விளையும் கேடுகளில் இதுவும் ஒன்று. மன்னித்தலில், மன்னித்தவனும் தெய்வீக குணம் பெறுகிறான்; மன்னிப்படைந்தவனும் தெளிவுகொண்டு திருந்தி அதுமுதல் பரிசுத்தனக நடக்க ஆவல் கொள்கிறான். மன்னிக்காதவர்களோ தங்களின் ஆத்திர சிந்தையையும் துவேஷபுத்தியையும் வளர்க்கிறார்கள். மன்னிக்கப்படாதவனே திருந்தி நல்ல தன்மையடைவதற் கில்லாமற் போய், பின்னும் தீயனய், விஷமியாய்த் தன்னை மன்னிக்காதவர்களைக் கொலை செய்துவிடவுங்கூடத் துணிந்து எவரும் நடுங்கத்தக்க பரம சண்டாளனாய் விடுகின்றான். குற்றம் செய்தலும், தவறு இழைத்தலும், ஒழுக்கம் பிசகுதலும் உலக வாழ்வில் ஸர்வ சாதாரணம். ஆதலின், கூடிய வரையில் மன்னித்து நற்புத்தி புகட்டித் தாமும் அப்பிழைபாட்டினை மனத்துள் வைக்காமல் மறந்து விடுவதே உலகைப் பரிசுத்தப்படுத்தும் வழியாகும்" என்று இருமல் பிள்ளை பிரஸங்கித்தார். ஃ

"பத்து வருஷங்கட்குப் பிறகு உபயோகப்படக்கூடிய ஒரு மூலிகையை அதைப் பறித்த அந்த க்ஷணமே உபயோகித்தால் அது விஷமித்துத் தீமையையே பயக்கும். அவ்விதமே பத்து வருஷங்கட்குப் பிறகு சொல்ல வேண்டிய பதில் வார்த்தையை ஆத்திர சிந்தையுடன் இப்பொழுதே கூறினல் வீணக நாம் தாக்கப்படுவோம். உதாரணமாக, ஒருவர் காலகதியால் வறுமைப்பட்டுத் தன் குமாரனைத்

தன் தங்கையிடம் அனுப்பிவிடுகிறார். அந்தத் தங்கை வீட்டிற்கு வரும் ஒரு குண்டோதரன் இச்சிறுவனை நோக்கி, "ஏனடா! உன் அப்பன் வீட்டில் கிடக்கிறதுதானே; இங்கே உனக்கு ஆக்கிப்போடக் கொட்டியா வைத்திருக்கிறது?" என்று இழிசொல் புகன்று தன்னைப் பெருமையில் உயர்த்திக் கொள்கிறான். தங்கையோ தன் தமயனைத் தாழ்த்தித் தன்னை உயர்த்தி அவன் பேசினானென்று மகிழ்ந்து கொள்கிறாள். இவ்வித சந்தர்ப்பத்தில் பதில் சொல்லாமலிருப்பதே மேல். பிறகு பத்து வருஷங்கள் பறந்துவிடுகின்றன. சிறுவன் பெரிய உத்தியோக பதவியில் வாழ, கைம்பெண்ணாய்விட்ட அவனது தந்தையின் தங்கையோ இப்பொழுது அவனுடைய ஸம்ரக்ஷணையில் ஏழையாய்க் காலந்தள்ளுகிறாள். அந்த சமயத்தில் முன் சொன்ன குண்டோதரன் அங்கு வரவும், பத்து வருஷங்கட்கு முன் அவனுக்குச் சொல்ல வேண்டியிருந்த பதிலை இப்பொழுது சொல்லத் தொடங்கி, ஈன மனிதனே! பத்து வருஷங்கட்கு முன் என்னை நீ கேவலப்படுத்திப் பேசினாய்; உன் அப்பன் வீட்டில் கிடக்கிறதுதானே, இங்கே உனக்கு ஆக்கிப்போடக் கொட்டியா வைத்திருக்கிறது என்றாய்; அதற்குப் பதில் சொல்ல அப்பொழுது நான் சரியான நிலையில் இல்லை; இப்பொழுது அதற்குப் பதில் சொல்லுகிறேன்; நான் என் தந்தையின் தங்கையான சொந்த அத்தை வீட்டிற்கு வந்தேனே தவிர அன்னியரின் வீட்டில் தங்கவில்லை; அவ்விதமிருக்க தெருவில் போகிற ஒரு அன்னிய நாயான நீ என்னை இழிவுபடுத்திப் பேச உனக்கு என்ன உரிமை இருக்கிறது? சீ! கேடுகெட்ட மிருகமே! வெளியே போ என்று காரியுமிழ்கிறான். இதைக்கேட்ட குண்டோதரன் மௌனமாய் வெளியில் சென்றுவிடுகிறான். அத்தையும் இவற்றைக் கேட்டுவிட்டு ஜாடையாய் இருந்து விடுகிறாள். இவ்விதமே நாமும் இப்பொழுது சொல்ல வேண்டிய பதிலை அடக்கி 10-வருஷங்கட்குப் பிறகு கூறினாலோ, அப்போது நமது நிலைமை இன்று எதிர்ப்போரது நிலையினும் உயர்ந்திருக்கக் கூடுமானதால், அப்பொழுது நாம் சொல்லும் பதிலைக் கேட்டு அவர்கள் எதுவும் நம்மைச் சொல்ல முடியாது. நமது சிறு விரலைக்கூட அப்போது அசைக்க முடியாது. அந்தக் காலம் வரும் வரையில் நாம் பொறுமையாய் சகித்துக் காத்திருப்பதே பிறரது எதிர்ப்பை நாம் வெற்றிகொள்ள வழி" என்று உலக்கைச் செட்டியார் உரைத்தார். இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

'பகதூர்' பொன்வண்டு செட்டியார்.

தனக்கு மனைவி என்று நிச்சயமாவதற்குள்ளாகச் சிலர் மனைவி என்று எண்ணிவிட்டு அவளை அதிகாரங்கள் செய்யத் தொடங்கிவிடுகின்றனர். இத்தலைகயோரின் குணம் முதலிலேயே தெரிந்துவிடுவதில் பெண்ணை வேறிடத்தில் கொடுக்கும்படியாகி இவர்களும் ஏமாறுகின்றனர். மணமேடையில் தன் பக்கலில் உட்காரினுங்கூட, மாங்கல்யமான பிறகுதான் நிச்சயம். அதன் மத்தியில் உறுதி சொல்வதற்கில்லை.

ஆரூவது வருடம்

ஆசிரியப்பா.

தமிழ்க்கடல் வந்த அமிழ்தினும் இனிய
அமிர் தகு ஞபோதினி ஐந்தாம் ஆண்டை

அன்பர் தமாசியால் இன்பமாய்க் கழித்தே
இனியவள் ஆரும் இளவய தாகிருள்

ஒப்பிவட் குண்டோ இப்புவி தன்னில்?
இப்படிப் புதினம் இதுவரை காணலே;

கற்றவ ரோடு மற்றவர் யாரும்
இற்றைய நாளில் இரும்பயன் பெறவே

அரும்பொருள் பலவும் அதிகமாய் மலிய
வருமோர் புதினம் வேறில ஈ—தலால்;

வளர்மதி போல வருடந் தோறும்
வளருமிவ் விதழும் மதிதோறும் பக்கம்

எண்பது கொண்டே திண்ணமாய் விளங்கும்
இதனைப் புரக்கும் இதமார் கடனை

முன்போல் நாமும் மனதில் கொண்டே
அன்னதற் காகும் அணுபதி ஞரையும்

இன்றே செலுத்த இசைவோம் இனிதே!
இன்றே செய்தலும் ஏற்புடைத் தாகும்;

ஆளுக் கொருவர் அன்பாய்த் தந்தால்
மேலும் இதற்கு மேன்மை மிகுமே!

அதற்குறு மேன்மை அனைத்துமே நமக்காம்
அதனல் நாஞ்செய் ஆய்தமிழ்க் கடனும்

ஆகுவ தொன்றும் ஆதலின் நாளே
ஆகுமுன் நாமெலாம் அதற்காஞ் சந்தா

இன்னே தந்து இசைவாய்
பொன்னே போன்ற போதினி பெறுவோம்!

மு. துரைப்பிள்ளை.

விவேகம்
விநோதம்
விசித்ரம்
விகடம்

விகடப்பிரதாபன்

அநுபவம்
அற்புதம்
ஆச்சரிய
ஆநந்தம்

REGISTERED TRADE MARK

முற்கால தற்காலத்திய ரூபாய்கள்!



கல்வியிலும், நாகரீகத்திலும் கால்தலை தெரியாமல் உயர்ந்துபோன என்னூர் கருப்புத் துரைகளுக்கு, கைக்கு வெகு அடக்கமாகவும், பாக்கெட்டில் வைக்கப் பசுர்தாகவும், எடுத்துக் கொடுக்க எத்தனையோ லேசாகவும், எழுந்து போகாமலே எழுதித் தருவிக்க இயன்றதாகவும்—இப்படிப் பல சௌகரியங்களுக்கு ரூபாய்கள் எல்லாம் நோட்டுகளாகவும், செக்குகளாகவும், போஸ்டல் ஆர்டர்களாகவும் ஏற்பட்டு வெகு விசித்திரமாகச் செலாமணியாகி வருகிற இந்தக் காலத்திலே ரூபாய்களுக்கு என்ன கெடுதல் வந்து புகுந்து விட்டது?—முத்திரை பிசகிப்போய் விட்டதா? முகம் ஏதேனும் கோணிக்கொண்டதா?—அல்லது சில்லரை குறைவாகி விட்டதா?—செல்லாமல் போய்விட்டதா?—அல்லது மஞ்சள் காசு மஹா ஆத்தாளாகிய பவுன் தேவி ஏறுவதும் இறங்குவதும், உயர்வதும் தாழ்வதும் கோணுவதும் போல ஒரு நிதான விலையில் இல்லாமல் கிடக்கிறதா?—அல்லது பவுனை வாங்கி உடனே அதன் அழகிய உருவைக் குலைத்து வேறு நகையாக்கி விடுவதுபோல் ரூபாய்களுக்கு ஏதேனும் சனியன் பிடித்துவிட்டதா?—எந்த நாளும் வெள்ளி எட்டு அணா ஒன்பது அணாவில் நிற்கச்சே, அதே வெள்ளியான ரூபாயை நஷ்டப்பட்டு உருக்குவோர் எவரும் கிடையாத போது, ரூபாய்க்கு என்ன நோவு வந்து பொத்திக்கொண்டது?—முன் காலத்தைப் போலவே தற்போதும் ஒரு ரூபாய்க்குப் பதினாறு அணா தானே கொடுக்கிறார்கள்?—அறுபத்து நாலு காலணாக்கள், அல்லது நூற்றுத் தொண்ணூற்றிரண்டு காசுகள் எப்போதும் போலவே தானே கிடைத்துக்கொண்டிருக்கின்றன?—அப்படியிருக்க, என்னமோ ரூபாய்க்கு வித்தியாசம் காட்ட இந்த நரைத்த தலையான விகட தாதா இதையொரு பெரிய வேலையாக எடுத்துக்கொண்டானே—என்று என் விகட குட்டிக் குழந்தைகள், பிஞ்சுகள், பெரியதுகள் எல்லாம் நினைத்தில் நினைக்கலாம்!

ஃ

அடங்காத கொடிய மனைவியாலேயே ஷேக்ஸ்பியர் பெரிய அநுபவக் கடலானார். அவர் பலவகையிலும் அறிந்தது பாதி; மனைவியின் கொடிய வாத்னையில் அறிந்தது பாதி.

விகடன் சொல்ல வந்தது அந்த வித்தியாஸமல்ல. சற்று கிதானித்துப் பார்த்தால் கொள்ளைக் கண்ணுக்குக்கூட நோட்டம் தெரிந்துவிடும். முற்காலத்திய ரூபாய்கள் பழய உருவே யடைந்திருந்தாலும், இப்பொழுது வெகுவாக மதிப்பு குறைந்துபோய் தன் பேருக்கே ஒரு கௌரவமில்லாமல் உபயோகப்பட்டு வருவதைக் காணலாம்! எப்படியென்றுலோ, முன்னெல்லாம் ஒரு ஏழைக் குடும்பத்தினர் ஒரு ரூபாயை மாற்றினுல் அது சில்லரை சில்லரையாக சுமார் நாலைந்து நாட்கள் வரையில் அந்தக் குடும்பத்தில் நடமாடிக் கொண்டிருக்கும். ஒரு ரூபாய்க்கு 192 காசுகளாச்சுதே! கை நிரம்ப இருந்து எத்தனையோ செலவுகளுக்கு வெகு தாராளமாக உதவுமே! ஒரு வீட்டுக்கு ஒரு காசு மோரு போதும். ஒரு காலணுவுக்கு மூணு தோசை பெரியவாளுக்குப் போதும். சிறிசுகளுக்கு ஒரு காசு தோசை போதும். கால்படி பால் அரையணு. கால்படி வெண்ணெய் நாலு அணு. காய்கறிச் செலவு காலணுவில் அடங்கிவிடும். இன்னும், காலணுவுக்கு ஐந்து அம்மன் காசுகள் கிடைக்கிற புதுக்கோட்டை சமஸ்தானத்திலே ஒரு சிறு அம்மன் காசுக்கும் ஒரு தோசை, ஒரு காய்கறி, ஒரு பக்ஷணம், முறுக்கு வடை, சுண்டல், மூக்குப் பொடி, சுருட்டு, கருவாடு, வெற்றிலைப் பாக்கு இன்னும் எவ்வளவோ வாங்கிவிடலாமே! இப்படியாக அந்த ஒரு வெள்ளி ரூபாய் எத்தனையோ நாளைக்குக் கையிலே இருந்து பல செலவுகளுக்கும் உபகாரப்பட்டு லக்ஷ்மீகாமாய் விளங்கிற்று. அரண்மனைச் சேவகருக்கு ஐந்து ரூபாயே சம்பளம். மூணு ரூபாயில் எல்லா செலவும் போக, மாதம் இரண்டு ரூபா மிச்சப்பட்டுவிடுமே! இப்படியான அபூர்வ விசேஷங்கள் படைத்த அந்த அழகான பளபளப்பு ரூபாய் இப்போதோ ஒரு நாள் முழுதுங்கூட, ஏன், ஒரு மணி நேரத்திற்குங்கூட செலவு செய்யக்கூடிய நிலைமையில்லாமல் வெகு பலவீனப்பட்டு அன்றைக்கே, அந்த ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே, அப்பொழுதே குறைந்து மறைந்து அழிந்து மாயமாய் விடுகிறது! ஆகவே, ரூபாய்களுக்குப் பஞ்ச நோய் பிடித்திருக்கிறதா, அல்லது பலவீனப்பட்டிருக்கிறதாவென்று அதன் நாதுவைப் பார்த்து சோதித்ததில் பலவீனந்தான் என்று தெரிந்ததால், ஏதாவது மன்மத கோலாகல மஹா சிட்டுக்குருவி தாது புஷ்டி லேஹியம் செய்து இந்த ரூபாய்களுக்குக் கொடுக்கலாமாவென்று விகடன் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!

ஃ

இது மாத்திரமா? ரூபாயை முன்னுளில் கவனித்த கவனிப்புக்கும், இப்போதைய கவனிப்புக்கும் எவ்வளவோ பேதம் இருக்கிறது. முன்னெல்லாம் ஒரு ரூபாய் ஒருவனிடத்தில் இருக்குமானுல், அதை எவ்வளவோ பயபக்தியுடன் வைத்துக் கொள்வான். அந்த ரூபாய் தப்பித் தவறிக் கீழே விழுந்து விடுமானுல் உடனே அதை எடுத்து அதைக் கண்ணில் ஒத்திக்கொள்வதும் முத்தம் கொடுப்பதுமான அவ்வளவு மதிப்பு படைத்திருந்தது. பழய நாளில் ஒரு சிறு பணமான இரண்டணுவுக்கு, அது ரூபாயின் எட்டில் ஒரு பங்கு என்று எவ்வளவோ சிலாக்கினை கொடுக்கப்பட் டிருந்தது. தனது விவாக காலத்தில் ஒருவன் தன் ஸகோதரிகளுக்கு ஒற்றைப் பணத் தாம்பூலம் வைத்து அழைப்பது வழக்கம். அதாவது, தாம்பூலத் தட்

டில் சிறு பணமான இரண்டணாவை வைத்துக்கொடுத்து விவாகத்திற்கு அழைத்தால் அதை எவ்வளவோ பெரிய கௌரவமாக நினைத்துக் கொள்வார்கள். எனக்கு (ஒற்றைப்) பணத் தாம்பூலம் வருமென்று எத்தனையோ உயர்வாகப் பேசிக் கொள்வார்கள். அத்தகைய மரியாதைக்கு இப்பொழுது ஒரு ரூபாயை வைத்து அழைத்தாலும் அதற்கு மதிப்பு ஏற்படக் காணோம்! ஃ

ரூபாய்களுக்கு இன்னும் ஒரு கேவலம் ஸமீபத்தில் வந்தது. அது காகித ரூபாய்கள்தான்! அது வந்ததும் ஏற்கெனவே அலக்ஷியமாக வழங்கப்பட்ட ரூபாய்களுக்கு இன்னும் அதிக அலக்ஷியம் ஏற்பட்டு விட்டது! காகித ரூபாய்கள் காற்றில் பறந்தன. கொஞ்சம் எண்ணெய் அழுக்குப் படிந்துவிட்டாலோ அதை எப்படி மாற்றுவதென்கிற எண்ணமே பெரிதாகி ஒருவனை மற்றொருவன் ஏமாற்றிக் கொடுத்துக் கழிக்கவேண்டிய கபடத்தில் நட்டுக் கொண்டது. குழந்தைகளின் கையில் அந்தக்காகித ரூபாய் அகப்பட்டுக்கொண்டு குழகுழத்துப்போனது எத்தனையோ! மடியில் வைத்தால் மடங்கிப் போக, வியர்வை பட்டாலோ வீணாகி நாசமாக, வெகு பாடான பாடாக இருந்தது. நல்ல காலமாய் அந்தக் காகித ரூபாய்களும் ஒழிந்து தொலைந்து ஓடிவிட்டன! ஃ

ஒன்றால் ஒன்று குறையில்லை, முன்னால் கட்டத் துணியில்லை என்பதுபோல, இந்த ரூபாய்கள் முன்னைவிட இப்பொழுது அதிகமாகக் கையில் வருவதாகஇருந்தாலும், முன் காலத்தில் இரண்டு அல்லது மூன்றணாவால் நடந்த காரியம் இப்பொழுது ஒரு ரூபாய் கொண்டும் நடத்தக்கூடவில்லை. வாங்கின சாமான்களோ கூடை நிரம்பவில்லை. செலவிட்டதோ ஒரு ரூபாய்க்கு மேலும் ஆகிவிடுகிறது. இருபது ரூபாய் சம்பளக்காரனென்றால் எவ்வளவோ கனத்த மரியாதை. அவனுக்கு மகாராஜனும் தன் வீட்டுப் பெண்ணைக் கொடுக்கத் தயாராகி விடுவான். இப்பொழுது ஐம்பது ரூபாய் சம்பாதித்தாலும் பழய நாள் மதிப்பைக் காணோம்! பழய காலத்தைப்போல நாலு நகைநட்டுகள் வீட்டுக்காரிக்குச் செய்துபோட வழியும் காணோம்! பேரு பெத்த பேரு! தாக நீளு லேது என்ற தெலுங்குப் பழமொழிபோல், பெரிய சம்பாதனைக்காரன் என்ற பெயரேயன்றி வருகிற ரூபாய்கள் வீட்டுச் செலவுக்கே போதுமானதாகக் காணோம்! பருத்திச் சேலைக்கு இருந்த மதிப்பே பறந்துவிட்டு இப்பொழுது பட்டுச் சேலையிலும், போலிப் பட்டுகளிலும் பாவையருக்கு மனம் பாய்ந்துகொண் டிருக்கிறது! இதிலே ரூபாய்கள் 30-40-50-100 ஆக ஒருநிமிஷத்தில் துள்ளிக் குதித்து ஓடி விடுகின்றன. பழய நாளில் வீட்டுக்கு வரும் விருந்தாளிகள் காலையில் பழய சோறுதான் பலகாரமாகக் கண்டார்கள். காப்பியும் இல்லை! அரைப்பியும் இல்லை! இந்த நாளிலோ அட ஆண்டவனே! எல்லோரும் பலகாரம் காபியிலே மாறிவிட்டிருக்கிறார்கள்! அவரவர்கள் வீட்டில் உண்பது கூழாயினும், பிறர் வீட்டில் இட்டிலி தோசை உப்புமா காபிக்கே எதிர்பார்க்கிறார்கள்! நல்ல மத்தியான நேரத்தில் வெயில் சுடும்போது சென்றாலும்கூட, போன இடத்திலே

சிலர் பிராது குழந்தைகளைக் கண்டித்து அடக்கவேண்டுமென்று பிரமாதப் பிரசங்கம் செய்து விட்டுத் தங்கள் குழந்தைகளை அடங்காத—வர் சுற்றும் தடிக்கழுதைகளாக்கி விடுகிறார்கள்.

"காபி சாப்பிடுங்களேன்" என்கிறார்கள்! எல்லாரும் தேவேந்திர போக வாழ்வில் மிதப்பதாக நடிக்கிறார்களே தவிர, உள்ளுக்குத் தரித்திரம் பிடுங்கித் தின்கிறது ஐயனே! செழிப்பு காணோமேயப்பா! ரூபாய்களைக் கேவலப்படுத்தப் போய், அவ்விதம் கேவலம் செய்து வீணான விருதாச் செலவுகளில் அழித்துவிடப் போய், குடித்தனத்துக்கே பெரிய அவதியாக முடிந்து விட்டிருக்கின்றது! நாலு பேரை, ஏழை எளியவர்களைத் தன் குடும்பத்துடன் வைத்துக் காப்பாற்றும் சக்தி பழய நாளில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் இருந்தது. இப்பொழுதோ அவனவன் தனிக்குடித்தனம் செய்யத் தலைப்பட்டுக் கொண்டு, அவனவன் செலவுக்கே போதும் போதாததாகித் திண்டாட்டமாடும் நிலையில், ஒரு விருந்தாளி வந்து குந்திவிட்டால் அது பெருத்த பாரமும் பெருமூச்சமாகி விடுகின்றது! இத்தனைக்குங் காரணம் ரூபாய்களுக்கிருந்த சக்தி குறைந்துவிட்டதினாலேதான்! கைக்கு வந்ததும் ஒரு ரூபாய் ஒரு நிமிஷத்தில் ஓடிவிடும் ஓடுகாலித்தனத்தால்தான்! என் செய்கிறதடா அப்பா! ஃ

முன்னெல்லாம் ஒரு குடும்பஸ்தன் தான் முப்பது நாளும் உழைத்து முதல் சம்பளம் வாங்கி வீட்டிற்கு வந்தானானால், அந்த சம்பளத்தொகையை நடுவீட்டில் சாமிமுன்னே வைத்துக் கற்பூரம்மேற்றி தூபதீபங் காட்டி, தெய்வத்துக்கு இரண்டாவதாக அந்த ரூபாயை அவ்வளவு பூசிதமாக எடுத்துப் பெட்டியில்வைத்து வெகு பத்திரப்படுத்தி செலவுசெய்து வருவான். இக்காலத்திலோ இந்த ஆசார பூஜைகள் அடியோடு பறந்து விட்டன! இவ்விதம் பாடுபட்டுத் தேடிய பணத்தைப் பூமியில் புதைத்து வைப்பதும் பழயகாலத்தில் ஒரு வழக்கமாக இருந்திருக்கவேண்டும். அதனால் தான் ஔவைப்பாட்டியும் "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்து" என்று பாட்டும் பாடினாளாக்கும்! இப்பொழுது புதைத்து வைக்கவும் கெதியில்லை; சேர்த்து வைக்கவும் விதியில்லை; சிக்கனத்திலும் மதியில்லை; பின்னுக்கு உதவுகிற எந்த நிதியுமில்லை. வீட்டுக்காரன் கண் மூடிக்கொண்டவுடனே அந்தந்தக் குடும்பமும் காலைக் கிளப்பிக் கொண்டு நடுத்தெருவுக்கு வந்து விடுகிறது! ரூபாய்களை மதிப்புடனே காத்தும் பத்திரப்படுத்தியுமிருந்தால் குடும்பம் இப்படி ஆகுமா? வேகுமா? நோகுமா? போகுமா? கணவன் உயிருடன் இருக்கும்வரைக் கண்டபடி செலவுகள் செய்ய நிர்ப்பந்தித்து அவனை வாட்டி வதைத்தால் அதன் கடைசி முடிவு இதுதான்! ரூபாயை ரூபாயாக மதிக்காதவர்களை, அந்த ரூபாயும் அவர்களை மதிப்பாக மதிக்கிறதில்லை; அவர்களிடம் தங்கியிருப்பதுமில்லை. ஃ

ரூபாய்களுக்கே வலுக்குறைந்து இந்தக்கதியானால், இந்த ரூபாய்களின் வயிற்றிலே பிறந்த பெரிதும் சிறிதுகளுமான துட்டு துக்காணிகளின் சீரும் சிறப்பும் மகிமையும் மதிப்பும் எவ்வளவு இருக்கலாமென்று என் நஞ்சான் குஞ்சான்களே யோசித்துப் பார்த்துக் கொள்ளட்டும். அட ஆண்டவனே! தம்பிடி என்கிற நாணயத்

முதலில் முயற்சிக்கு இடையூறாக நேரிட்ட தடைகளே முடிவில் அம்முயற்சிக்கு அனுகூல சாதனங்களாய் விடுகின்றன. பெண் தரக்கூடாதென்றவர்களே அப்பெண்ணை அவன் மணந்த பின்பு அவனுக்கு நெருங்கிய உறவினராகிறார்கள்.

இற்கே இப்போது அவ்வளவாக வேலை யில்லை! அந்தத் தம்பிடிதன்னோடு இன்னும் இரண்டு தம்பிடிக் காசுகூட கூட்டிக்கொண்டு போனால் தான் கடைக்காரர்கள் கைநீட்டி வாங்குகிறார்கள்? ஒத்தைத் தம்பிடிக்கு சொத்தைப் பாக்கு, சொத்தை வெற்றிலை கூடக் கிடைப்பது அரிதாக இருக்கிறது, காலணாவுக்காவது மதிப்பிருக்கிறதாவெனில் பெரிய நாகரிக காபிஹோட்டல்களில் காலணா எடுபடுவதே யில்லை! காலணா தபால் கார்டு என்பது எந்த யுகத்திலோ கேட்ட பழய சப்தம்போல் காதில் படுகிறது! காலணா காய்கறி வாங்கினால் ஒரு வயிற்றுக்குக் கூடப்போத வில்லை! அரையணாவுக்குக்கூட மகத்துவம் மண்ணாகிப்போய் இப்பொழுது எடுத்ததற்கெல்லாம் ஒரு அணா நாணயத்தையே தூக்கிக்கொடுக்க வேண்டியதாகி விட்டது! இந்த ஒரு அணாவும் போதாமல் அரைக்கால்—கால்—அரை—ரூபாய்களாகவுமே செலவாவதாய் இந்தக் காலத்தின் கூத்து வெகு வேடிக்கையாய் விட்டிருக்கிறது. ஈசனே! இது உன் கூத்தா? அல்லது மனிதர்களின் கூத்தா?

ஃ

ரூபாய்கள் இவ்வளவு வேகமாக உருண்டுகொண்டு போக, அதைத் தேடுகிறதோ அப்பப்பா பெரிய பாடான பாடாக இருக்கிறது! பி. ஏ. எம். ஏ. பட்டங்கள் பெற்றுவிட்டு வெகுபேர் வேலைகிடைக்காமல் சிலைப்பேன் குத்துகிறார்கள்! அந்தந்த உத்தியோகஸ்தன் அவனவன் வகையாருக்குக் காலியான இடங்களைக்கொடுத்து வேலையிலமர்த்தி விட்டு, வெளியாருக்குக் "காலியில்லை" என்று பதில் எழுதி விடுகிறான்! வேலை கிடைக்காத கன்றாவி பெரியதான பாதவிப்பே! ஒரு ரூபாய் தேடுவது குதிரைக் கொம்பா யிருக்கிறது; அது செலவழிவதோ நிமிஷக்கணக்கில் நிற்கிறது! ஹா! இதென்ன சோதனையோ! இந்தச் சோதனை நாளிலும் சிலர் வெகு பணக்காரர்களாய் நிமிர்ந்து நீட்டுகிறார்களே;—அவர்களுக்குப் பணம் அதிர்ஷ்டத்தால் சேருகிறதாக்கும்! ஃ

ஊர் எங்கும் மடமாகத்தான் இருக்கிறது, தங்குவதற்குத்தான் இடத்தை காணோம் என்பது போல, எவரைப் பார்த்தாலும் பசுமையாய், பளபளப்பாய் பரவசத்துடனே காணப்படுகிறார்கள். அவர்களின் வீட்டுக்குள் நுழைந்து பார்த்தால் காடிக் கஞ்சியை மூடிக் குடியடி என்ற கதையாக உள்ளிருக்கிற நாற்றத்தை மறைத்து வெளிக்கு வேஷ நடிப்பு போடுவதாகவே காண்கிறது! எத்தனையோ வருஷங்களாகச் சம்பாதிக்கிறான்; அவன் கையிலே மூணு துட்டு நிலைத்து நின்று அது ஒரு சொத்தாகக் காணோம்! சொத்துள்ளவனுக்கும் தனக்கு இருப்பதில் திருப்தி காணோம்! சொத்துக்கு மிஞ்சி கடன் ஏறி கும்மா குத்து கொடுத்துக்கொண்டிருக்கிறது! கடைசியில் எல்லாத் திட்டுக்கும் ஒரே முழுக்காகக் கடன் ஜெயிலுக்குப்போய் வந்து விடுகிறான்!

ஃ


என்ன காரணத்தினால் இவ்விதம் காலம் தலைகீழாக மாறி யிருக்கிறதென்று விகடன் முக்கிமுக்கி யோசித்ததில் என் விசித்திர மூளைக்கு ரூபாய்களுக்குள்ள கௌரவமும், மதிப்பும், பூஜையும் போய்விட்டதினாலேதான் என்று தோன்றுகிறது! ஆனாலும்,

ஒரு தந்தை தன் பெண்ணுக்கு முதலில் அடிமை. பிறகுதான் குமாரனுக்கு அடிமை. குமார்த்தியின் சங்கதிதான் முன்னே கவனிப்பில் நிற்கும்.

இப்போதைக்கு செல்லும் தானிய விலைகளும் இறங்கிப்போய், ரூபாய்க்கு மூணு படிவிற்ற அரிசி நாலரை, நாலேமுக்கால், ஐந்துபடிக்கு மேலும், கால்படி ஒன்றேமுக்காலணுவுக்கு விற்ற கோதுமைரவை ஒன்றேகாலணுவுக்கும்—இப்படியாக விலைவாசிகள் சயத்துப்போய், நெல் மண்டிக்காரனும் நெல் வேண்டாம், இருக்கிற நெல் விற்கட்டுமென்று சொல்லுகிற நிலைக்கு வந்திருப்பதிலே, இந்த சமயத்துக்கு ரூபாய்களும் நமது கையில் கொஞ்சம் அதிகநேரம் தங்கியிருக்கலாமென்றே விகடன் நினைக்கிறேன். என்றாலும், இந்த மலிவுச்சங்கதி ஒரு நிச்சயமல்லவே! ஆகவே அந்தந்தக் குடும்பங்களிலுள்ள அம்மா அய்யாக்கள் வெறும்வீண்டம்பாச்சாரித்தனங்களை நீக்கி, சிகோய்த்தலுக்குப்பதில் இலுப்பைக்கட்டியை வாங்கியரைத்து, இப்படியே ஒவ்வொரு வீண் செலவையும் சுருக்கிச் சிக்கனக் கையோடு ரூபாய்களை முடிபோட்டுக் கையை மூடிக்கொண்டு வாழப் பார்த்தால் ரூபாய்களும் அவர்களிடம் தங்கியிருக்க ஸந்தோஷப்படும். இவர்களும் ரூபாய்களைப் பார்த்து ஸந்தோஷப்படலாம்! அவிழ்த்துக்கொடுக்கிற பணத்தின் அருமை தெரிந்து செலவுபண்ண வேண்டும். ரூபாயின் அருமையைப் போலவே, அதைக்கொடுத்து வாங்கிய பொருளும் அருமையானதாகவே இருக்கிறதாவென்றுகண்டறிகிறதான புத்தி நுட்பமும், விவேக விசாலமும் வேணும். அருமையான அந்த ஒரு ரூபாயை "அமிர்த குணபோதினி"க்குக் கொடுத்தால், வருஷ முடிவில் ஆயிரம் பக்கங்களுள்ள—அழகான அரிய புஸ்தகம் ஆசையோடும் கிடைத்துப், பின்சந்ததியாருக்கும் பெரிய குடும்பச் சொத்தாகிறது. அப்படியாக ஒவ்வொரு ரூபாயையும் அதற்குச் சரியான பிரயோஜனப்படக்கூடிய விஷயத்தில் செலவிட்டால், கொஞ்சம் ரூபாயிலேயே குடும்பச் செலவை நடத்திக்கொண்டு, கையிலே மிச்சப்பட்ட பணத்தைத் தபாலாபீஸிலே ரொக்கஸர்டிபிகேட்டு வகையிலே போட்டுச் சிறுகச் சிறுகச் சொத்து சேர்த்துக்கொண்டே போகலாம்! ரூபாய்களுக்கு மதிப்பு கொடுக்கிறதும், அதைச்சேமித்துக் கண்டபடி செலவிடுவதும் அந்தந்தக் குடும்பத்து அம்மா—அய்யாக்களின் சிக்கனக் கையிலே இருக்கிறதென்று விகடன் நினைக்கிறேன்! அதிகச்செலவு செய்து அதில் பழகிவிட்ட—நல்ல நாக்குருசி கண்ட நம்ம அய்யா—அம்மாக்கள்மார் எப்படி நினைக்கிறார்களோ! ரூபாய்களை மதித்தால் வாழ்வு! அதை மிதித்தால் தாழ்வு! கேட்டால் கேளுங்கள், பிறகு உங்கள் இஷ்டம் என்று விகடன் என் கோணத்தடியைத் தூக்கிக்கொண்டு, ஆறும் வருடத்திய புது சந்தாவின் ரூபாய்களை முத்தமிட ஆவலோடும் எதிர்பார்த்துக்கொண்டு நிற்கிறேன்! அடுத்த பிரஜோற்பத்திப்புது ஆண்டிலே எல்லோரும் நற்பிரஜைகளை உற்பத்தி செய்து வீடுநிறைய நிறைத்துக்கொண்டு பால் சட்டியோடு மங்களமாய் வாழ்வாராக ராம்! ராம்! சுபம்! ஶு! சுவாஹா!!

தரித்திரம் துர்க்கதியே யல்ல; ஆனால், தரித்திரன் ஆண்மையுடன் ஆமளவிற்கு முயற்சி செய்தவரில், அத்தரித்திரம் அவனுக்கு அரியவரப் பிரசாதமானாலும் ஆகும்; அஃது உலகத்துடன் போராடுவதற்கு ஒருவனை உற்சாகப்படுத்தி எழுப்பிவிடும்.

ஆசை பெருகப் பெருகத் தீரம் உண்டாய் எடுத்த கருமத்தைச் சித்தம் சலிக்காமல் தொடுத்துச் செய்ய முடியும்.



அவன் அல்பனென்று இவன் நினைக்க, இவன் நல்பனென்று அவன் நினைக்கிறனும்! ஃ

முதல் தடவை ஏமாற்றினாலும் இரண்டாம் தடவை ஏமாற்ற முடியாதாம்! ஃ

சொக்கலிங்கம் என்பதை இங்கிலீஷில் எப்படிச் சொல்வதென்று ஒரு கிராமவாஸி கேட்க, இங்கிலீஷிலும் அதே மாதிரி தானென்று ஆங்கிலம் கற்றவர் கூற, அதற்குக் கிராமவாஸி உனக்குத் தெரிந்த இங்கிலீஷ் இவ்வளவுதானு என்று பழித்தானும்!

ஃ

வீடுகளுக்கு வேண்டிய ஓடுகள்:— ஆமை ஓடு, நண்டு ஓடு, நத்தை ஓடு, கிளிஞ்சல் ஓடு, மண்டை ஓடு, ஓட்டையோடு, இரட்டையோடு, முட்டையோடு, மூளியோடு, அறையோடு, அவனோடு, அவளோடு, உன்னோடு, உலகோடு, மாமி மருகனோடு, தேரோடு, நீரோடு, ஆணோடு, பெண்ணோடு, மண்ணோடு, குடுமியிலே கையோடு, சட்டியோடு, பானையோடு, மொத்தையோடு—இன்னும் பல தினுசு ஓடுகளும் விற்கப்படும். விலை விவரத்துக்கு ஈரோடுக்கு எழுதிக் கொள்ளவும். ஃ

பெண்களுக்கு வேண்டிய பட்டு தினுசுகள்:—பம்பாய் பட்டு, கல்கத்தாபட்டு, மைசூர்பட்டு, ஜுனுக்கா பட்டு, மினுக்கு பட்டு, சில்க் பட்டு, தளுக்குபட்டு, உடுத்தப்பட்டு, போடப்பட்டு, உயர்த்தப்பட்டு, தாழ்த்தப்பட்டு, உதைப்பட்டு, ஆடப்பட்டு, ஒய்யாரப்பட்டு, அடிக்கப்பட்டு, கடிக்கப்பட்டு, பிடிக்கப்பட்டு, குடிக்கப்பட்டு, படிப்பிக்கப்பட்டு, கற்பிக்கப்பட்டு, வெல்லப்பட்டு, கொல்லப்பட்டு, தள்ளப்பட்டு, உட்பட்டு, வெளிப்பட்டு, மதப்பட்டு, சம்மதப்பட்டு, திருடப்பட்டு, தண்டிக்கப்பட்டு, விசனப்பட்டு, சஞ்சலப்பட்டு, ஆயாசப்பட்டு, நோய்ப்பட்டு, அச்சப்பட்டு, லச்சைப்பட்டு, பழிக்கப்பட்டு, ஏற்கப்பட்டு, தோற்கப்பட்டு, விற்கப்பட்டு, தைரியப்பட்டு, கொடுக்கப்பட்டு, பிரியப்பட்டு, செய்யப்பட்டு, திருத்தப்பட்டு, சோப்பட்டு, வாங்கப்பட்டு, வாசிக்கப்பட்டு, சிரிக்கப்பட்டு, பூரிக்கப்பட்டு, வாழ்த்தப்பட்டு—இன்னும் அநேக விதமான பட்டு தினுசுகள் நமது கம்பெனிக்கு வந்திருக்கின்றன. விலை சரசம். மூந்துங்கள். காலாகோலப்பட்டுவியாபாரி அண்டு கோ.

ஃ

வாங்கின பணத்தைத் திருப்பித் தராமல் விழுங்கிவிடும் அண்ணாத்தைகள் தங்களின் அவசரச் செலவுக்கு நண்பர்களிடம் சென்று ஒரு நிமிஷத்தில் கடன்வாங்கி வந்துவிடுவதாகச் சொல்வது வீண் மயக்கடி வித்தைதானும்! ஃ

தன்னை அந்த முக்கிய வேலைக்கு எப்படியும் வேண்டி அழைக்கக்கூடுமென்று தெரிந்துகொண்டு, அவ்விதம் அழைக்கும் சமயத்தில் அதற்கு இணங்காமல் பிகுவு செய்வது சில குள்ளநரிகளின் வழக்கமாம்!

ஃ

உனக்கும் பேபே, உங்கள் தாதாவுக்கும் பேபே என்று ஊரார் சொத்தை உப்பில்லாமல்தின்றுவிட்டு, உள்ளதையெல்லாம் சுருட்டித் திருட்டுத்தனமாய் முழுப்பூசனிக்காயைச் சோற்றேடே மறைக்கக்கூடிய சமர்த்தர்கள் இப்பொழுது எங்கும்பெருகிப் போயிருக்கிறர்களாம்!



ஹாஸ்ய சஞ்சீவினி



——"உங்களுடன் நானும் பிரயாணம்."

——"டிக்கட்டுக்குப் பணம் இருக்கிறதா ?"

"அவர் போனதும் அனுப்பி விடுகிறேன்."

"என்னிடம் பணம் இல்லை. முடியாது."

———

நந்தன்:—நான் படும் கஷ்டமும், அவமானமும் எவரும் அறியமாட்டார்கள். அது என் தலையெழுத்து.

கந்தன் :—அப்படித்தான் எல்லோரும் சொல்லுகிறார்கள்.

நந்தன் :—அவர்கள் என்போல் பட்டிருக்க மாட்டார்கள்.

கந்தன்:—அப்படித்தான் எல்லோரும் சொல்லுகிறார்கள்.

நந்தன்:—சரி, உன்னிடம் பேசிப் பயனில்லை. நான் படுக்கப் போகிறேன்.

கந்தன்:—அப்படித்தான் எல்லோரும் சொல்லிவிட்டுக் கடைசியில் ஓய்ந்து படுக்கப் போய்விடுகிறார்கள்.

நந்தன் :—உன் வாயாடித்தனம் போதும். தொலைந்து போ.

கந்தன்:—அப்படித்தான் எல்லோரும் என்னைச் சொல்லுகிறார்கள்.

———

கணவன் :—நமது பெண் நம் வீட்டிலேயே இருந்தபோது இத்தனை அழகாயில்லையே. இப்போது புருஷன் வீட்டிற்குப்போய் ஒரு வருஷம்தானே ஆயிற்று. அதற்குள் எவ்வளவு அழகாயிருக்கிறாள் பார்த்தாயா?

மனைவி:—சும்மா சும்மா அவளைப் பார்க்காதீர்கள். கண்ணெச்சில் விழப் போகிறது.

———

—"ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல" என்று எந்த சமயத்துக்குச் சொன்ன பாட்டு அது ?"

—"பணமில்லாத சமயத்துக்கும், தரித்திரம் தாங்காமல் ஊர்விட்டு ஓட்ட மெடுக்கிற சமயத்துக்கும் சொன்ன பாட்டு."

———

வினா :—இரத்தின வைர வியாபாரிகளைப் பார்த்ததும் என்ன தோன்றுகின்றது ?

விடை:—எங்கே மோசம் செய்து விடுகிறார்களோ, எங்கே நாம் ஏமாறிப்போக நேருமோ என்ற கலக்கமே அதிகமாகிறது.

———

வம்பன் :—அதோ போகிறாளே அவளுக்குப் பத்து புருஷர்களப்பா !

(இந்த சமயம் வம்பனின் தங்கை அந்தப் பக்கம் வர அவளைப் பார்த்து)

பொம்மன் :—அடே வம்பா ! இதோ இவளைப் பார் ; இவளுக்கு இருநூறு புருஷர்களப்பா ! பார்த்தால் பூனை; பாய்ந்தாற் புலி.

(இதைக் கேட்டதும் வம்பன் முகம் சுருங்கி ஆத்திரப் படுகிறான்.)

———

பெரியோர்களைப்பற்றி இழிவாக ஸதாகாலமும் உன்னிடம் தூஷிப்பவன், பிறகு உன்னையும் அவ்விதமே பிறரிடம் தூஷிப்பான். அவனுடைய விரோதமில்லாதபடிக்கு மட்டும் பார்த்துக்கொண்டு ஜாக்கிரதையாய்த் தூர நில்.

சுப்பு :—நீ கேட்டதையெல்லாம் அவர் இனமாகக் கொடுத்து விட்டாரே.

குப்பு:—அவர் எனக்குச் செய்த வெகுமதியைவிட, அவர் அதைக் கொடுத்தபோதிருந்த அன்பையே முக்கியமாகக் கவனித்தேன்.

அவன் :—அந்த நண்பர் தமது வாக்கை நிறைவேற்றினரா?

இவன் :—அந்த முக்கியத்தைத் தானே காணேம். வெகு பிரியமாகப் பேசுகிருர். காரியம் மட்டும் நடக்கவில்லை.

கோபு :—ஏது வெளியூரில் பலமாகத் தங்கிவிட்டாயே?

சீனு:— வீட்டுச் சச்சரவுகளைக் காதில் போட்டுக்கொள்ளாமல் ஹாயியாகத் தூர இருப்பதற்குத்தான்; வேறென்ன?

வினு:—இவனும் காசு பறிப்பவனயிருந்து, அவனும் காசு பறிப்பவனயிருந்து இருவரும் ஒன்றுசேர்ந்தால் என்ன நடக்கும்?

விடை :—ஒருவரை யொருவர் ஏமாற்ற முடியாமல் தம் உள்ளத்தை மறைத்து இருவரும்பல்லை யிளிப்பார்கள்.

சுந்தரன்:—ஏண்டிகுட்டி தங்கமே!

சுந்தரி:—ஏண்டா என்னை 'அடி' என்கிருய்? மூஞ்சியைப் பாரு, நீ நாசமாய்ப் போக. ****

வினு:—அந்தந்த சமயம் அகப்பட்டதைச் சுற்றிக்கொண்டு போகிறவர்களில் இருவரைச் சொல்லு.

விடை:—ஒன்று: ஆப்த நண்பர்களாக ஸதா என்னுடன் குலாவிப் பிடுங்கிக்கொண்டு போகிறவர்கள். மற்ருென்று: திடீரென்று பெரிய மனிதளுக இடையில் வந்து அகப்பட்டதை அடித்துக்கொண்டு போகிறவர்கள்.

பத்மநாதன் :—உனக்கு அவர் ரூபாயைக் கொடுத்தபோது ஓ! வேண்டாமென்ருயே? பிறகு ஏன் அதை வாங்கிக்கொண்டாய்?

விஸ்வநாதன் :—எங்கே அதிகமாய் வேண்டாமென்று சொன்னல், கைக்கு வந்தது கிடைக்காமற் போய் விடுமோவென்று உடனே பெற்றுக் கொண்டேன்.

வினு:—எது தவறு? எது தப்பிதம்?

விடை:—சொந்தமருமகள் ஒன்றை உடைத்துவிட்டால் அது தவறுதல். அதையே அன்னிய சம்பந்தமான தூர—மருமகன் உடைத்தாலோ தப்பிதம்.

பொன்னன்:—உனக்கு வந்த கடிதத்திலே நீ உடனே ஊர் வந்துவிட்டு மறுபடியும் உன் உத்தியோகத்திற்குப் போய்விடலாமென்று எழுதியிருக்கிறதே? இங்கே உனக்கு ஒரு உத்தியோகமும் காணேமே?

முனியன்:—அந்த சங்கதி அவர்களுக்குத் தெரியுமா? ஏதோ இங்கு நான் உத்தியோகத்தில் இருப்பதாகவே அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிருர்கள். தூர இருந்தால் எதுவும் ஒரு மதிப்பு தானே?

புகழ்ச் செல்வம் பெற்ருேர் பலரும் தரித்திரர்களாய்ப் பிறந்ததினலேயே ஓயாது உழைத்து முயன்று மேன்மையுற்றுத் திடகீர்த்தி காண்பதாயினர். இவ்விதமின்றி, அவர்கள் தனவான்களாகவே பிறந்திருப்பினே அந்தப் பாக்கியமே பிற்காலத்திய புகழ்ச்சிக்குப் பெருந்தடையாக முடிந்திருக்கும்.

சென்றமாதம்

கணவனோடு வா மறுத்த மனைவியின் கதி!

"கொண்ட பெண்சாதியே கூர் அரிவாளாக இருந்தாள்" என்று சொல்லும்படியாகச் சில பெண்கள் தம் கணவனைமிக எங்கச் செய்து விடுகின்றனர். படாதபாடு படுத்தி விடுகின்றனர். "ஐயோ! இவனை நம்பி என் வாழ்க்கையிருக்கிறதே" யென்று கதற வைத்துவிடுகின்றனர். புத்தியில்லாத இந்தப் பெண்களின் செய்கையை அவர்களின் பெற்றோர்கள் ஆதரிப்பதும், தங்கள் மருமகனைக் கேவலப்படுத்துவதும் இன்னும் கொடுமையிலும் கொடுமையாகும். ஆடவர்கள் வெளியே எந்தப் பாசபந்தமுமில்லாத அன்னியர்களுக்கு உட்பட்டு ஊழியம் செய்து, அவர்களுக்குப் பயந்து நடந்து நாலு காசு வீட்டிற்குக் கொண்டுவர எவ்வளவோ பாடுபடுகிறார்கள். எவ்வளவு உழைத்தாலும் ஒருதினம் வேலைக்குச் செல்லத்தவறினால் அவர்களின் வேலையே தொலைந்துபோகும். இப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தில் ஆடவர்கள் மற்றவர்களிடம் உள்ளடங்கியிருந்து படாத பாடுபட்டு என்னவோ சம்பாதித்துக்கொண்டு வீடு சேர்கிறார்கள். இவ்விதமான பாடுகள் பெண்களுக்குக் கிடையாதே? அவர்கள் தங்கள் மீது பிராணனையுள்ள பர்த்தாக்களுக்குத்தானே பணிவிடை செய்கிறார்கள்? அதில் குறைவு ஏற்பட்டாலும் பர்த்தா மன்னிக்கிறார். இவ்விதமாக இகபரங்களிலும் தம்மோடு ஒன்றுபடுத்தப்பட்டுள்ள பர்த்தாவினிடம் அவரது மனங்குளிர நடந்துகொண்டு செல்வது வெகு சுலபமான வேலையாகவே இருக்கும். பெண்கள் ஆடவர்களைப்போல் அன்னியர்களிடம் ஊழியம் செய்யவில்லையென்பதையும், தங்களை மணந்த பர்த்தாக்களுக்கே தொண்டு புரிகின்றார்களென்பதையும் மனதிற் கொண்டால் தங்கள் வேலை சுலபமாகப் படும். தங்களையே நம்பியுள்ள பர்த்தாக்களை ஏன் மனம் நோகச் செய்யவேண்டுமோ? அதில் வாரிக்கொள்ளும் லாபம் என்னவோ? மதுரையில் 25-வயதுள்ள சுப்பிரமணிய சேர்வை என்பவருக்கு 18-மாதங்களின் முன்பு தான் விவாகம் நடந்ததாம். மனைவியோ திருமங்கலத்தில் தன் தாய் வீட்டிலிருந்து கொண்டு, கணவன் தன்னைப் பலமுறை அழைத்தும் வர மறுத்துப் பிடிவாதம் பிடித்தனளாம். வாலிப மணாளனுக்கு மனசு விட்டுப் போய் மிகப் புண்ணானது போலும்! உடனே மதுரைக்கு வந்து நன்றாக க்ஷவரம் செய்துகொண்டு உடைகளால் தன்னைச் சிங்காரித்து, தன் அழகையும், தன் தலைவிதியையும் பார்த்துவிட்டு வீட்டினுள் தற்கொலை செய்துகொண்டு கடவுளிடம் போய் விட்டானாம். இனி அவன் மனைவியோ? கணவனோடு எல்லா வாழ்வும் போய்விட்டதே! பொற்றலியோடு யாவும் போனமாதிரிதானே! மஞ்சள் குங்குமம் இனி ஏது? முகத்தின் சுமங்கலியழகும் இனி வருவது கிடையாதே! கணவனின் பிரியப்படி நடந்திருந்தால் இப்படி ஆகுமா? அறியாச் சிறுபெண் ஏதோ தெரியாமற் செய்

தாலும் பெற்றோர்கள் திருத்த வேண்டாமா? காரியம் மிஞ்சிவிட்டபிறகு இனி சிந்தித்து ஆவதென்ன?

ஃ

"கோடி சீமான் துணியவேண்டும், அல்லது கோவண ஆண்டி துணியவேண்டும்" என்பது பழமொழியானாலும், அதை நேரில் பார்க்கும்படியாக நமக்கு நல்ல அதிர்ஷ்டம் வாய்த்தது நமது பாக்கியமே. முழங்கால் வேஷ்டிச் சன்யாஸி யொருவருக்கும், ஒரு மகத்தான அரசாங்கத்துக்கும் ஸமாஸப் பேச்சுகள் நடப்பதென்றால், அது இந்த 20-ம் நூற்றாண்டில் நம்பமுடியாத காரியம். ஆனால், நம்பும்படிக் காலம் செய்வித்திருக்கிறது. மகாத்மாஜிக்கும் இராஜப் பிரதிநிதியாருக்கும் நடந்துவந்த ஸமாஸப் பேச்சுகள் பிப்ரவரி 28-ம் தேதியன்று முறிந்துவிட்டதுபோல் காணப்பட்டது. மார்ச்சு 1-ம் தேதி இரவு 9-மணிக்கு மகாத்மாஜி இராஜப்பிரதிநிதியிடம் சென்று இரவு 12-10 மணிக்குத் திரும்பினார். அன்றிரவு ஸம்பாஷணையின் மூலமாக இருவரும் பரஸ்பரம் தாராளமாக விட்டுக்கொடுத்து ஒருவிதமான சமரஸ முடிவுக்கு வந்தனர். பின்பு மார்ச்சுமாதம் 3-ம் தேதி மகாத்மாஜி பகலிலும் இரவிலுமாகத் தொடர்ந்து இராஜப்பிரதிநிதியாருடன் பேசினார். இரவு 1-30-மணிக்கு ராஜிப்பேச்சு உறுதியாயிற்று. 4-ம் தேதி 12-மணிக்கு மறுபடியும் மகாத்மாஜி இராஜப்பிரதிநிதியைச் சந்தித்தார். ராஜியின் ஒப்பந்தம் நிச்சயமாயிற்று. மகத்தான இந்த ராஜிக்காக மகாத்மாஜியையும் லார்ட் இர்வினையும் உலகம் போற்றும். இனி இந்தியாவும் சாத்தியமான வரையில் விடுதலை பெறுதல்கூடும். சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டு சிறையிலுள்ளோர் அனைவரும் விடுதலை கொண்டனர். இவ்வளவும் ஒரு வருஷ காலத்தில் நடந்துள்ள எதிர்பாராத ஸம்பவங்களாகும்.

மகாத்மாஜியின் வெற்றி.

உற்றார்,
பெற்றோர், சகோதரர்
யாவரும் இருக்க, வீடு
வயல் சொத்துகள் இருக்க,
உட்கார்ந்து கவலையற்று உண்
ணும் வாழ்வில் தெய்வம் வைத்
திருக்க, தன் புத்திக் கோளாறி
னால் மூளையில் அதிக பளுவு
ஏற்றிக்கொண்டு, வீண் கவலை
கள் தாங்கி எவரையும் வெடு
க்கு வெடுக்கெனப் பேசி எவ
ரும் விரோதமாகிப் பின் தன்
கதியை நினைந்து நெஞ்சு வேக
முகம் சுருங்கிக் கிடக்கின்றார்
கள் சிலர். ஹா! அவிவேகமே!

ஐந்தாம் வால்யம்

ஸம்பூர்ணம்.

“ அமிர்த குணபோதினி ”

பிரமோதூத வருஷத்திய பங்குனி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்கி.	தமிழ்	வாரம்	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை.
சி	14	1	ச	ஏகா 52-15, உரா 39-4, மீன ரவி 13-54, சூன்யதிதி.
அ-ம	15	2	ஞா	துவா 58-5, ஶ்ரவ 45-59, ஶ்ரவணதுவாதசி.
சி	16	3	தி	திர 60-0, அவி 53-24, பிரதோஷம், அகஸ் 29-50.
ம	17	4	செ	திர 4-23, சத 60-0, சிவராத்திரி, தண்டியடிகள்.
சி-அ	18	5	பு	சதி 11-1, சத 1-10.
சி	19	6	வி	● 17-36, பூட் 8-57. [வியாஸர்.
சி-அ	20	7	வெ	பிர 23-54, உட் 16-27, சைத்ரசுத்தம், யுகாதி, வேத
பி-அ	21 மார்ச் (4-10)	8	ச	துவி 29-42, ரே23-31, மேஷாயனம் 33-20.
சி-பி	22	9	ஞா	திரி 34-39, அசு 29-55, ஜில்காத்மீ 1௳, அகஸ் 30-2.
சி-ம	23	10	தி	சது 38-33, பர 35-13.
சி-அ	24	11	செ	பஞ் 41-7, கிரு 39-17, கிருத்திகாவிரதம்.
சி	25	12	பு	ஷஷ் 42-13, ரோ 41-56, நேசர்.
ம	26	13	வி	ஸப் 41-40, மிரு 42-58, அகஸ் 30-10.
சி	27	14	வெ	அஷ் 39-24, ஆரு 42-19, கணநாதர்.
சி	28	15	ச	நவ 35-29, புந40-3, ஶ்ரீராமநவமி, வைரமுடிகவீந்திரர்.
சி	29	16	ஞா	தச 30-2, பூச 36-16, அகஸ் 30-16, தசமிதிதி, மூனை [யடுவார்.
சி-ம	30	17	தி	ஏகா 23-6, ஆயி 31-11, திதிவயம். [அறுபத்துமூவர்.
சி	31	18	செ	துவா 15-5, மக 25-0, பிரதோஷம், திரயோதசிதிதி,
அ	1	19	பு	திர 6-31, உப 51-3, பூர 18-15, பங்குனி உத்திரம்,
ம-சி	2	20	வி	○ 48-42, உத் 11-14.
அ-சி	3 ஏப்ரல்	21	வெ	பிர 40-15, ஹஸ் 4-25, உப 53-46.
அ-சி	4	22	ச	துவி 32-35, ஸ்வா 52-51- காரைக்காலம்மை.
உ-ம	5	23	ஞா	திரி 26-6, விசா 48-58, வாகிசர்.
சி	6	24	தி	சது21-18, அநு 46-40, திதிதுவயம்.
உ-அ	7	25	செ	பஞ்18-15, கேட்46-15, அகஸ் 30-32.
அ	8	26	பு	ஷஷ் 17-14, மூல 47-47.
ம-அ	9	27	வி	ஸப் 18-10, பூரா 51-13, அஷ்டமிதிதி.
சி-ம	10	28	வெ	அஷ் 20-57, உரா 56-21, அதிதி.
சி-ம	11	29	ச	நவ 25-21, ஶ்ரவ 60-0.
சி	12	30	ஞா	தச 30-58, ஶ்ரவ 2-48.
ம	13	31	தி	ஏகா37-19, அவி10-9, மேஷரவி 36-9, அகஸ் 30-42.
சி	14	1	செ	துவா43-54,சத17-54, [பிரஜோத்பத்திஷூத்திரைமீ.

ரா			குரு
ரவி பு சுக்	15உக்கு ராசி.		குஜ
சனி			கே

“ அமிர்த குணபோதினி ” பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை, 1931.